# பொருளியல் நோக்கு

மாசி/ பங்குனி 2012


## நியாயமான,
## மனிதாபிமானமுடைய
## மற்றும்
## நீடித்திருக்கத்தக்க
# பொருளாதார வளர்ச்சி




மக்கள் வங்கி வெளியீடு

# நிகழ்வுக் குறிப்பேடு

பெப்ரவரி, 2012

07 சில வாரங்களாக நிகழ்ந்து கொண்டிருந்த ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் கலகம் ஆகியவற்றைத் தொடர்ந்து, மாலைதீவு ஜனாதிபதி பதவி விலகினார். ஜனாதிபதியாக பதவியேற்ற முன்னாள் உப ஜனாதிபதி வஹீட் ஹஸன் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தப்போவதாக சூளுரைத்தார்.

08 யுத்தக் குற்றம் புரிந்ததாக ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக இலங்கைத் தமிழர்கள் இருவரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நியூயோர்க்கின் தென் மாவட்டத்துக்கான அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடிசெய்தது.

11 பாகிஸ்தானுக்கு விஜயம்செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், பாகிஸ்தான் ஜனாதிபதி அஸிப் அலி சர்தாரியுடன் பேச்சுகளை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின்போது, இருபக்க உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில், இப்பிராந்தியத்திலும் உலகிலும் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் வழிவகைகள் பற்றி இருவரும் ஒருமித்த கருத்தை எட்டினார்.

இக்கருத்தாடல்களைத் தொடர்ந்து, ஊடக ஒத்துழைப்பு, இலங்கைக்கான 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி மற்றும் இரு நாடுகளிலும் இடம்பெறும் தொழிற்பயிற்சிகள் தொடர்பான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இலங்கையும் பாகிஸ்தானும் கைச்சாத்திட்டன.

14 இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றச்செயல்களை விசாரிக்க ஒரு சுதந்திரமான சர்வதேச பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டுமென பசுமைக்கட்சி செனட்டர் லீ றைனன் கொண்டுவந்த பிரேரணை அவுஸ்திரேலிய செனட்டில் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டது.

15 சிங்கப்பூர் ஜனாதிபதி டாக்டர் ரொனி ரான் கெங் யாமின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சிங்கப்பூருக்கு விஜயம் செய்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு உறவுகளை மேலும் வளர்ப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கையின் முதலீட்டுச் சபைக்கும் சிங்கப்பூர் வணிக சம்மேளனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இந்த கைச்சாத்திடல் நிகழ்வானது சிங்கப்பூர் ஜனாதிபதியின் இல்லத்தில் வைத்து இரு நாட்டு தலைவர்களினதும் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருபக்க வர்த்தகத்தை வலுவுறச் செய்வதற்கான முயற்சிகளை அதிகரிக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சிங்கப்பூர் பிரதம மத்திரி லீ ஸியன் லூங்கும் கூட்டாக அழைப்பு விடுத்தனர்.

சிரியா அதன் கிளர்ச்சிக்காரர்கள் மீது மேற்கொண்டுவரும் மிருகத்தனமான தாக்குதலை நிறுத்தக்கோரும், கடும் சொற்பிரயோகங்களைக் கொண்ட தீர்மானம் ஒன்றை ஐ.நா. பொதுச்சபையானது 137ற்கு 12 எனும் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது.

அரசியலமைப்பின் 18வது திருத்தச் சட்டத்திற்கு அமைய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முன்மொழியப்பட்ட பெயர்களை பாராளுமன்ற ஆலோசனைச்சபை அங்கீகரித்துள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை மீள் செயற்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்பது கற்றுக்கொண்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும்.

16 யப்பான் பிரதம மந்திரி அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் ‘உலக இளைஞர்களுக்கான கப்பல்’ எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக, பூஜி மாறு (Fuji Maru) எனும் ஜப்பானிய உல்லாச கப்பலானது பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த 270 இளைஞர்களுடன், 17 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வந்தது.

19 இந்த பூஜி மாறு கப்பலில் வந்த இளைஞர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்புத் துறைமுகத்தில் சந்தித்தனர்.

21 ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது ஏற்புடைய எந்தவொரு அதிகாரபீடத்தாலோ அல்லது நீதிமன்றத்தாலோ குற்றம் சுமத்தப்படவில்லை எனவும், அவரை ஐ.நா.வின் பதவியிலிருந்து நீக்கக் கோருவது நியாயமற்றது எனவும், அது ஐ.நா.வின் கோட்பாடுகளுக்கு முரணானது எனவும் கூறியுள்ளது.

22 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் 14வது சனத்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது.

வெளித்தலையீடு எதையும் நியாயப்படுத்தும் அளவுக்கு இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகள் இல்லை எனவும், மனித உரிமைகள் உட்பட அதன் உள்நாட்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் அதற்கு உண்டு எனவும் ரஷ்யா கூறியது.

23 சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் (உலகவங்கி) உப தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான லஸ் ஹென்றிக் துனெல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்தார். இச்சந்திப்பின்போது, தனது நிறுவனம் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு உதவுவதுடன், நாட்டின் எதிர்கால நன்னிலைக்காக தனியார் துறையின் பூரண ஆதரவையும் பங்களிப்பையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்குமென இந்த அதிகாரி ஜனாதிபதிக்கு உறுதியளித்தார்.

27 ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 19வது அமர்வின்போது, இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள தீர்மானத்துக்கு எதிரான தமது கூட்டுணர்வை வெளிப்படுத்துவதற்காக இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பிரதான நகரங்களிலும் பெரும் திரளான மக்கள் ஒன்றுதிரண்டனர்.

**தொடர்ச்சி 43ம் பக்கம் ..............................**

# பொருளியல் நோக்கு

மலர்: 37 | இதழ்கள்: 11&12 | மாசி/பங்குனி 2012

## உள்ளடக்கம்

### மாணவர் நோக்கு


பேராசிரியர் டனி அத்தப்பத்து — 35 — தேசிய வருமானக் கணக்கீட்டின் அனுகூலங்களும் வரையறைகளும்


### நூல் மதிப்பாய்வு


W.A. விஜேவர்த்தன — 39 — இலங்கையில் சந்தைப்பொருளாதார முறைமையின் கீழ் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி: புத்ததாஸ ஹேவாவிதாரண பாராட்டுமலர் தொகுதி-1


### முகப்புக் கட்டுரை

நியாயமான, நிலைத்திருக்கத்தக்க மற்றும் மனிதாபிமானத்துடன் கூடிய

**பொருளாதார வளர்ச்சி**


பேராசிரியர் சாந்த K.ஹென்னாயக்க — 03 — நீடித்திருக்கத்தக்க தன்மை: எண்ணக்கருவின் பரிணாமவளர்ச்சியும் நடைமுறையும்

நிலக்ஷி டீ சில்வா — 09 — அபிவிருத்தியைப் புரிந்துகொள்ளல்: பொருளாதார வளர்ச்சியும் ஏனைய நோக்குநிலைகளும்

நந்தசிறி கீம்பியஹெட்டி, சரத் கட்டுக்குறுந்த — 15 — இலங்கையில் பொருளாதார வளர்ச்சியிலும் மனிதவள அபிவிருத்தியிலும் காணப்படும் சமத்துவமின்மை

கலாநிதி நிஷாந்த அருணாதிலக — 25 — கல்வி மற்றும் சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மை

பேராசிரியர் அசங்க திலகரத்தின — 31 — பொருளாதார அபிவிருத்திக்கான பௌத்த அணுகுமுறை


### அடுத்த இதழ்கள்

- ஒரு கொள்கைக் கருவியாக நாணயமாற்று வீதம்
- விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி
- பொருளாதாரத்தில் பெண்களின் பங்கேற்பு

அச்சுப்பதிப்பு: மக்கள் வங்கி அச்சிடல் சேவைகள் திணைக்களம்


வெளியீடு:
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி
தலைமை அலுவலகம்,
சேர் சிற்றம்பலம்
ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.



**ஆலோசனை சபை**

W. கருணாஜீவ
தலைவர், மக்கள் வங்கி

N. வசந்தகுமார்
பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்
மக்கள் வங்கி

ரசித குணவர்த்தன
உதவிப் பொது முகாமையாளர்/ ஆராய்ச்சிப் பணிப்பாளர்

**ஆலோசகப் பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி பிரட்ரிக் அபயரத்தின
கலாநிதி L.H.P. குணரத்தின


**ஒருங்கிணைப்பாளர்**

H.L. ஹேமச்சந்திர
ஆராய்ச்சி உத்தியோகத்தர்




பல்வேறு கோணங்களிலான அறிக்கைகள், கருத்துகள், விடயங்கள் மற்றும் விவாதங்கள் என்பவற்றை முன்வைப்பதன் மூலம், பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் அறிவையும், ஆர்வத்தையும் தூண்டுவதே 'பொருளியல் நோக்கு' சஞ்சிகையின் குறிக்கோளாகும். 'மக்கள் வங்கி'யின் ஒரு சமூகப்பணித் திட்டமாக இவ்வெளியீடு மேற்கொள்ளப் படுகிறது. எனினும், இச்சஞ்சிகையில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் என்பன, 'மக்கள் வங்கி'யின் கருத்துக்களையோ அல்லது அதன் உத்தியோகபூர்வக் கண்ணோட்டத்தையோ பிரதிபலிப்பவையல்ல. ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் கட்டுரைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துகளாகவே உள்ளன. அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களின் கருத்துகளாகக்கூட அவை அமையவில்லை என்பதையும் கவனத்திற் கொள்க. அத்தகைய பரந்த நோக்கிலான கட்டுரைகள், கருத்துகள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. 'பொருளியல் நோக்கு' இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படுகின்றது. சந்தா செலுத்துவதன் மூலமோ அல்லது நேரடிக் கொள்வனவின் மூலமோ அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.


மின்னஞ்சல்: ecorev@peoplesbank.lk





மூலம் : இலங்கை மத்திய வங்கி





மூலம் : குடும்ப வருமானமும் செலவீனமும் பற்றிய பொதுமதிப்பாய்வு - 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்





மூலம் : இலங்கை மத்திய வங்கி





மூலம் : குடும்ப வருமானமும் செலவீனமும் பற்றிய பொதுமதிப்பாய்வு - 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்





மூலம் : குடும்ப வருமானமும் செலவீனமும் பற்றிய பொதுமதிப்பாய்வு - 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்




மூலம் : குடும்ப வருமானமும் செலவீனமும் பற்றிய பொதுமதிப்பாய்வு - 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்




மூலம் : இலங்கை மத்திய வங்கி மற்றும் உலக வங்கித் தரவுகள்

# நீடித்திருக்கத்தக்க தன்மை: எண்ணக்கருவின் பரிணாமவளர்ச்சியும் நடைமுறையும்



**பேராசிரியர். சாந்த K. ஹென்னாயக்க**

சிரேஷ்ட பேராசிரியர்,

புவியியல் பீடம்

பேராதனைப் பல்கலைக்கழகம்


தேசியச்சூழமைவைப் போன்று, உலகளாவிய சூழமைவிலும் நீடித்திருக்கத்தக்கதன்மை பற்றிய எண்ணக்கருவின் பரிணாம வளர்ச்சியின் மூலத்தையும் நடை முறையையும் கண்டறிவதே இச்சிறு கட்டுரையின் குறிக்கோளாகும்.




வரைபடம் 1 மனித-சுற்றுச்சூழல்த் தொடர்பு


*மூலம் : சாந்த ஹென்னாயக்க (2009)*

## மனித-சுற்றுச்சூழற் தொடர்பு

நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய எண்ணக்கருவை புரிந்துகொள்வதற்கு, இன்று இப்புவிக்கோளத்தில் மிகுந்த ஆற்றலுடையதாக விளங்கும் உயிரினமான மனிதனுக்கும் இயற்கைச் சூழலுக்கும் (வரைபடம் 1) இடையிலான தொடர்பை நாம் ஆராய வேண்டியுள்ளது.

வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, சுற்றுச்சூழலானது முக்கியமான மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. பௌதிகக் கூறானது உயிருள்ள அல்லது உயிரற்ற இயற்பொருட்களை (அதாவது வளி, நீர், பாறைகள் உட்பட மண்) உள்ளடக்கியுள்ளது. உயிரினச் சூழல் என்பது விலங்கு மற்றும் தாவர இனங்களின் தொகுதியைக் கொண்டுள்ளது. மனிதச் சூழலானது மக்களையும் அவர்களது ஆக்கங்களையும் (அதாவது விவசாயம், கைத்தொழில், குடியிருப்புகள், உட்கட்டுமானங்கள்) உள்ளடக்கியுள்ளது. இவை மூன்றிலும் பௌதிக மற்றும் உயிரினத் தொகுதிகள் மூடப்பட்டதாகவும், வரையறைக்கு உட்பட்டதாகவும் உள்ளன. ஆனால், மனிதத் தொகுதியானது வரையறையற்றதாக இருப்பதுடன், மனித விருப்புகளும் முடிவில்லாதவையாகக் காணப்படுகின்றன. அத்துடன், கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் அவை துரிதமான வேகத்தில் அதிகரித்தும் வந்துள்ளன.

இம்மூன்று ஆக்கக் கூறுகளினுள்ளும், மனிதச் சூழலானது நவீன மனித இனம் பரிணாமவளர்ச்சியுற்ற காலம் தொடக்கம் (வெளிநோக்கிய அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ளவாறு) உயிரினச் சூழல், பௌதிகச்சூழல் ஆகிய இரண்டிற்கும் விரிவடைந்து வந்துள்ளதுடன், இப்பௌதிகச் சூழலை தரம் மற்றும் அளவு ஆகிய இரு அடிப்படையிலும் பாதித்தும் உள்ளது. ஆரம்ப கட்டங்களில் நிகழ்ந்த மாற்றங்கள் அளவிலும் தரத்திலும் சிற்றளவாகக் காணப்பட்டதுடன், இயற்கைச்சமநிலையை அல்லது 'புவித் தொகுதியில்' உள்ள சமநிலையை அடிப்படையில் மாற்றாது இருந்தமையால், இம்மாற்றங்களின் தாக்கங்களை இயற்கைச் சூழலால் எளிதாக மட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. ஆயினும் பெரும்பாலும் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பித்த பெருக்கல்விருத்தி அடிப்படையிலான சனத்தொகை வளர்ச்சி, உயர் வாழ்க்கைத்தரத்தை உறுதிப்படுத்துவதற்காக மனிதனால் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தியை நோக்கிய ஓர் உந்துகை என்பன காரணமாக ஏற்பட்ட மனிதச் செயற்பாடுகளின் விரிவாக்கமும் சுற்றுச்சூழலில் நிகழ்ந்த மாற்றங்களும் குறிப்பிட்ட சில நாடுகளிலும் பிராந்தியங்களிலும் இயற்கைச் சமநிலையை அடிப்படை




வரைபடம் 2 உலக சனத்தொகை வளர்ச்சி நிகழ்வாய்ப்புகள்

*மூலம் : ஐக்கிய நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி நிகழ்வாய்ப்புகள், 2004 திருத்திய தரவுகள்*

யில் மாற்றும் அளவிற்கு அதிகரித்துள்ளதுடன், பூகோளச் சமநிலைக்குச் சவாலாகவும் அமைந்துள்ளன. இப்புவிக்கோளில் காணப்படும் திகிலடையச் செய்யும் வகையிலான சனத்தொகை வளர்ச்சி வீதத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு வரைபடம் 1ஐப் பார்க்கவும். அது, உண்மையில் எதிர்வுகூறப்பட்டதையும் விட விரைவாக, 2012ம் ஆண்டிற்குள்ளேயே 7 பில்லியனை எட்டிவிட்டது.

இன்று, இரு இயற்கைத் தொகுதிகள் மீதும் மனிதத் தொகுதியால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே சுற்றுச்சூழல் தாக்கங்களாகுமென, அதாவது புவி வெப்பமடைதலும் வானிலை ஒழுங்கு முறையில் ஏற்பட்டுள்ள மோசமான மாற்றங்களும், உயிர்பல்லினத்தன்மையின் இழப்பு, வளியும் நீரும் மாசடைதல், செழிப்பான மண்ணின் இழப்பு முதலியன, அழைக்கப்படுகின்றன. இவை பொதுவாக சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எனும் சொற்பதங்களால் அழைக்கப்படுகின்றபோதும், (உள்நோக்கிய அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ளவாறு) உண்மையில் அவை மனிதன் தொடர்பான பிரச்சினைகளாகும்.


**உண்மையான அச்சுறுத்தலின் தோற்றம்**

மனித வரலாற்றில் உட்தகன இயந்திரம் (internal combustion engine), இயற்கை எரிபொருள் என்பனவற்றின் கண்டுபிடிப்பிற்கு வழிவகுத்த, கைத்தொழிற் புரட்சி காரணமாகவே மிக மோசமான சுற்றுச்சூழல் பாதிப்புகள் தோன்றியுள்ளன. அதற்கு முன்னர் மானிட சமுதாயமானது நிகழ்நேர அடிப்படையில் சூரிய சக்தியைச் சார்ந்திருந்தது. அதன் பின்னர் சூரிய சக்திக்கு மேலதிகமாக, இயற்கை எரிபொருட்களின் வடிவத்தில் புவியின் மேற்பரப்பிற்கு கீழே தேக்கி வைக்கப்பட்டுள்ள புராதன காலத்து சூரிய சக்தியிலிருந்து பயன்ஈட்ட ஆரம்பித்தோம். 18ம், 19ம் நூற்றாண் டுகளில், இயற்கை எரிபொருட் பாவனை யின் விளைவாக வெளியிடப்பட்ட மேலதிகமான தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் (greenhouse gassces) பெருமளவுக்கு மேற்குலகின் எல்லைக்குட்பட்டதாகவே காணப்பட்டன. இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து, 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அமைதி நிறைந்த எதிர்கால உலகிற்கு, மனிதனின் செல்வச்செழிப்பு நிலை இன்றியமையாத ஒரு தேவையாகக் கருதப்பட்டமையால், முழு உலகுமே பொருளாதார வளர்ச்சிக்கான மாபெரும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தன.

உலகளாவிய இம்முயற்சி தொடர்பில் உந்துசக்தியாக அமைந்த கருத்துகள் விவசாய உற்பத்தி (பசுமைப் புரட்சி), நுகர்வோர் நலன்சார்ந்த புதியதோர் சமுதாயத்தின் எழுச்சிக்கு வழிவகுக்கும் கைத்தொழில் உற்பத்தி ஆகியவற்றை விரிவுபடுத்துவதாக இருந்தன. இதற்கு இயற்கைச் சூழல் போதுமானளவு செயற்திறனற்றதாக உள்ளதெனக் கருதப்பட்டதுடன், முன்னொருபோதும் இல்லாதளவிற்கு இயற்கையை மாற்றுவதற்கும் திருத்தியமைப்பதற்கும் மனிதச் சமுதாயம் ஆரம்பித்தது. இதில் மேற்குலகு முன்னிலையில் இருந்து வருகின்றது. விவசாயக் காணிகளுக்காக இயற்கைக் காடுகள் அழிக்கப்பட்டன; மேலதிக மின்னுற்பத்தியைப்போல நீர்ப்பாசனத்திற்காகவும் நதிகளுக்குக் குறுக்கே அணைகள் அமைக்கப்பட்டதுடன், கால்வாய்களும் நிர்மாணிக்கப்பட்டன; புதிய கைத்தொழிலுக்காக கனிமங்கள் பாரியளவில் அகழ்ந்தெடுக்கப்பட்டன; பேரளவு உற்பத்தியை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, விவசாயத்திலும் கைத்தொழிலிலும் பயன்படுத்தப்படுவதற்காக புதிய இரசாயனங்கள் பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்பட்டன. இயற்கை வளங்களின் முழுமையான இப்பயன்பாடும் இரசாயனங்களின் உபயோகமும் உலகெங்கும் தணியாது தொடர்ந்தது. ஆனால் அவற்றின் தாக்கங்களை முதலில் மேற்குலகிலும், பின்னர் உலகின் ஏனைய பாகங்களிலும் அவதானிப்பதற்கு அண்ணளவாக இருபது வருடங்கள் தேவைப்பட்டன. இவ்வாறாக, மனிதச் செயற்பாடுகளின் விளைவாக ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கங்களை இலக்காகக் கொண்ட சுற்றுச்சூழல் தொடர்பான உணர்ந்தறி நிலையும் நவீன சுற்றுச்சூழல் இயக்கங்களும் ஐக்கிய அமெரிக்காவில் 1960களில் தோற்றம் பெற்றன.

**நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றி எண்ணக்கருவின் முன்வரலாறு**

நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட DDT (Dichloro Diphenyl Trychloroethane) இரசாயனத்தின் தீங்கு நிறைந்த தாக்கங்களை முன்னிலைப்படுத்தி, 1962ல் றாகல் காசன் (Rachael Carson) என்பவரால் எழுதப்பட்ட *'Silent Spring'* எனும் முக்கியத்துவம் வாய்ந்த நூலானது ஐக்கிய அமெரிக்காவில் உடனடியாகவே பிரசித்தி பெற்றதுடன், நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்களின் பயன்பாடு தொடர்பில் வெகுஜனங்களின் உளப்பாங்கில்



குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்தையும் தோற்றுவித்தது. இறுதியில், இந்நூலின் வெளியீடானது DDT பாவனையை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் தடைசெய்வதற்கு காரணமாக அமைந்ததுடன், மிக முக்கியமாக பொதுமக்கள் மத்தியில் சுற்றுச்சூழல் பற்றி நல்விளைவை ஏற்படுத்தவல்ல விழிப் புணர்வை அதிகரிக்கவும் செய்தது. இதைத் தொடர்ந்து, உள்நாட்டிலும் உலக அளவிலும் அதிகரித்துச்செல்லும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய பிரசித்திபெற்ற கருத்துகளை மனதில் பதியவைத்த, இத்துறையில் செல்வாக்குச் செலுத்திய ஏனைய பல ஆய்வுகள் இடம்பெற்றன. அதிகரித்துச்செல்லும் சனத்தொகையின் வரையறையற்ற தேவைகளுக்கும் இப்பூமியின் வரையறுக்கப்பட்ட வளங்களுக்கும் இடையிலான சமநிலையின்மையை முன்னிலைப்படுத்தி, போல் ஆர். ஏர்லிச் (Paul R. Ehrlich) என்பவர் 1968ல் *'The Population Bomb'* எனும் ஒரு நூலை எழுதினார். இது தவிர, *Science and Survival* (1966), *The Closing Circle: Nature, Man, and Techno logy(1971)* ஆகிய இரு நூல்களை வெளியிட்டதன் மூலம், ஆளுமைத் திறனுடைய ஓர் உயிரியல் அறிஞரான பரி கொமணர் (Barry Commoner) என்பவர் அதிகரித்துச்செல்லும் சுற்றுச்சூழல் தொடர்பான உணர்ந்தறி நிலைக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். நவீன தொழில்நுட்பம் அடிப்படையில் குறைபாடுடையது என்பதுடன், இதன் காரணமாக வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு அதிகரித்துச்செல்லும் மனிதக் கேள்வியை நிறைவுசெய்ய முடியாதுள்ளது எனவும் அவர் வாதிடுகின்றார். கொமணருடைய மிக முக்கிமான பங்களிப்பு யாதெனில், சூழலியல் பற்றிய நான்கு விதிகளின்

பரந்த அர்த்தத்தில் பார்க்கும்போது, நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான உபாயமானது மனிதர்கள் மத்தியிலும் மற்றும் மனித இனத்திற்கும் இயற்கைக்கும் இடையிலும் ஒத்திசைவை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. குறிப்பாக, 1980களின் அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான நெருக்கடிச் சூழமைவைக் கவனத்தில் கொள்கையில், தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச ரீதியான அரசியல்-பொருளாதார நிறுவனங்களால் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுபோயுள்ளது என்பதுடன், ஒருவேளை அவற்றால் இதில் வெற்றியடையவும் முடியாதுள்ளது. நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான செயல்முயற்சிக்கு பின்வருவன தேவைப்படுகின்றன:

- தீர்மானம் மேற்கொள்ளலில் பயன்நிறைவுடைய மக்கள்-பங்குபற்றலை நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு அரசியல் முறைமை
- தன்னிறைவு மற்றும் நீடித்திருக்கத்தக்க அடிப்படையிலான மிகையுற்பத்தியையும் தொழில்நுட்ப அறிவையும் தோற்றுவிக்ககூடிய ஒரு பொருளாதார முறைமை
- இணக்கப்பாடற்ற நிகழ்வுகள் காரணமாகத் தோற்றம்பெறும் பதற்றநிலைக்கு தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரு சமூக அமைப்பு முறைமை
- அபிவிருத்திக்கான சுற்றுச்சூழலியல் அடிப்படைகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டை மதிக்கும் ஒரு உற்பத்தி முறைமை
- இப்பிரச்சினைக்கான புதிய தீர்வுகளை தொடர்ச்சியாகத் தேடி அறியக்கூடிய ஒரு தொழில்நுட்ப முறைமை
- நீடித்திருக்கத்தக்க வர்த்தகம் மற்றும் நிதி ஒழுங்குமுறையைப் பேணக்கூடிய ஒரு சர்வதேச முறைமை
- நெகிழ்ச்சித்தன்மையுடையதும் தவறுகளைச் சுயமாகத் திருத்திக்கொள்வதற்கான இயலாற்றலைக் கொண்டதுமான ஒரு நிருவாக முறைமை.

இத்தேவைகள், அபிவிருத்தி தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நடவடிக்கைக்குக் காரணமாய் அமைய வேண்டிய குறிக்கோள்களின் இயல்புகளைக் கொண்டனவாக உள்ளன. இக்குறிக்கோள்களை அடைவதற்கு எந்தளவு உள்ளார்ந்த அக்கறையுடன் முயற்சிக்கப்படுகின்றது என்பதும், இச்செயல்விளைவின் காரணமாக ஏற்படும் தவறுகள் எந்தளவுக்குத் திருத்திக்கொள்ளப்படுகின்றன என்பதுமே முக்கியமான விடங்களாகும்.

அறிமுகமாகும். இவை, சுற்றுச்சூழலுடனான மனிதத் தொடர்பு பற்றிய வழிப்படுத்தற் கோட்பாடுகளாகும் என்பதற்கு ஆதரவான கருத்துகளை இவர் முன்வைக்கின்றார். முதலாவதாக, இயற்கையிலுள்ள அனைத்துமே ஏனையவற்றுடன்தொடர்புபட்டுள்ளதோடு, உயிருள்ள அனைத்து அங்கிகளுக்குமென ஒரேயொரு சூழல் மண்டலமே உள்ளது. இதனால், ஒன்றை எது பாதிக்கின்றதோ அது ஏனைய அனைத்தையும் பாதிக்கும். இரண்டாவதாக, அனைத்துமே எங்கோஓர் இடத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. இயற்கையில் கழிவுப் பொருள் என எதுவும் இல்லை என்பதுடன், கழிவுப் பொருட்களை வீசுவதற்கான இடம் என்று வெளியில் எதுவும் இல்லை. மூன்றாவதாக, மனிதனின் தொழிநுட்பரீதியான தலையீடு இயற்கைத் தொகுதிக்குத் தீங்கு விளைவிக்கத்தக்கது என்பதை இயற்கையால் நன்கு உணர முடியும். நான்காவதாக, இலவசமாகக் கிடைப்பவை என எதுவுமே இல்லை என்பதுடன், இலவசமாகக் கிடைக்கக் கூடியதாகவுள்ள இயற்கையை முழுமையாகப் பயன்படுத்துதல் என்பது பயன்நிறைந்த வளங்களை பயனற்ற வடிவத்திற்கு மாற்றும் ஒரு செயல்முறையாகும்.

சுற்றுச்சூழலில் உள்ளார்ந்த அக்கறையுடன் கவனம் செலுத்துமாறு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்திடம் வலியுறுத்த ஆரம்பித்த மக்கள் மத்தியில், சுற்றுச்சூழல் பற்றிய நவீன சிந்தனையை ஆழமான வகையில் பாதிப்பதாக கொமனரின் இச்சிந்தனை அமைந்திருந்தது. பொதுமக்களின் இந்த நெருக்குதலின் உச்சநிலையாக, சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான உலகின் முதலாவது சட்டம் (தேசிய சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம்) 1969ன் இறுதி நாட்களில் அமெரிக்க காங்கிரஸால் இயற்றப்பட்டது. இம்முயற்சியின் விளைவாக, கொள்கை வகுப்பின் ஓர் அம்சமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பேணுகையும் இடம்பெற்றதுடன், அவை தேசியக் கடமைப் பொறுப்புகளாகவும் ஆகின. அதன் பின்னர், இலங்கை உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் சுற்றுச் சூழல் மதிப்பீட்டுச் செயல்முறைகளைக் கைக்கொண்டு வருகின்றன.

1970களில், சுற்றுச்சூழல் பேணுகையும் பாதுகாப்பும் தொடர்பான செயல் முயற்சிகள் முக்கியமாக பல்கலைக் கழகங்களிலும் குடிசார் சமூகங்களிலும் (சிவில் சமூகம்) அங்கம் வகித்த சுற்றுச் சூழல் ஆராய்ச்சியாளர்களின் பொறுப்பிலேயே இருந்தன. பின்னர் இது தொடர்பான கரிசனை அதிகரித்த போதும், அரசியல் மற்றும் சர்வதேச ரீதியான செயற்களங்களாக அது பிளவுபட்டது. 1972 டிசம்பர் 7ல் அப்பலோ (Appöllo 17) விண்கலத்தால் 45,000 கிலோ மீற்றர் தொலைவில் அண்டவெளியிலிருந்து எடுக்கப்பட்ட, நீலக் கோள் ('blue marble') என பிரபல்யமாக அழைக்கப்பட்ட பூமியின் முதலாவது புகைப்படமானது மனித இனத்தின் ஓரேயொரு வாழிடமாகவுள்ள இப்புவியின் வரையறைகள் பற்றிய மனித சிந்தனையில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1972ல், ரோம் கழகம் (Club of Rome) எனப் பிரபல்யமாக அழைக்கப்படும் ஓர் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய, உலகின் பல பாகங்களையும் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் அரசியல் தலைவர்களின் ஒரு குழு *The Limits to Growth* எனும் தலைப்பிலான, இத்துறையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்திய, மற்றுமொரு நூலை வெளியிட்டது. அதன் தலைப்பு வெளிப்படுத்துகின்றவாறே, இயற்கைத் தொகுதியானது இயல்பில் வரையறுக்கப்பட்ட மூடிய ஒரு தொகுதியாக இருப்பதனால், பொருளாதார வளர்ச்சிக்கு வரையறைகள் உண்டு என்பதற்கு ஆதரவான கருத்துகளை அது தெளிவாக முன்வைக்கின்றது.

அதே ஆண்டில், உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, மனிதச் சூழல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டை உலகத் தலைவர்கள் ஸ்ரொக்கோமில் ஒன்றுகூட்டினர். இம்மாநாடானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

1973ல், *Small is Beautiful: Economics as if People Mattered* எனும் தலைப்பிலான, இத் துறையில் செல்வாக்குச் செலுத்தவல்ல, மற்றுமொரு நூல் ஜோசப் ஸ்கூமச்சர் (Joseph Schumacher) என்பவரால் வெளியிடப்பட்டது. இது வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களுக்கும் நவீன பேரளவு உற்பத்தி முறைமைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதுடன், வளங்களின் அளவு இறுதியில் குறைவடையும் என்பதால், நவீன பொருளாதாரமானது நீடித்திருக்கத்தக்க ஒன்றல்ல எனும் முடிவிற்கு வருகின்றது. இவ்வாறாக இவரது கருத்துகள், "குறைந்தபட்ச நுகர்வுடன் அதிகபட்ச இன்னிலையை அடைவதாக" மனித இனத்தின் குறிக்கோள் இருக்க வேண்டும், எனும் 'பௌத்த பொருளியல்' கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அதே வருடத்தில், ஹேமன் டலி (Herman Dally) என்பவர் *Toward a Steady-State Economy* எனும் முக்கியமான ஒரு நூலை வெளியிட்டதுடன், பின்னர் அதை மேலும் விரிவுபடுத்தி, 1977ல் *Steady-State Economics* எனும் தலைப்பின்கீழ் வெளியிட்டார். நிலையுறுதி வாய்ந்த அரச பொருளாதாரம் பற்றிய எண்ணக்கருவானது, தாங்கும் இயலளவில் அல்லது அதற்குக் குறைவான நிலையில் இருக்கும் உறுதியான சனத்தொகை மற்றும் உறுதியான நுகர்வு என்பவற்றை முக்கிய அம்சங்களாகக் கொண்டிருக்கும் ஒப்பீட்டளவில் உறுதியான பருமனுடைய ஒரு பொருளாதாரத்தைப் பற்றியதாக இருக்கின்றது. இப்பங்களிப்புகள் அனைத்துமே நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவிற்கான பயன் நிறைவுடையதும் ஆளுமைத்திறன் வாய்ந்ததுமான கருத்துருவாக்க அடிப்படையை நிலையுறுதியான வகையில் தோற்றுவித்துள்ளன.

1970களிலும் 80களிலும், உலகின் பெருமளவிலான பகுதிகளில் பல்வேறு வகைகளிலும் அளவிலும் தோற்றம் பெற்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் விளைவாக, இப்பூகோளத்தின் உய்வு தொடர்பில் அவற்றின் தாக்கங்கள், இச் சுற்றுச்சூழல்ப் பிரச்சினைகளின் அதிகரித்துச்செல்லும் போக்கு, மற்றும் அவற்றின் விரிவாக்கம் காரணமாக மனித இனத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றில் உள்ளார்ந்த அக்கறை கொள்ளச் செய்யும் வகையில் குடிசார், அரசியல் மற்றும் சர்வதேச சமூகத்தின் கவனம் மேலும் ஈர்க்கப்பட்டது. அவ்வாறே, இக்காலகட்டத்தில், அபிவிருத்திக்கும் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான தொடர்பு மேலும் மேலும் சச்சரவை உண்டு பண்ணக்கூடிய ஒன்றாகி, இறுதியில் கட்டற்ற நிகழ்முறையாக மாறுவதற்கும் வழிவகுத்தது என்பது தொடர்பில் ஓர் உலகளாவிய கருத்தொற்றுமையும் தோற்றம் பெற்றது. இதனால் மனித இனத்தின் எதிர்காலம் பெரும்பாலும் ஓர் ஊழியின் முடிவாகவே அமையும் என்பதை உணர்ந்தோர், இதுகாலும் உள்ளநிலை தொடருமாயின், அபிவிருத்தி இலக்குகளையும் நடைமுறைகளையும் சுற்றுச்சூழல் பேணுகை மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் என்பவற்றுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்கான அதிகரித்தளவிலான கோரிக்கையை முன்வைத்தனர். இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதைச் சீர்ப்படுத்தும் முகமாக விவேகமான முறையில் செயற்படுமாறு, பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் உள்ள குடிசார் சமூகங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான நபர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், உலகெங்கும் உள்ள சுற்றுச்சூழல் துறை சார்ந்த புகழ்பெற்ற விஞ்ஞானிகள் போன்றோர் ஒன்றிணைந்து, தமது நாடுகளுக்கும் உலகளாவிய அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் போதுமானளவு நெருக்குதலைக் கொடுத்தனர். பூமியை எமது 'ஒரேயொரு வாழிடமாகக்' கொள்ளும் எண்ணக்கருவானது, இனிமேலும் புனைவியற் பண்பூட்டப்பட்ட ஒரு விளக்கமாகவன்றி, உள்ளார்ந்த அக்கறையுடனும் உண்மையாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டிய, அசட்டை செய்ய முடியாத ஒரு விடயமாகும்.

**நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு**

உலகளாவிய மட்டத்திலான இம் முயற்சிகளின் உச்சநிலையாக, 1983ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் சுற்றுச்சூழலும் அபிவிருத்தியும் தொடர்பான ஒரு சர்வதேச ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் தலைவராக நோர்வேயின் முன்னாள் பிரதம மந்திரியான குறோஹாலெம் புறுண்லண்ட் (GroHorlem Brundtland) நியமிக்கப்பட்டிருந்தார். மனித இனத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய, நடப்பில் இருந்த அறிவியற் தகவல்களை ஒன்றுசேர்ப்பதற்காக, அவற்றின் நுணுக்க விபரங்களில் ஆழ்ந்த கவனம் செலுத்திய மூன்று வருடகால ஆய்வுப் பணியின் பின்னர், இவ்வாணைக் குழுவின் அறிக்கையானது, '*Our Common Future*' எனும் தலைப்பில் 1987ல் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை *Brundtland Report* எனவும் பிரபல்யமாக அழைக்கப்படுவதுண்டு. இவ்வறிக்கை சுற்றுச்சூழல் கரிசனைகளையும் அபிவிருத்தியையும் ஒருங்கிணைப்பதற்கான தேவையை வலியுறுத்துகின்றது. இதன் விளைவாக, 'நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி' எனும் எண்ணக்கருவின் முறைசார்ந்த அறிமுகம் தோற்றம் பெற்றது. அதில், "தமது சொந்தத்தேவைகளை நிறைவுசெய்வது தொடர்பில் எதிர்காலச் சந்ததியினரின் ஆற்றல்களை விட்டுக்கொடுக்காது, தற்போதைய தேவைகளை நிறைவுசெய்கின்ற அபிவிருத்தியாகும்" என நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்படுகின்றது. புறுண்லண்ட் அறிக்கையில் காணப்படும் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி எனும் எண்ணக்கரு பற்றிய இறுதி வாசகமானது உலகளாவிய மற்றும் தேசிய மட்டத்தில் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைவதற்கான உபாயங்களை முன்வைக்கின்றது (பெட்டியைப் பார்க்கவும்).

இதன் அறிமுகத்தைத் தொடர்ந்து, நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவும் அதன் முறைசார் வரைவிலக்கணமும் நம்பத்தகுந்தவையாக உள்ளன என உலகெங்குமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. றியோ டி ஜெனிய்றோவில் நிகழ்ந்த 1992ம் ஆண்டின் புவிஉச்சி மாநாடு, அதைத் தொடர்ந்து நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான உபாயங்களை அமுலாக்குவது தொடர்பில் தெளிவாகவும், நேரடியாகவும் வெளிப்படுத்திய நிகழ்ச்சித்திட்டம்-21 ஆகியவற்றை உலகளாவியரீதியில் ஏற்றுக்கொண்டமைக்குக் கூட இவ்வறிக்கையும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான ஏனைய பணிகளும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளன. 2000மாம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த ஆயிரமாம் ஆண்டு உச்சி மாநாட்டை நடத்தியது. இதற்கு ஐந்து வருடங்களுக்குப் பின்னர், அதாவது 2005ல், ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளையும் அதன் மூலம் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியையும் அடைவது தொடர்பில், உலகின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக மற்றுமொரு உலகளாவிய உச்சிமாநாடு நடைபெற்றது. இதுதவிர, முதலாவது புவி உச்சிமாநாடு நடைபெற்று 20 வருடங்களின் பின்னர், அடையப்பட்ட முன்னேற்றங்களை மதிப்

பிடுவதற்காக, உலகத் தலைவர்கள் மீண்டும் இவ்வருடம் (2012) றியோ டி ஜெனிய்றோவில் ஒன்றுகூடினர். "நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி தொடர்பிலான எமது உள்ளார்ந்த ஈடுபாட்டிற்குப் புத்துணர்ச்சியூட்டுவதுடன், எமது புவிக் கோளத்திற்கும் தற்போதைய மற்றும் எதிர்காலச் சந்ததிகளுக்குமான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக நீடித்திருக்கத்தக்க எதிர்கால முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதுமே எமது தொலை நோக்காகும்" என இந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட இறுதி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடையப்பட்ட சாதனைகள் தொடர்பில், உலகளாவியரீதியில் வெற்றியும் தோல்வியும்கலந்த நிகழ்வாய்ப்புகளையே இந்த ஆவணம் வெளிப் படுத்தியுள் ளது. இது பற்றிக் குறிப்பிடுகையில், "நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி தொடர்பில் முன்னேற்றம் குறைவான துறைகளும் அதன் குறிப்பான மூன்று அம்சங்களின் ஒருமைப்பாட்டில் காணப்பட்ட முட்டுக்கட்டைகளும் 1992லிருந்தே தொடர்ந்திருந்து வந்துள்ளன என்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம். நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைவது தொடர்பில் அனைத்து நாடுகளுக்கும், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, உள் ள ஆற்றலுக்கு கேடுவிளைவிக்கும் போக்குடையதாக அமைந்துள்ள பல்கூட்டான நிதி, பொருளாதார, உணவு மற்றும் சக்தி நெருக்கடிகள் நிலைமையை மேலும் சிக்கலானதாக ஆக்கியுள்ளன. இது தொடர்பில், சுற்றுச்சூழலும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் தொடர்பான செயற்பொறுப்பிலிருந்து நாம் பின் வாங்கவில்லை என்பது மிக முக்கியமானதாகும்." என அவ் வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. "அதன் குறிப்பான அனைத்து அம்சங்களிலும் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைவதன் பொருட்டு, பொருளா தார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் கூறுகளை ஒன்றிணைப்பதுடன், அவற்றிற்கு இடையிலான தொடர்புகளை அங்கீகரித்து, நீடித்திருக்கத்தக்க அபிவிருத் தியை அனைத்து மட்டங்களிலும் நடைமுறையோடு மேலும் இியைந்து செல்லத்தக்கதாக ஆக்குவதற்கான தேவையை" இச் சர்வதேச அமைப்பானது உலகிற்கு எடுத்துக்கூறுகின்றது (Rio+20: United Nations Conference on Sustainable Development: Outcome of the Conference).

நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி எனும் எண்ணக்கருவானது இன்று அனைவருக்கும் தெரிந்த ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது. சமூக மற்றும் அரசியற் செயற்பொறுப்புக்களைப்போல, கொள்கை மற்றும் சட்ட ரீதியான கருவிகள் ஊடாக நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைவதற்கு உலக நாடுகள் உறுதி பூண்டுள்ளன.

**இலங்கையில் நீடித்திருக்கத்தக்கதன்மை பற்றிய எண்ணக்கருவின் முழுமையாக்கம்**

தனது பங்கிற்கு இலங்கை கூட நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கு உறுதி பூண்டுள்ளது. இது தொடர்பில், இந் நாடானது 1980களிலிருந்து ஒரு தொகுதிச் சட்டங் களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் 1981ம் ஆண்டின் தேசிய சுற்றாடல் (சுற்றுச்சூழல் எனக்கொள்க) சட்டம் (NEA) மிகச் சிறந்ததாக விளங்குகின்றது. சுற்றுச் சூழல் அமைச்சு ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டமை, தேசிய சுற்றுச் சூழற் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை அமைக்கப்பட்டமை, சுற்றாடற் பாதிப்பு மதிப்பீடு (EIA) மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி (EPL) என்பவற்றின் அறிமுகம், சுற்றுச் சூழற் தரவு அளவுகளின் அறிமுகம், சுற்றுச் சூழற் பாதுகாப்புப் பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டமை ஆகியன நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி தொடர்பிலான தேசியரீதியான செயற்பொறுப்பிற்கான தெளிவான சான்றுகளாக உள்ளன. இலங்கை 1980களிலிருந்து சுற்றுச் சூழற் பயன்பாட்டின் முக்கியமான பல அம்சங்களை உள்ளடக்கும் வகையில் பெரும் எண்ணிக்கையிலான கொள்கை ஆவணங்களையும் உபாயங்களையும் கூடத் தயாரித்துள்ளது.

இலங்கையின்சுற்றுச்சூழற் கொள்கை மற்றும் தற்போதைய அரச கொள்கையாகவுள்ள மஹிந்த சிந்தனை எதிர் காலத் தொலைநோக்கு என்பன கூட நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைதல் தொடர்பிலான தமது செயற் பொறுப்புக்களைத் தெளிவாக விளக்குகின்றன. எடுத்துக்காட்டாக, "பொருளாதார அபிவிருத்திக்கும் வாழ்க்கைத் தரத்திற்குமான இயற்கை வளங்களின் பங்களிப்பை உரியவாறு அங்கீகரிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தாத நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியின் ஊடாக, இந்நாட்டின் சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்துப் பேணுவதற்குத் தேவையான நாணயப் பண்பு" எனும் குறிக்கோளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதன் மூலம், "மக்களினதும் பொருளாதாரத்தினதும் நன்னிலைக்காக இயற்கை நிலையை நீடித்திருக்கச்செய்து, ஆரோக்கியமானதும் மகிழ்வளிப்பதுமான ஒரு சுற்றுச்சூழலைப் பெற்றிருத்தல்" என்பதே சுற்றுச் சூழல் தொடர்பான தேசியக் கொள்கையின் தொலைநோக்காகும். மஹிந்த சிந்தனையின் முன்னுரையில் மேதகு ஜனாதிபதியின் மேற்கோள்வாசகம் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "எனது குறிக்கோள் யாதெனில், எதிர் காலச் சந்ததியினருக்கு எமது இயற்கை மரபுச் செல்வத்தை வழங்கும் பொருட்டு, நிலம், தாவர மற்றும் விலங்குத் தொகுதிகள் ஆகியவற்றுடனான ஒத்தியல்வுடன் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகும்." இவ்வாறாக, இலங்கை நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய எண்ணக் கருவை கொள்கை வகுத்தல் மற்றும் வழி காட்டல் மட்டத்தில் நன்கு ஒன்றிணைத்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

**உள்ளூர்க் கலாசாரத்தில் நீடித்திருக்கத் தக்கதன்மை பற்றிய எண்ணக்கரு**

இலங்கையில், சிங்கள-பௌத்த கலாசாரமானது நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய எண்ணக்கருவை ஒன்றிணைத்தல் தொடர்பான செழுமையான மரபுரிமைப் பண்பைக் கொண்டுள்ளது.

'ஆயுபோவன்' (நீடூழி வாழ்க) என்பது சிங்கள கலாசாரத்தில் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு வணக்கவுரையாகும். இவ்வணக்கவுரையானது எளிமையான மற்றும் கபடமற்ற, பரிவான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. எனினும் அதில் பரந்தகன்ற சுற்றுச்சூழலுடன் மனிதாபிமானத்தைத் தொடர்புபடுத்துகின்ற, புரிந்து கொள்வதற்குக் கடினமானதும் ஆழமானதுமான ஒரு தத்துவம் உண்டு. நீடித்திருக்கத்தக்க சுற்றுச்சூழல், பொருளாதார மற்றும் சமூகச்சூழல் என்பன இருந்தால் மாத்திரமே நீடித்த ஆயுள் சாத்தியமாகும். இவ்வாறாக 'ஆயுபோவன்' எனும் சொற்பதமானது சிங்கள கலாசாரத்திலுள்ள நீடித்திருக்கத் தக்க தன்மை பற்றிய வட்டாரப் பேச்சு மொழியாக அமைந்துள்ள இயற்கை தொடர்பான ஒரு கருத்து வெளிப்பாடாகும்.

நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி தொடர்பான உள்ளார்ந்த ஈடுபாட்டிற்கான முற்காலச் சான்றுகளை கி.மு. 3ம் நூற்றாண்டில் தேவநம்பிய தீச மன்னனுக்கு மஹிந்த தேரரால் வழங்கப்பட்ட முதலாவது ஆலோசனையில் காணமுடிகின்றது. "ஓ! பெரும்புகழ் வாய்ந்த மன்னா, உனக்கு உள்ளதைப் போலவே, இந்நாட்டின் எப்பகுதியிலும் வாழ்வதற்கும் நட

மாடித் திரிவதுற்குமான உரிமை வான் பறவைகளுக்கும் இப்பூமியின் விலங்கு களுக்கும் உண்டு. இந்நாடு மக்களுக்கும் ஏனைய அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானது. நீ அதன் பாதுகாவலன் மாத்திரமே.'' என அவ்வாலோசனை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாச கத்தின் உள்ளடக்கமானது கவனத்தை ஈர்க்கும் வகையில், காலத்தை முந்தி நின்ற ஒரு விடயமாக இருப்பதுடன், இப்புவியை, ஏனையவற்று டன் சேர்ந்து பகிர்ந்துகொள்ள வேண்டிய உயிரினங் களில் ஒன்றே மனித இனமாகும் என் பதை இவ்வுலகம் புரிந்து கொள்வ தற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் தேவைப்பட்டுள்ளன. ஆட்சியாளர்கள் ஒரு நாட்டின் (பூமியின்) பாதுகாவலர் களாக மாத்திரம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர், எனும் ஓர் அரசியல் செய்தியைக் கூட இவ்வாசகம் கொண்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் பேணுகை தொடர்பான மிக முக்கிமான நவீன உபாயங்களில் ஒன்று யாதெனில், பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங் களை ஒதுக்கிப் பிரகடனப்படுத்துதலா கும். கி.மு. 3ம் நூற்றாண்டில் மிஹிந்த லையில் தேவநம்பிய தீச மன்னனால் பிரகடனப்படுத்தப்பட்ட, உலகின்முதலா வது சரணாலயத்தை இலங்கை கொண் டிருந்தது என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

பொதுநிலை மக்கள்சார்ந்த பௌத் தக் கோட்பாடானது அடிப்படையில் நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றியதா கும். 'கொல்லாமை' பற்றிய ஐந்து கட்ட ளைகளில் முதலாவது கட்டளையானது நவீன சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தில் காணப்படும் உயிர்ப் பல்லினத்தன்மைப் பாதுகாப்பாக அமைந்துள்ளது.

உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச நிலைகளைத் தவிர்ப்பதாக அமைந்து ள்ள, வளங்கொழிப்பு அல்லது வறுமை யைத்தவிர்க்கும் வகையிலான நடுநிலைப் போக்கு என்பது வளங்களின் உத்தமப் பயன்பாட்டைக் குறிக்கின்றது.

வனரோப சூத்திரத்தின் நீடித்திருக்கத் தக்க அபிவிருத்தி பற்றிய வியத்தகு விள க்கம் பின்வருமாறு அமைந்துள்ளது: ''பழத்தோட்டங்களிலும்வீட்டுத் தோட்டங் களிலும் மரங்களை நடுவோர், தோப்பு களை அமைப்போர், பாலங்களை நிர் மாணிப்போர், பயணிகளுக்கான குடி நீருடன் வீதியோரங்களில் கொட்டகை களை அமைப்போர், கிணறுகளைத் தோண்டுவோர் அல்லது நீர்த்தேக்கங் களை அமைப்போர் மற்றும் பொதுமக் களுக்காக பல்வேறு வடிவங்களிலான புகலிடங்களைக் கட்டுவோருக்கு இரவும் பகலும் புண்ணியம் பெருகும். அறப் பண்பை இயற்கையாகக் கொண்டிருப் பதும், தேவலோகத்திற்கு அழைத்துச் செல்வதுமான தர்மத்தின் பாற்பட்ட நடத்தைக்கு உரியவர்கள் இவர்களேயா வர்.'' இவ்வாசகமானது மனிதத் தேவை களையும்இயற்கைச்சூழலையும்பயனுறுதி வாய்ந்த வகையில் ஒன்றிணைப்பதற் கான தேவையைப் பற்றிக் குறிப்பிடுகின் றது. சுருக்கமாகக் கூறின், மனித நலனை அடைவதில் சூழலியற் கோட்பாடுகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இது வலி யுறுத்துகின்றது.

ஒருவேளை பௌத்த போதனைக ளில் காணப்படும் நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய மிகவும் முக்கியமான வாசகத்தை கரணிய மேத்தா சூத்திரத் தில் காண முடியும். இரு செய்யுள்களின் அதாவது 'யேகெசிபன புத்தட்டி' மற்றும் 'திட்டவவே வாட்டித்த' ஆகியவற்றின் இம் மொழிபெயர்ப்பானது மேலே குறிப் பிடப்பட்ட கருத்தின் ஒரு மாதிரி எடுத் துக்காட்டாக உள்ளது.

*வலிமையானதோ, வலிமையற்றதோ,*
*நெடிதோ, பெரிதோ, நடுத்தரமோ,*
*குள்ளமானதோ, நுண்ணியதோ*
*அல்லது கொழுத்ததோ*
*கட்புலனானதோ*
*அல்லது கட்புலனாகாததோ*
*அருகில் வாழ்வதோ*
*அல்லது தொலைவில் வாழ்வதோ*
*பிறந்துள்ளதோ*
*அல்லது பிறக்கவுள்ளதோ*
*எவ்வுயிரினமாக இருப்பினும்,*
*விதிவிலக்கின்றி*
*அவை அனைத்தும்*
*மகிழ்ச்சியாக இருக்கட்டும்*

மனித இனத்திற்கு மட்டுமீறிய முன் னுரிமை வழங்காத வகையில், உயிரி னங்களின் வேறுபாட்டைப் பொருட் படுத்தாது அனைத்து உயிரினங்களை யும் சமமாக நடாத்துதல் பற்றியதாக இது அமைந்துள்ளது. இங்கே கருத்துச் செலுத் தத்தக்கஒருவிடயம் யாதெனில், இனிமேல் பிறக்கவுள்ள எதிர்காலச் சந்ததிகளைப் பற்றிக்கூட இதில் குறிப்பிடப்பட்டுள் ளது என்பதாகும். மேலும், புவி மற்றும் அதில் வசிக்கும் உயிரினங்கள் பற்றிய இக்கருத்துவாக்கமானது புருண்டண் என்பவரால் 1987ல் வழங்கப்பட்ட வரை விலக்கணத்தை விட, 2500 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும் என்பது கவனத் தில் கொள்ளத்தக்கதாகும்.

## முடிவுரை

எமது உளப்பாங்கு, இந்த இயற்கைச் சூழலில் வாழும் மில்லியன் கணக்கான உயிரினங்களில் மனித இனம் ஒரேயொரு கூறாகும் எனவும், இப்புவிக் கோளானது மனித இனத்திற்கு மாத்திரமன்றி ஏனைய உயிரினங்களுக்கும்உரித்துடைய ஒரேயொரு வாழிடமாக இருப்பதனால் அதைப் பாது காக்க வேண்டிய கடமைப் பொறுப்பு எம க்கு உண்டு எனவும் கருதப்படுவது தொடர் பிலான எமது உலகளாவிய சிந்தனைப் போக்கு என்பவற்றை மாற்றும் திசையில் நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய நவீன கருத்துகள் மேலும் மேலும் நகர்ந்து கொண் டிருக்கின்றன.

நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய இவ் வெண்ணக்கருவானது தெட்டத்தெளிவாக உள்ளதுடன், மனிதகுலத்திலுள்ள அனை வராலுமே அது நன்கு புரிந்துகொள்ளப் பட்டும் உள்ளது. நீடித்திருக்கத்தக்க தன்மை பற்றிய எண்ணக்கருவிற்குச்செயல் வடிவம் கொடுப்பதற்காக, தனியாள் மற்றும் தேசிய மட்ட முயற்சிகள் தொடக்கம் உலகளாவிய மட்ட முயற்சிகள் வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், வேறு எதுவுமன்றி மனித இனமே தவறுக்குப் பொறுப்பாளியாகவுள்ள, பாழ்படுத்தும் வகையிலான இந்த உலகளாவிய சுற்றுச் சூழல் பாதிப்புகளுடன்ஒப்பிடுகின்ற போது, இம்முயற்சிகள் இன்னும் போதுமானதாக இல்லை.

இருந்தபோதிலும், இயற்கைத் தொகுதி க்கு ஏற்படும் பாதிப்புகளை மட்டுப்படுத் துவதற்கான அதன் ஆற்றலை விடத் துரித மான வேகத்தில் இடம்பெறும், பூமி மீதான பாதிப்புகளின் தற்போதைய நிகழ்வு வீதத் தையும் அளவையும் கவனத்திற் கொள்கை யில், இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலான ஒரு கூட்டு நட வடிக்கை எடுப்பதற்கு மனித இனம் தவறு மாயின், எமது செயற்பாடுகள் காரணமாக இப்புவியை நாமே மனித இனம் வாழ முடியாத ஒரு கோளாக மாற்றுதல் என்பது நிகழ்வுச் சாத்தியமுடைய ஒன்றாகும்.

புவியை எதிர்காலத்தில் மனித இருப்பு க்குச் சவால் நிறைந்த ஒன்றாக ஆக்குவ தற்கு எமது பொறுப்புணர்ச்சியற்ற நடத் தையே காரணமாக உள்ளது என்பதை ஏற் றுக்கொள்வதற்கு அல்லது புரிந்துகொள் வதற்கு நாம் தவறியதன் விளைவாகவே, மனித இனம் உலகளாவிய இச்சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத்தோற்று வித்துள்ளது. நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய ஓர் உண்மை யாதெனில், இப்பூமிக்கு மனிதன் தேவை யில்லை: மனிதனுக்கே இப்பூமி தேவைப் படுகின்றது என்பதாகும். மனித இனமா னது என்றும் மாறாத இவ்வுண்மையை மிக விரைவில் புரிந்துகொள்ளும் என நம்புவோமாக! ■

# அபிவிருத்தியைப் புரிந்துகொள்ளல்: பொருளாதார வளர்ச்சியும் ஏனைய நோக்குநிலைகளும்

நிலக்ஷி டீ சில்வா[1]

வறுமைப் பகுப்பாய்விற்கான நிறுவனம் (CEPA)

**அறிமுகம்**

கடந்த நூறு வருட காலத்தில் உலகம் துரிதமாக மாற்றமடைந்துள்ளது. தற்போது நாளாந்த வாழ்க்கையின் அங்கங்களாகக் கருதப்படுகின்ற மின்சாரம், அதி வேகப் பயணங்களைச் சாத்தியப்படச் செய்துள்ள வாகனங்கள், செல்லிடத் தொலை பேசி, நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், தொலைக் காட்சிப் பெட்டி, இணையம் போன்றன ஒப்பிட்டுரீதியாக மனித வரலாற்றின் இக்குறுகிய காலகட்டத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வுலகானது சனத் தொகை, பொருளாதாரம் ஆகிய இரண்டும் குறித்தவகையில் பெருக்கல் விருத்தி அடிப்படையில் வளர்ச்சியடைந்துள்ளது; 1900மாம் ஆண்டில் 1.6 பில்லியனாக இருந்த இப்புவிக் கோளத்தின் சனத்தொகை 2011ல் 7 பில்லியனாக அதிகரித்தது. அதேவேளை, உலகளாவிய உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 1900களில் இருந்ததை விட 50 மடங்கு, அதாவது 60 றில்லியன் அமெரிக்க டொலருக்கும் கூடுதலாக, அதிகரித்துள்ளது (உலக வங்கி, 2008). தற்போது, ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு கணினி வழங்கு வதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டு அத்திட்டங்கள் முன்னேற்றகரமான நிலையில் உள்ளன. அதேவேளை, முழு உலகிற்குமே 15 கணினிகள் போதுமானதாக இருக்கும் என கணினி கண்டுபிடிக்கப்பட்ட காலகட்டமான 1940களில் எதிர்வுகூறப் பட்டது (Maynard,2012). ஒட்டுமொத்தமா கப் பார்க்கையில், பொருளாதார வளர்ச்சி யும் அபிவிருத்தியும் கடந்த நூற்றாண்டின் தனிப்பண்புகளாக இருந்து வந்துள்ளன என்பதை அனேகர் ஏற்றுக்கொள்வர்.

மேம்பட்ட வாழ்க்கைத்தரத்தைப் பொறுத் தவரை உலகெங்குமே அதிகளவு சாத னைகள் நிகழ்ந்துள்ளன. 1970களிலிருந்து சராசரி உலக வருமானம் இரு மடங்களுக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளதுடன், இன்று மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருட் கள் மற்றும் சேவைகளின் தொகுதி, எண்ணிக்கை மற்றும் தரம் என்பனவும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்குப் பெருகியுள்ளன. அனேகமாக எல்லா நாடு களிலுமே ஆயுட்கால எதிர்பார்ப்பு அதி கரித்துள்ளதுடன், இன்று பிறக்கும் ஒரு குழந்தை, வரலாற்றின் எக்காலத்திலும் காணப்படாத அளவுக்கு, நீண்ட காலத் திற்கு உயிர் வாழுமென எதிர்பார்க்க முடி யும். சிறுவர்கள் மேலும் மேலும் கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளனர். 1960களில் 57 சதவீதமாக இருந்த பாடசாலைச் சேர்வு வீதம் தற்போது 85 சதவீதமாக அதிக ரித்துள்ளது. இன்று உலகெங்கும் உள்ள மக்கள் முன்னர் எப்போதையும் விட உயர் வான கல்வி மட்டத்தைக் கொண்டுள்ளனர்; 1960ல் சராசரியாக 15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்கள் 4 வருடங் களுக்கும் குறைந்த பாடசாலைக் கல்வி யையே பூர்த்தி செய்தவர்களாக இருந்தனர்; 2012ம் ஆண்டிற்குள், இவ்வெண்ணிக்கை யானது உலகளாவிய ரீதியில் இரட்டிப்பாகி யதுடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடு களில் மும்மடங்காக அதிகரித்தது (UNDP, 2010). கடந்த 40 வருடங்களுக்கு மேற்பட்ட கால நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கையில், உலகெங்குமே மெச்சுதலுக்கு உரிய முன் னேற்றம் இருந்து வந்துள்ளது என 2010ம் ஆண்டிற்கான மனித அபிவிருத்தி அறிக்கை தெரிவிக்கின்றது.

இருந்தபோதிலும், எமது தற்போதைய அபிவிருத்தி மாதிரிகள் தொடர்பில் பதற்ற நிலைக்கான அறிகுறிகளும், மறைபொரு ளாகவுள்ளதும் அனைத்தையும் பாதிக்கத் தக்கதுமான பிரச்சினைகளும் படிப்படி யாக அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடிய தாக உள்ளது. உலக வங்கித் தரவுகளின்படி, 1.4 பில்லியன் மக்கள் இன்னும் வறுமை நிலையில் வாழ்கின்றனர் அல்லது நாளொன்றுக்கு 1.25 அமெரிக்க டொலருக் கும் குறைவான வருமானம் பெறுவோ ராக உள்ளனர் (ஐ. நா. பொருளாதார மற் றும் சமூக விவகாரப் பிரிவு, 2011). இது தவிர, உலகெங்கும் பட்டினியால் வாடு வோரின் எண்ணிக்கை 963 மில்லியனா குமென உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. பெரும் எண் ணிக்கையான சிறுவர்கள் சலிப்பூட்டும் வகையிலும் சமூகரீதியாகப் புறந்தள்ளப் பட்ட நிலையிலும் வாழும் அதேவேளை, வறுமை காரணமாக நாள் ஒன்றுக்கு 25,000 சிறுவர்கள் இறக்கின்றனர் எனவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) மதிப் பிட்டுள்ளது. கடந்த 40 வருடகாலத்தில் ஏற்பட்ட மனித முன்னேற்றங்கள் பற்றி மனிதவள அபிவிருத்தி அறிக்கை குறிப் பிட்டுள்ள அதேவேளை, அத்தகைய முன் னேற்றத்தில் காணப்படும் நிலையற்ற தன்மை, நாடுகளைப் போன்று தனியாள் மட்டத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையில் மேலும் அதிகரித்துச் செல்லும் ஏற்றத்தாழ்வுகள் என்பன தொடர்பான கரிசனைகளையும் அது முன்வைக்கின்றது (UNDP, 2010). அதேவேளை, உலக பொரு ளாதார முறைமைகள் அதிகளவு நெருக்கடி களுக்கு உட்படுவதற்கான போக்குகளை வெளிப்படுத்துகின்றன; உறுதியற்ற நிலை யும் எளிதில் மாறும் தன்மையும் ஒரு 'புதிய இயல்புநிலையாக' ஆகியுள்ளன எனும் கருத்தை உணவு, எரிபொருள், நிதி நெருக்கடிகளிலிருந்து காலநிலை மாற்றம் வரையான பிரச்சினைகள் தொடர்பான அண்மைக்கால விவாதங்களில் சில ஆய் வாளர்கள் முன்வைத்துள்ளனர் (Haddad மற்றும் ஏனையோரின் ஆக்கத்திலிருந்து Kanbur என்பவரால் மேற்கோள் காட்டப் பட்டவை). இந்நிகழ்வுகள் தற்போதைய அபிவிருத்தி மாதிரி எடுத்துக்காட்டுகளின் தொழிற்பாடுகளை அளவிடுவதற்கான ஒரு பரிசோதனையாக அமைந்துள்ளது டன் அபிவிருத்தி என்றால் என்ன, அது எவ்வாறு நிகழ்கின்றது என்பது தொடர் பான மிக முக்கியமான கோட்பாடுகள் குறித்து ஏராளமானோர் சந்தேகம் எழுப்பு வதற்கும் வழிவகுத்துள்ளன. ஒரு புறத்தில் பொருள்முதல் உலகு சார்ந்த முன்னேற்றத் திற்கும், மறுபுறத்தில் மனித நன்னிலை யானது எவற்றை உள்ளடக்கியுள்ளது என்ப தைப் பற்றிய புரிதலுக்கும் இடையில் காணப்படும் தீர்க்கப்படாத பதற்றநிலை யானது இவ்விவாதத்தின் மிக முக்கிய மான பகுதியாக உள்ளது. இது பற்றி அண் ணளவாக நூறு வருடங்களுக்கு முன்னர் கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி பின்வரு மாறு எச்சரித்திருந்தார்:

> "எமது நாகரிகத்தை இழிவுபடுத்துவதன் மூலம், எண்ணற்ற மக்களின் மனநிறைவை ஒரு தலைமுறைக்குள்ளேயே அழித்துவிட முடியும்; உற்பத்திப் பெருக்கம் காரணமாக உள்ளூர்ச் சந்தை பொருட்களால் நிரம்பி வழிகின்றது; கண்ணியமான ஒரு கலை ஞனால் அவற்றுடன் போட்டியிட முடியாது; தொழிலாளர் நலன்புரி அமைப்புகள், கைவி னையாற்றலின் தரம் என்பவற்றுடன் சமூகத் தின் தொழிற்கல்விக் கட்டமைப்பு வலுவிழந் துவிட்டது; கலைஞனிடமிருந்து அவனது கலை பறித்தெடுக்கப்பட்டுள்ளதுடன், 'தொழில்' ஒன்றைத் தேடுவதற்கும் அவன் நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளான்; இறுதியில், புராதன சமூகமானது கைத்தொழில்மயமாக்கப்படு வதுடன், வாழ்க்கையை விட வணிகம் முற்

பட்டு நிற்கும் எமது சமூகத்தைப் போன்ற, பிற சமூகங்களின் மட்டம் வரைக்கும் தாழ்த்தவும்படுகின்றது.[2]"

இச்சூழமைவில், அபிவிருத்தி பற்றி மீளச் சிந்திப்பது தொடர்பான கருத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு, அதாவது அபிவிருத்தி என்பது எது, அபிவிருத்தியை எவ்வாறு அடைய முடியும் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்களை ஆராய்வதற்கு, இது உகந்த தருவாய் ஆகும். அத்தகைய ஒரு மதிப்பீட்டை மேற்கொள்வதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும். அதேவேளை, அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்த, தகவல்கள் நிறைந்த கருத்தாழமுள்ள விவாதங்கள் ஏராளமாகக் காணப்படுவதால், இம்முயற்சியானது அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றாக அமையாது. எனினும், இக்கருத்துகளில் சில இலங்கைச் சூழமைவிற்கு எந்தளவு பொருத்தமானதாக இருக்கக்கூடும் என்பதை ஆராய்வதுடன், அவற்றை எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதைப் பற்றிய ஒரு கருத்தாடலுடன் இக்கட்டுரை நிறைவடைகின்றது.

**முக்கியமான மாதிரி எடுத்துக்காட்டு பற்றிய விமர்சனங்கள்**

கடந்த 60 வருட காலத்தில், அபிவிருத்தி தொடர்பான மிக முக்கியமான சிந்தனையானது பொருளாதார வளர்ச்சி பற்றிய கோட்பாட்டிலேயே சிறப்புக் கவனம் செலுத்தி வந்துள்ளது. இது தொடர்பில் ஓர் ஒற்றைத் தனிமுறைச் சிந்தனையை துல்லியமாக இனங்காண்பது கடினமானதாக இருக்கும் அதேவேளை, முதலாளித்துவம், சந்தையால் நெறிப்படுத்தப்படும் அபிவிருத்தி, போட்டித்தன்மையும் இலாப நோக்கமும், தனியாள்வாதம், உற்பத்தித் திறனும் செயற்திறனும் எனப் பல்வேறு விதமாக அழைக்கப்படுகின்ற ஆனால் ஒரே மாதிரியான கருத்துகளைக் கொண்ட எண்ணக்கருக்களின் ஒரு தொகுதி காணப்படுகின்றது. உயர் வருமானம் அல்லது நுகர்வு உயர்தரம் வாய்ந்த நன்னிலைக்கு நிகரானதாகக் கருதப்படுகின்றது. இதன் விளைவாக, "கடந்த ஐந்து தசாப்தங்களாக, உலகெங்கும் பொருளாதார வளர்ச்சிக்கான செயல்முயற்சியே மிக முக்கியமான ஒரேயொரு கொள்கை இலக்காக இருந்து வந்துள்ளது" என நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (Jackson, 2009). இச் சிந்தனைப் போக்கின் துணைவிளைவை ஒரு நாட்டின் பொருளாதாரரீதியான நன்னிலையை அறவிடுவதற்கான ஒரு கருவியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பயன்படுத்துவதில் காணமுடியும். இருந்தபோதிலும், நன்னிலை என்பது அடியோடு இல்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும், குடும்ப மற்றும் தனியாள் நுகர்வைக் காட்ட முடியாத சந்தை உற்பத்தி பற்றிய ஓர் அளவீடாக மாத்திரமே இது உள்ளது (Stiglitz மற்றும் ஏனையோரும், 2008).

பொருளாதார வளர்ச்சியால் நெறிப்படுத்தப்படும் மாதிரி எடுத்துக்காட்டில் காணப்படும் இக்குறைபாடுகள் புதிய சிந்தனைகளைத் தோன்றச் செய்துள்ளன. இதன் நேரடியான எதிர்வினை யாதெனில், உயர் பொருளாதார வளர்ச்சியால் மாத்திரம் அதிகளவான நன்னிலையை வழங்கவோ அல்லது வறுமையைக் குறைக்கவோ முடியாது, என்பதை நிரூபிப்பதற்கான செயல்முறைசார்ந்த சான்றுகளைக் கையாளுவதன் பொருட்டு, சந்தையால் நெறிப்படுத்தப்படும் பொருளாதார மரபினுள் வறியவர்களுக்குச் சாதகமான பொருளாதார வளர்ச்சியை அறிமுகப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அவர்களை உள்ளடக்குதல் என்பவை தொடர்பான கருத்தாழமுள்ள விவாதங்கள் தோற்றம் பெற்றமையாகும். பொருளாதார வளர்ச்சியின் இயல்பானது பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இக்கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, பொருளாதாரக் காரணிகளின் முக்கியத்துவம் அல்லது பொருளாதார வளர்ச்சிக்கான தேவை என்பவை தொடர்பில் அவை சந்தேகம் எழுப்புவதில்லை. ஆனால், ஏனைய கோட்பாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கும் மனித நன்னிலைக்கும் இடையிலான தொடர்பைத் தெளிவுபடுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளன. உதாரணமாக, சென் அவர்களின் இயலாற்றல் மற்றும் தொழிற்பாட்டு அணுகுமுறையானது, ஒரு நபரின் வாழ்க்கையை பல்வேறுபட்ட 'செயல்களும் இருப்புநிலைகளும் (தொழிற்பாடுகள்)', மற்றும் இத்தொழிற்பாடுகள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு அவருக்கு உள்ள சுதந்திரம் (இயலாற்றல்கள்) என்பவற்றின் ஒரு கூட்டுச்சேர்க்கையாகக் கருத்துருக் கொள்கின்றது. போதுமானளவு போசாக்குணவைஉட்கொள்ளுதலும் முதிர்ச்சியடைய முன்னரான மரணங்களிலிருந்து தப்பிப்பிழைத்தலும் என்பவற்றில் தொடங்கி, அரசியல் வாழ்வில் செயல் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுத்தறிவைக் கொண்டிருத்தல் வரை இந்த இயலாற்றல்கள் விரிவடைந்து செல்கின்றன. இந்த இயலாற்றல் அணுகுமுறையானது மனிதக் குறிக்கோள்கள் மற்றும் தனியாள் ஒருவர் தனக்கு முக்கியமானவை எனக் கருதும் இலக்குகளை அடைவதற்கான அவரது ஆற்றலை மதித்தல் என்பவற்றில் சிறப்புக்கவனம் செலுத்துகின்றது (Stiglitz மற்றும் ஏனையோரும், 2008). ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்த உரிமை அடிப்படையிலான இந்த அணுகுமுறையானது சிந்தனைப் போக்கை பொருளாதார வளர்ச்சிக்கு அப்பால் நகரச்செய்து, கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்துதல், பால்நிலைச் சமத்துவம், தாய்-சேய் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் தொடர்பான நீடித்திருக்கத்தக்கதன்மை போன்ற மனித நன்னிலைக்கு இன்றியமையாதனவாகக் கருதப்படும் பல்வேறுபட்ட பரிமாணங்கள் மீது சிறப்புக்கவனம் செலுத்துவதற்கான மற்றுமோர் முயற்சியாக காணப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சி மாதிரி பற்றிய ஒத்துப்போகும் வகையிலான மிகக் கடுமையான ஒரு விமர்சனம் சுற்றுச்சூழலியலாளர்களின் நோக்கு நிலையிலிருந்து எழுகின்றது. இந்நோக்குநிலையின் படி, பொருட்கள் சேவைகள் உற்பத்தியின் முடிவில்லா வளர்ச்சிக்கும் இப்புவிக் கோளத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட வளங்களுக்கும் இடையில் முரண்பாடு உண்டு. இப்பிரச்சினையை, பொருளாதார வளர்ச்சியின் வரையறைகள் தொடர்பான ரோம் கழக அறிக்கை (Club of Rome's Limits to Gwoth Report) போன்ற மிகுந்த தாக்கவிளைவை ஏற்படுத்தவல்ல ஆய்வுப்பணிகள் 1972ல் எழுப்பியிருந்தன. உலக சனத்தொகை, கைத்தொழில்மயமாக்கம், சுற்றுச்சூழல் மாசுறுதல், உணவு உற்பத்தி என்பவற்றின் வளர்ச்சிப் போக்குகளும் இயற்கை வளங்கள் குறைவடைதலும் மாற்றமின்றித் தொடருமாயின், அடுத்துவரும் நூறு வருடங்களுள் இப்புவிக்கோளத்தில் பொருளாதார வளர்ச்சிக்கான வரையறைகள் எட்டப்பட்டு விடும் என அவ்வறிக்கை எச்சரிக்கின்றது (Meadows மற்றும் ஏனையோர், 1972). உண்மையில், சுற்றுச்சூழலைப் பாழ்படுத்துவதற்கான ஊக்குவிப்பை அத்தகைய உற்பத்தி நலன்சார்ந்த சிந்தனைப் போக்கால் வழங்க முடியும்; பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்காக மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் அளவீட்டு முறையான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது சுற்றுச்சூழலை கவனத்திற் கொள்ளத் தவறி விட்டது; வெட்டி வீழ்த்தப்படும் வரையில் ஒரு மரத்திற்கு 'பெறுமதி' இல்லை என்பன போன்ற முறைகேடுகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நோக்கம் காரணமாக அமைந்துள்ளது (TEEB, 2010). பொருளாதார வளர்ச்சியால் நெறிப்படுத்தப்படும் மாதிரி எடுத்துக்காட்டு கூட எதிர்காலத்தை விட 'தற்காலத்திற்கு' முன்னுரிமையளிக்கின்றது. இது எதிர்காலச் சந்ததிகளின் நன்னிலைக்கு கேடு விளைவிக்கும் வகையிலான, நீடித்திருக்கச் செய்யமுடியாத நுகர்வுக்கு வழிவகுக்கின்றது.

அதிகரித்துச்செல்லும் வருமானம் மற்றும் நுகர்வு மட்டங்கள் குடும்பங்களின் நன்னிலையை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாக அமையாது என்பதற்கான செயல்முறை சார்ந்த அனுபவச் சான்றுகளை, வறுமைப் பகுப்பாய்விற்கான நிலையத்தால் (சினிறிகி) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு

கள் வழங்குகின்றன. சராசரி நட்டஈட்டுப் பொதிக்கும் மேற்பட்ட ஒரு தொகைப் பணத்தை வழங்குவதால், இடம்பெயர் விக்கப்பட்ட மக்களின் வாழிடத்தில் காணப்பட்ட கிராமிய வாழ்க்கை முறை மற்றும் பசுமைச் சுற்றுச்சூழல் போன்றவற்றின் இழப்பை ஈடுசெய்ய முடியாது, என்பதை கொழும்பு - மாத்தறை அதிவேகப் பாதை நிர்மாணம் காரணமாக தமது விருப்புக்கு மாறாக வெளியேற்றப்பட்ட மக்களின் இடப்பெயர்வைக் கண்காணித்ததன் மூலம் பெறப்பட்ட முடிவுகள் எடுத்துக்காட்டு கின்றன. அவர்களுக்கான வீடமைப்பின் தரத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தின் மத்தியிலும், மக்கள் மகிழ்ச்சியற்றவர்களாக இருந்ததுடன், முழுமையான கிராமியச் சூழலின் இழப்பு, நிழல் மற்றும் குளிர்மையின் இழப்பு, பழங்களையும் ஏனைய விளை பொருட் களையும் தரும் மரங்களின் இழப்பு என இதற்கு பல்வேறு காரணங்கள் தெளிவாக எடுத்துரைக்கவும்பட்டன. அனேகமான எடுத்துக்காட்டுகளில், தமக்குச் சொந்தமாயிருந்த காணிகளை இழந்தமைக்காக மாத்திரமன்றி, பங்கிடப்பட்டிருந்த தனியார் காணிகள் மற்றும் பலருக்கு உடைமையான காணிகள் என்பவற்றை இழப்பது தொடர்பில் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் தாக்கவிளைவுகள் பற்றியும் இக் குடும்பங்கள் கவலையுடன் இருந்தன (Jayawardene, 2011).

அதிகரித்தளவிலான வீதி இணைப்பு குடும்ப மட்டத்தில் வருமான அதிகரிப்பிற்குக் காரணமாக அமையும் எனும் எதிர்பார்ப்புடன் இரத்தினபுரி மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட ஒரு கிராமிய இணைப்புச் செயற்திட்டம் மூலம் செப்பமான வீதிகள் அமைக்கப்பட்டன. இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதற்கு முன்னர், போக்குவரத்துப் பாதைகளில் காணப்பட்ட தடங்கல்கள் மிக முக்கியமாக சிறுதோட்ட விவசாயத்தில் ஈடுபட்டு வந்த இச்சமூகத்தின் உற்பத்தித் திறனை மிக மோசமாக மட்டுப்படுத்தி இருந்தன. வசதி மற்றும் ஓய்வு நேரம் ஆகிய காரணங்களுக்காகவே சிறந்த வீதி இணைப்புக்கு மக்கள் மத்தியில் ஆதரவு கிடைத்தது என்பதை செயற்திட்ட மதிப்பீடுகள் வெளிப்படுத்தின (CEPA, 2009). இருந்தபோதிலும், இவ்விரு காரணங்களுமே ஆள்வீத வருமானம் அல்லது வறுமை தொடர்பான ஏனைய குறிகாட்டிகளின் அளவினை நேரடியாக அறுதியிட்டுக் கூற வில்லை. பயணம் மற்றும் பொழுதுபோக்கிற்கும் சமூகச் செயற்பாடுகளுக்குமான நேரம், நாளாந்தக் குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் நேரம் என்பவற்றிலான அதிகரிப்பு, வீட்டைப் பேணுதல், வாழ்வாதாரமும் பொது வசதிகளும் முதலியவற்றிற்குத் தேவையான அனைத்து கடமைப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் அதிகளவான சிக்கல் இன்மையும் வசதியும் காணப் படுவதால், நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்கள் இப்புதிய பாதையுடன் தொடர்புடைய சாதகமான விடயங்களை தெளிவுபட எடுத்துரைத்தனர். அதேநேரத்தில், ஒப்பீட்டளவில் குறைந்தளவான வருமான மட்டங்களுடன் வசிக்கின்ற போதும், அனேகமான குடும்பங்கள் கூடியளவு வருமானத்தைச் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகளை விட வாழ்க்கையின் ஏனைய அம்சங் களைத் தெரிவு செய்கின்றன என் பதை இக்கிராமிய இணைப்புச் செயற்திட்டம் மறைமுகமாகத் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறே, சில குடும்பங்கள் தமது வருமான அதிகரிப்பின் மீது குறிப்பிடத் தக்களவு வரையறைகளை விதித்துள்ளன என்பதை புத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட, பொருளாதார வளர்ச்சியில் மக்களை உள்ளடக்குதல் தொடர்பில் காணப்படும் குடும்ப மட்டத்திலான வரையறைகள் பற்றிய ஓர் அண்மைக்கால ஆய்வுமுடிவு (CEPA, 2011) வெளிப்படுத்துகின்றது. அதை ஓர் இளைய ஆண் தொழில்முயற்சியாளரின் வார்த்தைகளில் குறிப்பிடுவதாயின்:

> "கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக நான் இந்த நிலையிலேயே இருந்து வருகிறேன். நான் அதிகளவான நட்ட இடர்வாய்ப்புகளை எதிர்கொள்வதில்லை. எனது செலவுகளை ஈடுசெய்வதற்கு முயற்சிக்கிறேன். விற்பனையின் மூலம் சம்பாதிக்கும் இந்த அளவு எனக்குப் போதும்."

குடும்பங்கள், தமது நன்னிலைக்கு இன்றியமையாதனவாக உள்ள ஏனைய அம்சங்கள் குறித்த உணர்வுடையவையாக இருப்பதுடன், சிலவேளைகளில் இப்பரிமாணங்களுக்கும் அதிகரித்தளவிலான வருமானத்திற்கும் இடையில் சமநிலை காணவேண்டிய ஒரு நிர்ப்பந்தச் சூழல் காணப்படுகின்றது என்பதையும் மேலே குறிப்பிடப்பட்ட கருத்துரைகள் மறைமுகமாகத் தெரிவிக்கின்றன.

பொருளாதார வளர்ச்சியும் பொருள் முதல் உலகுசார் முன்னேற்றமும் உள்ளடங்கியுள்ள விடயங்களை விட அதிகமானவற்றை மானிட நன்னிலை உள்ளடக்கியுள்ளது என்பது குடும்ப மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, சில குடும்பங்கள் இப்புரிதலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன என்பதையும் பல்வேறு ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட இச் சிறு விபரிப்புகள் மறைமுகமாகச் சுட்டுகின்றன. அபிவிருத்திக் கொள்கைகளில் இவ்வம்சங்களை உள்ளடக்குவதில் பொது நிலைப்பட்ட அபிவிருத்திக் கோட்பாடுகளும் தனிமுறைச் சிந்தனைகளும் தாமதமானவையாக இருக்கும் அதேவேளை, புதியனவும் பழையனவும் உட்பட அபிவிருத்தி பற்றி பெரும் எண்ணிக்கையிலான 'மாற்று மாதிரி எடுத்துக்காட்டுகள்' காணப் படுகின்றன. இவை மானிட நன்னிலை எனும் இப்பிரச்சினை பற்றி, அதாவது அபிவிருத்தியின் இறுதி இலக்கு பற்றி, சிந்திப்பதற்கான கோட்டுபாட்டுத் தொகுதிகளை வழங்குவதற்கு முயற்சிக்கின்றன.

### மாற்று அபிவிருத்தி மாதிரி எடுத்துக் காட்டுகள்

மாற்று அபிவிருத்தி மாதிரிகளின் தொகுதியின் ஓர் அந்தத்தில் இருப்பது யாதெனில், நிச்சயமான 'எதிர்மறை வளர்ச்சிப் பொருளியல்' ஆகும். இந்த எதிர்மறை வளர்ச்சிப் பொருளியலானது, குறிப்பாக சேர்ஜ் லற்றோச் (Serge Latouche) என்பவரின் ஆராய்ச்சியுடன் இணைந்த வகையில், முதன்மையான ஓர் ஐரோப்பியப் புலமைசார் இயக்கமாக 2008ல் எழுச்சி பெற்றது. சக்தி வளங்கள் குறைவடைந்து செல்லுதல் (எண்ணெய், எரிவாயு, யுரேனியம், நிலக்கரி முதலியன), அதிகரித்துச் செல்லும் மூலப்பொருள் பற்றாக்குறை (அருமைத்தன்மை), சுற்றுச்சூழற் சீரழிவு; வளிமண்டல வெம்மையுறல் விளைவு (greenhouse effect), புவி வெப்பமாதல், உயிர்ப்பல்லினத்தன்மையின் இழப்பும் சுற்றுச்சூழல் மாசடைதலும், தாவர-விலங்குத் தொகுதிகளினதும் மனிதனதும் ஆரோக்கியச் சீர்கேடு, மற்றும் அதிகரித்துச் செல்லும் உலகளாவிய சமத்துவமின்மை என்பவற்றைக் கவனத்திற் கொள்கையில், பொருளாதார வளர்ச்சியானது தீர்வாக அன்றி ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது என்பதற்கு ஆதாரமான கருத்துகளை இச்சிந்தனையாளர்கள் முன்வைக் கின்றனர் (Foster, 2011). நாடுகள் தாமாக முன்வந்து பொருளாதார முறைமையின் அளவை, அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியை, குறைப்பதை இவர்கள் ஊக்குவிக்கின்றனர். ஆயினும் கொள்கை விளைவுகள் தொடர்பில் இந்த எதிர்மறை வளர்ச்சிக் கோட்பாடானது, குறிப்பாக நிதி நெருக்கடியின் விளைவாக, அனேகமான ஐரோப்பிய நாடுகளில் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி மீதான சிறப்புக் கவனத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கான அழைப்பு, ஐக்கிய இராச்சியத்தின் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி தொடர்பான ஆணைக்குழுவின் 'பொருளாதார வளர்ச்சியற்ற செல்வச்செழிப்பு" எனும், மிகுந்த தாக்கவிளைவை உண்டாக்கவல்ல அறிக்கையிலும் எதிரொலித்துள்ளது (Jackson, 2009). எதிர்மறை வளர்ச்சிக் கோட்பாட்டாளர்களை ஒத்தவர்கள் முடிவில்லாப் பொருளாதார வளர்ச்சிக்கு எதிராகவும் சுற்றுச்சூழலுக்கு ஆதரவாகவும் கருத்துகளை முன்வைக்கும் அதேவேளை, 'செல்வச்செழிப்புக்கு' பொருளாதார வளர்ச்சி தேவையில்லை என்பதோடு, கட்டற்ற

பொருளாதார வளர்ச்சியானது உண்மையில் செல்வச்செழிப்பை வலுவிழக்கச் செய்யக்கூடும் என்பதற்கும் ஆதரவான கருத்துகளை இவ்வறிக்கை மேலும் முன்வைக்கின்றது. அதன் மையப்பகுதியில், 'செல்வச்செழிப்பு' என்பதற்கு, 'நாம் வெற்றி பெறும் நிலை' என மீள்வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஏனையோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் செயற்பொறுப்புகளையும் உள்ளடக்கும் ஒரு நிபந்தனையாக, முக்கியமான ஒழுக்கம் சார்ந்த அல்லது நன்னெறிசார்ந்த ஓர் அம்சத்தையும் அது ஒரு கூறாகக் கொண்டுள்ளது. சுருக்கமாகக் கூறின், "என்னைச் சூழ உள்ளோரின் செல்வச்செழிப்பானது எனது செல்வச்செழிப்பு நிலையைச் சார்ந்திருப்பதால், எனது செல்வச்செழிப்பானது அவர்களது செல்வச்செழிப்பு நிலையைச் சார்ந்துள்ளது" என்பது இதன் பொருளாகும். செல்வச்செழிப்பை இச்சொற்பதங்களில் வரையறுத்தலானது, இன்றைய உலகப் பொருளாதாரத்தின் ஒரு தனிப்பண்பாக அமைந்துள்ள, சமத்துவமின்மை என்பது வெறுமனே அபிவிருத்தியின் தவிர்க்கமுடியாத ஒரு துணைவிளைவாக அன்றி, மானிடச் செல்வச்செழிப்பிற்கான கடுமையான அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. வளர்ந்துவரும் ஒரு பொருளாதாரத்தை விட, உறுதியாகவுள்ள ஒரு பொருளாதாரத்தில் காணப்படும் நிறைவான மானிட வளர்ச்சியைச் சாத்தியப்படச் செய்வதற்கும் நுகர்வுவாதத்தை, குறிப்பாகப் படுகடனால் தூண்டப்படும் நுகர்வுவாதத்தை, உறுதியாக நிராகரிப்பதற்குமான கொள்கைகளுக்கான தெளிவான பரிந்துரைகளுக்கும்கூட செல்வச்செழிப்பு பற்றிய இம்மீள் வரைவிலக்கணம் வழிவகுக்கின்றது. உயர்மட்ட உற்பத்தியால் மாத்திரமே இல்லாதொழிக்கக்கூடிய, வேலைவாய்ப்பு தொடர்பில் கீழ்நோக்கிய நெருக்குதலைத் தோற்றுவிக்கும், தொடர்ச்சியாக ஊழிய உற்பத்தித்திறனை நாடும் முதலாளித்துவ நலன்சார்ந்த தர்க்கம் தொடர்பான ஒரு மீள்சிந்தனைக்கான பரிந்துரைகளையும் இது முன்வைக்கின்றது. இதற்குப் பதிலாக அது வேலைகளைப் பகிர்வதையும் வேலை - வாழ்க்கைச் சமநிலையை மேம்படுத்துவதையும் ஊக்குவிக்கின்றது. இறுதியாக, மீள்பகிர்வு வழிமுறைகள் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வருமான வரிக் கட்டமைப்புகள், தரமான கல்வியைப் பெறுவதற்கான மேம்பட்ட வாய்ப்புகள், பாரபட்சம் காட்டுதலுக்கு எதிரான சட்டவாக்கங்கள், வளம்குன்றிய பகுதிகளுக்கான விசேட திட்டங்கள் முதலியன உள்ளடங்கலாக கொள்கைத் தீர்மானங்கள் போன்றவற்றின் ஊடாக, யாவருக்கும் பொதுவான செல்வச்செழிப்பு நிலையைத் தோற்றுவிக்கும் பொருட்டு, சமத்துவமின்மையை முழுமையாகக் கையாளுவதற்கான ஒரு வேண்டுகோள் கூட அதில் காணப்படுகின்றது.

இது தொடர்பான மற்றுமொரு நோக்குநிலையை, 'பௌத்தப் பொருளியல்' எனும் சொற்பதத்தினுள் பொதுப்படையாக உள்ளடங்கியுள்ள ஒரு தொகுதிப் படைப்புகள் வழங்குகின்றன. பல தசாப்தங்களுக்கு முன்னர் ஈ.எப். ஸ்கூமச்சர் (E.F. Schumacher) என்பவரால் பிரபலப்படுத்தப்பட்ட இக்கோட்பாடானது தாய்லாந்து மன்னரால் நிறைவுப் பொருளாதாரம் (Sufficiency Economy) எனும் எண்ணக்கருவின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்தது. ஒரு பொருளாதாரம் திட்டமிடப்பட்டு முகாமை செய்யப்படும் முறையில் இக்கோட்பாடானது முழு அளவிலான மற்றும் மிக்க தாக்கவிளைவுகளை ஏற்படுத்த வல்லது.

எடுத்துக்காட்டாக, ஸ்கூமச்சரின் (1973) கூற்றுப்படி, 'உழைப்பு' அல்லது வேலை என்பது தவிர்க்கமுடியாத ஒரு கேடாகும் எனும் கருத்தை நவீன பொருளியல் கோட்பாடுகள் நீடித்திருக்கச் செய்துள்ளன. தொழில்வழங்குனரின் நோக்குநிலையில் இருந்து பார்க்கின்றபோது, இது செலவு மிகுந்த ஒன்றாகும். எனவே, ஊழிய உற்பத்தித்திறனை மேலும் மேலும் அதிகரிப்பதன் மூலமாக அதை முடிந்தளவு இழிவு மட்டத்திற்குக் குறைப்பதை அல்லது இயந்திரத்தின் உதவியுடன் அதை மாற்றீடு செய்வதன் மூலமாக அவ்வூழியத்தை இல்லாதொழிப்பதை அவர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஊழியர்களின் நோக்கு நிலையில், வேலை என்பது ஒரு 'பயனொழிவுச் செயற்பாடாகும்'; தொழில்புரிவதற்கு ஒருவர் தனது ஓய்வு நேரத்தையும் ஓய்வமைதி நிலையையும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது என்பதுடன், கூலி என்பது அத்தியாகத்திற்கான இழப்பீட்டுத் தொகையாகும். 'ஒட்டுமொத்தத்தில், எவரதும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு இன்றி, அனேகமான சந்தர்ப்பங்களில் தொழிலாளரின் பயிற்சித்திறனற்ற கைகால் அசைவுகளுடன் மாத்திரம், முடிவுப் பொருட்களைத் துரித வேகத்தில் உற்பத்தி செய்வதன் பொருட்டு', பெருமளவு இலாபத்தை அடையப்பெறும் முயற்சியாக, தொழில் வழங்குனர்கள் முட்டாள்தனமான செயற்பாடுகள் எனும் அளவிற்கு சிறப்புத் தேர்ச்சியையும் தொழிற்பிரிவையும் ஊக்குவிக்கின்றனர். இதற்குப் பதிலாக பௌத்த போதனைகளைப் பயன்படுத்தி, அதாவது பின்வரும் மூன்று வகை வேலைத் தொழிற்பாட்டை பின்பற்றுவதற்கு ஆதரவான கருத்துகளை அவர் கூறுகின்றார். அவையாவன: தொழிலாளர்கள் தமது ஆற்றல்களைப் பயன்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்குமான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதல்; பொதுப் பணியொன்றில் ஏனையோருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தனது சுயநல மனப்பாங்கிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியப்பாட்டை ஏற்படுத்துதல்; பயன்நிறைவுடைய இருப்புநிலைக்குத் தேவைப்படும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல். வேலையின்மை என்பது வெறுமனே தொழிலாளர்களின் வருமானமின்மையுடன் மாத்திரமன்றி, அவர்களது வாழ்க்கையில் காணப்படும் எதனாலும் மாற்றீடுசெய்ய முடியாத தொழில்சார் ஒழுக்கக் குறைவுடனும் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகும். அத்தகைய ஒரு கோணத்தில் பார்க்கும்போது, அதிகளவான ஊழிய நகர்வாற்றலை அல்லது சிறந்த கூலி உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதன் பொருட்டு, ஒரு பொருளாதாரத்தை நிறைதொழில் மட்டத்திலும் குறைவான ஒரு நிலையில் வைத்து முகாமை செய்தலானது, பொருட்களையும் சேவைகளையும் மக்களைவிட முக்கியமானதாகவும் நுகர்வை ஆக்கச் செயற்பாட்டை விட முக்கியமானதாகவும் கருதுவதாக அமைந்துள்ளது. தொழிலினுடைய இயல்பின் மதிப்பை உண்மையாகப் புரிந்துகொண்டு அதைப் பிரயோகிக்க வேண்டுமாயின், உடலுக்கு உணவளிப்பது எந்தளவுக்கு முக்கியமானதோ அந்தளவிற்கு மூளைக்குத் தூண்டுதளிப்பதும் முக்கியமானதாகக் காணப்படுவதால், மனிதன் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அவனுக்கு ஊட்டமும் ஊக்குவிப்பும் அளிக்க வேண்டியுள்ளது என்பதற்கான திடமான ஆதாரங்களை குமாரசுவாமி, ஸ்கூமச்சர் போன்ற சிந்தனையாளர்கள் முன்வைக்கின்றனர். நிறைதொழில் மட்டம் காணப்படுவதுடன், அனைத்துத் தொழில்களையும் ஆக்கச் செயற்பாடுகளாக மதிக்கின்ற சூழல் நிலவும் ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பதை உறுதிப்படுத்துவதாக அபிவிருத்திக் கொள்கையின் நோக்கம் இருக்க வேண்டும்.

மறுபுறத்தில், நிறைவுப் பொருளாதாரமானது பிரச்சினையை நுகர்வுக் கோணத்திலிருந்து அணுகுகின்றது. நவீன முதலாளித்துவம் முக்கியமான சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆற்றலற்றதாக இருப்பதுடன், வருமானப் பகிர்வில் விரும்பத்தகாத ஏற்றத்தாழ்வுகளைத் தோற்றுவிப்பதையும் கவனத்திற்கொள்கையில், இவ்வெண்ணக்கருவானது நவீன முதலாளித்துவத்தை மிகக் கடுமையாக விமர்சிக்கின்றது. உற்பத்தி, நுகர்வு, பரிமாற்றம் என்பனவற்றை உச்சப்படுத்துதல் தொடர்பில் தன் மையமான (குறுகிய தன்னலப் போக்குடைய) கருத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கோட்பாடுகளை ஒத்ததாகவே நவீன முதலாளித்துவமும் காணப்படுகின்றது (UNDP Thailand, 2007). இதற்கு மாறாக, நிறைவுப் பொருளாதாரம் மிதவாதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது; இது கட்டுக்கடங்காத பொருளாதார வளர்ச்சியை விட பொருளாதார உறுதிப்பாட்டை ஆதரிப்பதுடன், நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியையும் முழுநிறைவான பேரினப்

பொருளாதாரக் கொள்கைகளையும் ஊக்குவிக்குகின்றது. தவிர பொருளாதாரச் செழிப்புநிலையின் நன்மைகளை நியாயமான முறையில் பங்கிடுவதையும் இது ஆதரிக்கின்றது. தனியாள், குடும்பம், சமூகம் ஆகிய அனைத்து மட்டங்களிலும் காணப்படும் தனிப்பட்ட நடத்தைகளுக்கான உத்தம நெறிமுறையாக வாழ்க்கையில் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதை இந்நிறைவுப் பொருளாதாரம் ஆதரிக்கின்றது. மேலும் முன்மதியுடன் அறிவைப் பிரயோகிக்கும் அதேவேளை, மிதவாதம், தற்சார்புநிலை, நேர்மை, நாணயம் போன்ற பண்புகள் பற்றி அது அறிவுரை கூறுகின்றது. பொருளாதார வளர்ச்சியை உச்சப்படுத்துவதை விட, பொருளாதார ரீதியான நிறைவே தனியாள், குடும்பம், மற்றும் சமூகத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதற்கு ஆதரவான கருத்துகளை அது கூறுகின்றது. ஒரு தனியாளால், மிகையான ஆடம்பர வாழ்க்கை அல்லது மட்டுமீறிய இன்பநுகர்வுச் செயல் இன்றி, கணிசமானளவு வசதியுள்ள ஒரு வாழ்க்கையை வாழக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதை நிறைவுப் பொருளாதாரம் ஏற்றுக்கொள்கின்றது. இவ்வெண்ணக்கருவிற்கு ஆதரவளிக்கும் வகையில், 1998 டிசம்பர் 4ம் திகதியன்று இடம்பெற்ற தனது உரையில் தாய்லாந்தின் மாண்புடை மன்னர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "ஒரு வருடைய விருப்பில் மிகுந்த முனைப்போ அல்லது திருப்திப்படுத்த இயலாதநிலையோ இன்றி, அனைத்து நாடுகளும் இந்த மிதவாத எண்ணக்கருவைக் கொண்டிருக்குமாயின், இவ்வுலகு மகிழ்ச்சி நிறைந்த ஓர் இடமாக இருக்கும்."

மேலே ஆராயப்பட்ட 'மாற்று' அபிவிருத்திச் சிந்தனையானது பல்வேறுபட்ட அறிவுத் துறைகள் மற்றும் கலாசாரச் சூழமைவுகளைத் தோற்றுவாயாகக் கொண்டுள்ளது. ஆயினும், அவை பல கருத்துகளை பொதுப்படையாகக் கொண்டுள்ளன. அபிவிருத்தி பற்றிய பொதுநிலைப்பட்ட கருத்தாழமுடைய விவாதங்களில் கூட அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மிக முக்கியமான ஒரு கருத்து யாதெனில், பொருளாதார வளர்ச்சியானது நன்னிலையை அளவிடுவதற்கான நிறைவான ஒரு கருவியாக இல்லை என்பதுடன், அப்பொருளாதார வளர்ச்சியால் அனைத்து மனிதத் தேவைகளையும் நிறைவு செய்ய முடியாது என்பதுமாகும். தவிரவும், இத்தனிமுறைச் சிந்தனையானது இவற்றுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக அமையாது, பொதுநிலைப்பட்ட கோட்பாடுகளுக்கு அப்பாற்சென்று, பொருள் முதல்நிலை சார்ந்த முன்னேற்றம் மானிட நன்னிலையின் இறுதி இலக்காக இராது என்பதற்கு ஆதரவான காரணங்களைக் கூட முன்வைக்கின்றது. இறுதி இலக்கு என்பது இயற்கையுடன் ஒத்திசைவான வாழ்க்கை, செல்வச் செழிப்பு நிலை, மானிட நிறை வளர்ச்சி, மனநிறைவு என்பவற்றிற்கான சூழ்நிலைகளைக் கொண்டிருத்தல் எனப் பல்வேறு வகையாகக் கருத்துருக் கொள்ளப்படுகின்றது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இவை இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை தொடர்பில் விருப்பார்வத்திற்குரிய சில தாக்கவிளைவுகளைத் தூண்டக்கூடியவையாக உள்ளன.

**இலங்கையில் இவ்வெண்ணக்கருக்களின் தாக்கவிளைவுகள்**

இலங்கை தனது அபிவிருத்தி வரலாற்றின் முக்கியமான ஒரு கட்டத்தில் உள்ள இந்நேரத்தில் இக்கருத்துகள் மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. நெடுநாள் நீடித்த மற்றும் வன்முறை நிறைந்த ஆயுத மோதலுக்கு மத்தியிலும், 1977லிருந்து வருடாந்தம் அண்ணளவாக 5 சதவீதமாகக் காணப்பட்ட, நீடித்திருக்கத்தக்க பொருளாதார வளர்ச்சியை மூன்று தசாப்தங்களாக இந்நாடு பேணி வந்துள்ளது. முப்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவந்த பொருளாதாரச் சீராக்கல்கள், இப்பொருளாதாரத்தை தன்னிறைவில் மாத்திரம் சிறப்புக்கவனம் செலுத்திவந்த உள்நோக்கிய பொருளாதாரத்திலிருந்து, போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதிசார்ந்த ஒரு பொருளாதாரமாக மாற்றியுள்ளன. நீடித்திருக்கத்தக்க இப்பொருளாதார வளர்ச்சியானது மிதமான சனத்தொகை வளர்ச்சியுடன் சேர்ந்து கடந்த மூன்று தசாப்த காலத்தில் ஆள்வீத வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கும், நுகர்வு தொடர்பான வறுமையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

ஆயினும் பொருளாதார வளர்ச்சியிலும் வறுமைக் குறைப்பிலும் காணப்படும் பிரதேசரீதியான, அதிகளவான ஏற்றத்தாழ்வுகளை தேசியமட்டத் தரவுகள் மறைக்கின்றன. மட்டக்களப்பு, மொனராகலை, பதுளை போன்ற மாவட்டங்களில் ஒப்பீட்டு ரீதியாக உயரளவு வறுமை காணப்படுகின்றது (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2011). அதேவேளை அரசாங்கச் செலவீனத்திலான வீழ்ச்சி காரணமாக, எமது மனித அபிவிருத்திச் சாதனைகள், குறிப்பாக இலங்கையின் ஒப்பீட்டளவில் உயரளவு மனித அபிவிருத்திச் சுட்டெண் தரவரிசைப்படுத்தலுக்குக் அடிப்படையாக அமைந்த கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகள், ஆபத்துக்கு உட்படுவதற்கான வாய்ப்பு நிலையில் உள்ளன. மெச்சுதலுக்குரிய எமது பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக அபிவிருத்திக் குறிகாட்டிகள் என்பவற்றின் மத்தியிலும், பெரும் எண்ணிக்கையான மக்களுடன் சம்பந்தப்படும் வகையிலான நன்னிலைக்கு அண்மித்த நிலையைக் கூட நாம் இன்னும் அடையவில்லை, என்பதை தீர்க்கப்படாத இனரீதியான பதற்றம், சமூகத்தில் காணப்படும் உயரளவான குற்றச்செயல்களும் வன்முறையும், அதிகளவிலான தற்கொலையும் தற்கொலை முயற்சிகளும் போன்ற ஏனைய காரணிகள் சுற்றுமுகமாகத் தெரிவிக்கின்றன.

இச்சூழமைவில் பொருளாதார வளர்ச்சியால் நெறிப்படுத்தப்படும் அபிவிருத்தி மாதிரி எடுத்துக்காட்டு பற்றி மேலே எழுப்பப்பட்ட கரிசனைக்குரிய விடயங்களை கவனத்திற்கொள்கையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி, செல்வம், சொத்துகள், வருமானச் செயற்பாடுகள் என்பவற்றில் அளவுக்கதிகமாகச் சார்ந்திருப்பதை விடுத்து, செல்வச்செழிப்பு நிலை அல்லது நன்னிலைக்கான ஏனைய வழிமுறைகளைக் கருத்தில் எடுத்தல் அறிவுபூர்வமானதாக இருக்கும். மக்களது வெளிப்படையான சாதனைகளுக்கு அப்பால் சென்று, அவர்களது வாழ்க்கையை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான தகவல்களின் ஒரு தொகுதியை, அவர்களுக்காகத் திறந்து வைக்கப்படும் வாய்ப்புகளின் முழுமையான ஒரு தொகுதியாக விரிவுபடுத்துவதை இன்றியமையாததாக்கியுள்ள, அமர்த்தியா சென் அவர்களின் பாரம்பரியத்தில் வந்த இயலாற்றல்களுடன் இவை குறைந்தபட்சம் தொடர்புடையனவாக இருக்கக்கூடும். போதுமானளவு சத்துணவை பெற்றிருத்தல் அல்லது உரியகாலத்திற்கு முன்னர் நிகழும் மரணத்திலிருந்து தப்பிப்பிழைத்தல், ஒரு சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையில் செயல் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுத்தறிவு மற்றும் கல்வி மட்டங்களைப் பெற்றிருத்தல் என்பவற்றிற்கான வழிமுறைகளை இவை உள்ளடக்கியுள்ளன. கௌரவமான நடத்தை, அதிகாரங்களைப் பெற்றிருத்தல் போன்ற ஏனைய இயலாற்றல்களை அளவிடுவது மிகுந்த சிரமமானதாக இருக்கக்கூடும். ஆனால், நன்னிலையின் இவ்வம்சங்கள் தொடர்பான குறிகாட்டிகளையும் அளவீடுகளையும் விருத்திசெய்வது தொடர்பில் மிக விரைந்த முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது.[3] முதலில், மக்கள் எதை முக்கியமானதெனக் கருதுகின்றனர் என்பதைப் புரிந்து கொள்வதற்கும், இரண்டாவதாக அவர்களது விழுமியங்களையும் நோக்கு நிலைகளையும் அபிவிருத்திக் கொள்கையாக மாற்றுவதற்குமான நிலையான வழிமுறைகள் கூட தேவைப்படும் (Stiglitz மற்றும் ஏனையோரும், 2008).

தமது நன்னிலை பற்றிய தகவல்களை அறிவதற்கு மக்களுக்கு உள்ள தெரிவுகள் எவை என்பதையும் இத்தெரிவுகள் பொது மாதிரியான ஒரு தொகுதி எடுகோள்களுக்கு உட்பட்டதாக உள்ளனவா என்பதையும் கூர்ந்து ஆராய்வது போதுமானதாகும் என பொருளியலாளர்கள் மிக நீண்டகாலமாக கருதி வந்துள்ளனர். மிகக் குறைந்தளவான வருமான மட்டங்களைத் தவிர, வருமா

னத்திற்கும் நன்னிலை தொடர்பான உள்ளுணர்வுசார்ந்த அளவீடுகளுக்கும் இடையில் ஓர் உறுதியான தொடர்பு காணப்படவில்லை என்பது தற்போது அனைவருக்கும் நன்கு தெரிந்த அனுபவரீதியான ஓர் உண்மையாகும் (Stiglitz மற்றும் ஏனையோரும், 2008). இலங்கையின் மிக வறிய பிரதேசங்களில் ஒன்றான பதுளை மாவட்டத்தில் வறுமைப் பகுப்பாய்விற்கான நிலையத்தால் (CEPA) நடாத்தப்பட்ட அண்மைக்கால ஆய்வு ஒன்றில், தாம் மகிழ்ச்சியாக இருப்பதாக 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளதுடன், மகிழ்ச்சிக்கும் வருமான மட்டங்களுக்கும் இடையில் எத்தொடர்புமே இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், குழு மட்ட மகிழ்ச்சி மற்றும் வாழ்க்கையில் மனநிறைவு என்பவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நகர, கிராமிய, பெருந்தோட்டக் குடும்பங்களில் காணப்படும் வேறுபாடுகள், உள்ளுணர்வு சார்ந்த நன்னிலையை ஊக்குவிக்கும் அல்லது வலுவிழக்கச் செய்யும் காரணிகள் என்பவற்றைப் புரிந்து கொள்வதற்கு இவற்றை மேலும் அலசி ஆராய வேண்டியுள்ளது.

இறுதியாக, நன்னிலை என்பது தனியாள் ஒருவருடன் மாத்திரம் தொடர்புடையதாக அன்றி, அது முழுமையான சமூகத்துடன் தொடர்புபட்டுள்ளது எனும் அடிப்படையில் நோக்குகின்றபோது, நியாயத்தன்மையிலும் சமத்துவத்திலும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அனைவருக்குமான இலவசக் கல்வி மற்றும் இலவச ஆரோக்கியப் பராமரிப்பு என்பவற்றிற்கு நெடுங்காலமாக இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைக்கான அடிப்படையாக இருந்துவந்துள்ள இக்கோட்பாடுகள் காரணமாக உள்ளன. இயலாற்றல்கள் பற்றிய எண்ணக்கருக்கள் மற்றும் மானிட நன்னிலையின் இறுதி இலக்குகளாக மனித முன்னேற்றத்துடன் ஒன்றுசேர்ந்து, நியாயத்தன்மையும் சமத்துவமும் பற்றிய இக்கருத்துகளை எமது அபிவிருத்திக்கான பொதுநிலைப்பட்ட கோட்பாடுகளினுள் உறுதியாகப் பதித்துவைக்க வேண்டியுள்ளது.

**முடிவுரை**

கடந்த தசாப்தத்தில் காணப்பட்ட தொடர்ச்சியான உலகளாவிய நெருக்கடிகளை அடுத்து, பொருளாதார வளர்ச்சியால் தூண்டப்படும் அபிவிருத்தி தொடர்பான விமர்சனங்களுடன் சேர்ந்து, அபிவிருத்தி பற்றிய மாற்றுச் சிந்தனை முறைகளிலான ஆர்வ ஈடுபாடு என்பவற்றில் ஒரு புத்துயிர்ப்பு ஏற்பட்டுள்ளது. பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் (OECD) அடையப்பட்டுள்ள மட்டத்திற்கு, செல்வம் சேர்ப்பதற்கு இவ்வுலகில் வாழும் ஏழு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்களும் எதிர்பார்த்தலானது, புவியின் சூழலியற் தொகுதிகளை சீர்படுத்த முடியாதளவிற்கு படுமோசமான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதற்கு ஆதரவான கருத்துகளை சுற்றுச்சூழலியலாளரின் விமர்சனங்கள் முன்வைக்கின்றன. அதேவேளை, செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான மேலும் விரிவடைந்து செல்லும் இடைவெளியைப் பற்றி ஏனையோர் கருத்தில் கொள்வதுடன், பெரும் எண்ணிக்கையிலான மக்களைப் பாதிக்கின்ற வறுமையை இல்லாதொழிப்பதில், தற்போதைய பொருளாதார மாதிரி எடுத்துக்காட்டு எப்போதும் வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒன்றாக இருக்குமா என்பது தொடர்பில் சந்தேகங்களையும் அவர்கள் எழுப்பியுள்ளனர். பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவமும் தவிர்க்க முடியாத தன்மையும் தொடர்பில் சந்தேகம் எழுப்புதலானது பெரும்பாலும் இலட்சியவாதிகள் மற்றும் புரட்சியாளர்களின் குறியிலக்காகக் கருதப்படுகின்றது. ஆனால், ஏராளமான புகழ்பெற்ற சிந்தனையாளர்களால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கட்டுக்கடங்காத பொருளாதார வளர்ச்சியானது ஒரு தீர்வாக இருப்பதைவிட அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கான ஒரு மூல காரணியாக அமையக்கூடும்.

அபிவிருத்தி நிலையை அடைவதற்கான வழிமுறையாகப் பொருளாதார வளர்ச்சியின் வகிபாகம் பற்றிப் போதுமானளவில் ஆராயப்படவில்லை என்பதற்கு ஆதரவான கருத்துகளை இக்கட்டுரை முன்வைத்தள்ளது. தற்போது தேவைப்படுவது யாதெனில், அபிவிருத்தியின் இறுதி இலக்கு பற்றி 'மனதில் மீளஉருப்படுத்த' வேண்டியுள்ளது என்பதாகும். கடந்த நூறு வருடகாலத்தின் பெரும்பகுதியில் பொருளியற் சிந்தனையின் மேலாண்மையானது ஏனைய அனைத்து அம்சங்களையும் விட பொருட்கள், சேவைகளினது உற்பத்திக்கும் பொருள்முதல் முன்னேற்றத்திற்கும் அதிகளவு முக்கியத்துவம் அளித்துள்ளது. இது சில வேளைகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலக்கும் கேடு விளைவிப்பதாக உள்ளது. இருந்தும், வறுமைப் பகுப்பாய்விற்கான நிலையத்தின், களநிகழ்வுகளில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, முக்கியமானவை என மக்களால் கருதப்படும் அனைத்தையும் பணமாக்கவோ அல்லது ஒரு சந்தையில் கொள்வனவு /விற்பனை செய்யவோ முடியாது என்பதை இக்கட்டுரை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. அனேகர், தமது வாழ்க்கையின் ஏனைய அம்சங்கள் எந்தளவிற்கு முக்கியமானவை எனக் கருதுகின்றனரோ அந்தளவிற்கு உயர் வருமான வாய்ப்புகளை விட்டுக் கொடுக்கின்றனர். நன்னிலை பற்றிய பல்பரிமாணப் புரிதலை உள்ளடக்கும் வகையில் அபிவிருத்தியை மனதில் மீள உருப்படுத்துவதற்கான ஒரு கோட்பாட்டு அடிப்படையை ஸ்கூமச்சரின் படைப்பில் அடங்கியுள்ள விடயங்கள், பொருளாதார வளர்ச்சியற்ற செல்வச் செழிப்பு நிலை அறிக்கை மற்றும் ஏனைய படைப்புகள் போன்ற தனிமுறைச் சிந்தனைகள் என்பன வழங்குகின்றன. தற்போது தேவைப்படுவது யாதெனில், எமது கலாசாரம், காலமும் சுதந்திரமும் ஆகியன தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு இது பொருத்தமான நேரமாகும் என்பது தொடர்பில் செயற்படுத்தத்தக்க மாற்றுக் கருத்துகளையும் கோட்பாடுகளையும் கண்டறிவதற்காக, பாரிய மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க மீள்சிந்தனையில் ஈடுபடுவதாகும். ஒரு நாடு என்ற வகையில் இந்த நாட்டின் பொதுநிலைப்பட்ட அபிவிருத்தி பற்றிய கருத்தாழமுடைய விவாதங்களில் உண்மையில் எதை நாம் முக்கியமானது எனக் கருதுகின்றோம் என்பதை நேரடியாக அளவிடுவதற்கான புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலானது இத்திசையில் பயணிக்கும் ஆக்கபூர்வமான ஒரு செயலாக அமையும்.

**துணைநூற் பட்டியல்:**


Central Bank of Sri Lanka. 2010. *Annual Report.* Colombo: CBSL.

Centre for Poverty Analysis. 2007. *Pro-poor Growth through Increased Connectivity: Ex- Post Evaluation of Pilot Interventions.* Report Submitted to SIDA. unpublished

Centre for Poverty Analysis. 2011. *Inclusive growth in Sri Lanka: A district level approach. Phase 3: Primary Data Collection.* Report Submitted to the Word Bank, unpublished.

Department of Census and Statistics, Sri Lanka. 2011. *Poverty Indicators: Household Income and Expenditure Survey 2009/10.* Colombo: DCS.

Foster, J.B. 2011.Capitalism and Degrowth: An Impossibility Theorem, *Monthly Review*, 62 (8): 26 33

Haddad, L., Hossain H., McGregor, J.A. and Mehta, L. 2011. Introduction, Time to Reimagine Development? *IDS Bulletin*, Oxford, 42(5):1-12.

Jackson, T. 2009. *Prosperity Without Growth? The transition to a sustainable economy*, Sustainable Development Commission, London.

Jayawardena, S. 2011. *Right of Way: A Journey of Resettlement*, Centre for Poverty Analysis, Colombo.

Maynard, W. B. 2012. Daybreak of the Digital Age: The world celebrates the man who imagined the computer, *Princeton Alumni Weekly*, Princeton, 112 (10): 28-33

Meadows, D.H., Meadows, D.L., Randers, J. and Behrens III, W.W. 1972. The Limits to Growth, *Report for the Club of Rome's Project on the Predicament of Mankind*, Universe Books, New York.

Schumacher, E.F. 1973. *Small is beautiful: a study of economics as if people mattered,* Harper & Row, New York.

Stiglitz, J., Sen, A., and Fitoussi, J., 2008, *Report by the Commission on the Measurement of Economic Performance and Social Progress*, Institut d'Etudes Politiques de Paris, Paris.

The Economics of Ecosystems and Biodiversity (TEEB). 2010. *Mainstreaming the Economics of Nature:*


**தொடர்ச்சி 24ம் பக்கம் ......**

# இலங்கையில் பொருளாதார வளர்ச்சியிலும் மனித அபிவிருத்தியிலும் காணப்படும் சமத்துவமின்மை

**நந்தசிறி கீம்பியஹெட்டி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
**சரத் கட்டுக்குறுந்த**
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
றுஹுணுப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

"ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் உள்ளடங்கியுள்ள ஒரு தொகுதி சமூகக் குறிகாட்டிகள் தொடர்பில் இலங்கை கணிசமானளவு வெற்றியடைந்துள்ளதுடன், எஞ்சியுள்ள சமூகக் குறிகாட்டிகளில் பெரும் பாலானவற்றை அடைவதன் மூலம், ஆயிரமாம் ஆண்டு செயல் இலக்குகளை முழுமையாக அடைவதற்காக சரியான திசையில் செயற்பட்டுக் கொண்டும் இருக்கின்றது. அனேகமான குறிகாட்டிகள் தேசிய மட்டத்தில் ஊக்கமளிக்கும் வகையிலான போக்குகளை வெளிப்படுத்துகின்றபோதும், கொள்கை வகுப்பாளர்களினதும் திட்டமிடலாளர்களினதும் கவனஈர்ப்பை வேண்டிநிற்கும் பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் இன்னும் காணப்படுகின்றன. போதாத நிலையிலுள்ள உட்கட்டுமான வசதிகள், சேவை வழங்கல் முறைமையின் குறைபாடு என்பனவே இவ்வேற்றத்தாழ்வுகளுக்குப் பின்னாலுள்ள மிக முக்கியமான காரணிகளாகும்"- Millennium Development Goals Country Report-Sri Lanka 2008/09 page 01.

2004ம் ஆண்டில், வரலாற்றில் முதற்தடவையாக 1000 அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியை வெளிப்படுத்தியதன் மூலம், இலங்கை தனது அந்தஸ்த்தைக் குறைந்தளவான நடுத்தர வருமானம் பெறும் ஒரு நாடு எனும் நிலைக்கு உயர்த்தியது.[1] அதைத் தொடர்ந்து, இலங்கையால் ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகு பேரளவான வளர்ச்சியைப் பேணக்கூடியதாக இருந்து வந்துள்ளதுடன், 2011ம் ஆண்டில் அது 2,836 அமெரிக்க டொலருக்கு அண்மித்ததாகக் காணப்பட்டது. கடந்த தசாப்தத்தில், 2009ம் ஆண்டைத் தவிர ஏனைய ஆண்டுகளில், இலங்கையானது ஒரேசீரான பொருளாதார வளர்ச்சியான 5 சதவீதத்திற்கு மேற்பட்ட ஒரு தொகையைப் பதிவு செய்து வந்துள்ளதுடன், 2011ம் ஆண்டில் மிகவும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியான 8.3 சதவீதத்தைப் பதிவுசெய்தது. இது இப்பிராந்தியத்தில், இந்தியாவிற்கு அடுத்து, இரண்டாவது நிலையில் உள்ள உயர் பொருளாதார வளர்ச்சி வீதமாகும் (அட்டவணை 1ஐப் பார்க்கவும்). எனினும், இலங்கையானது ஆகக்குறைந்தபட்ச வருவாய் வீதத்திலேயே (the cost of equity) இப்பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதைப் புள்ளிவிபரங்கள் பற்றிய நுணுக்கமான ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

**சமநிலையான பிரதேச அபிவிருத்தியை அடைவதற்கான வரலாற்று ரீதியான முயற்சிகள்**

நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, கிராமிய சமுதாயத்தின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக இலங்கை கணிசமானளவு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக, ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் பத்தாண்டுத் திட்டம் (1959), ஐந்தாண்டுத் திட்டம் (1970), அரசாங்க முதலீட்டுத் திட்டம் (1983-1987) போன்ற பெரும் எண்ணிக்கையிலான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தின. நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரே இவை ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வறள் வலயத்திற்கான நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டங்களுக்கு மேலதிகமான திட்டங்களாகும்.

1970களில், பிரதேச அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவானது இந்நாட்டின் வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு வந்தது. அபிவிருத்திச் செயற்பாடுகளை உப-தேசிய மட்டத்தில் பரவலடையச் செய்வதன் பொருட்டு, அரசாங்கம் புதிய தோர் நிருவாக முறைமையைத் தோற்றுவித்தது. பிரதேச அபிவிருத்திப் பிரிவு முறைமை (1971), மாவட்ட அரசியல் அதிகார சபை முறைமை (1973), மாவட்ட அமைச்சு முறைமை (1978), மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை (1980), மாகாண சபை முறைமை (1987) என்பன இதன் பொருட்டு அமைக்கப்பட்டன. நிறுவனரீதியான இவ்வமைப்பு முறையானது துறைரீதியான அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கத்திற்கு ஆதரவளித்தபோதும், இத்திட்டங்கள் குறிப்பான பிரதேச அபிவிருத்தியுடன் தொடர்புடையவையாக இருக்கவில்லை (Dangalle, 2002).

1977ல் ஆட்சிக்குவந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்ததுடன், பொருளாதார வளர்ச்சிக்குச் சார்பான ஓர் அபிவிருத்தி அணுகுமுறையை ஏற்றும் கொண்டது. சமநிலையான பிரதேச அபிவிருத்தி செயல்வடிவம் பெறுவதற்காக, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மிக முக்கியமான மூன்று செயற்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அவையாவன: பாரிய கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் (தலைநகரமும் பெருநகர்ப் பிரதேசமும்), மகாவலி அபிவிருத்தித் திட்டம் (இது பெருமளவுக்கு வட-மத்திய மாகாணத்தை உள்ளடக்கியதாகும்), பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டம் (நாடு முழுவதற்குமானது). இதற்கு மேலதிகமாக, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் மூலம் பயனடையாத கிராமிய சமூகத்தின் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக, 1978ல் மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. கிராமப் புறங்களில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான ஓர் உபாயமாக, கைத்தொழில்களைப் பரவலாக்கும் பொருட்டு அரசாங்கத்தால் 1980களின் பிற்பகுதியில் கைத்தொழிற் பேட்டைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனுடன் இணைந்த வகையில், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் துணைபுரிவதன் மூலம் பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகளை சமப்படுத்தும் பொருட்டு, கிராமப் புறங்களில் 200 ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான திட்டமும் அமுலாக்கப்பட்டது. மாகாணங்களின் அனைத்து அம்சங்களையும் முழுமையாக மாற்றுவதற்கும், பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகளை இலங்கையில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் சமமாகப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்குமாக, தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மஹிந்த சிந்தனை-எதிர்காலத் தொலை நோக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பிரதேச அபிவிருத்தித் திட்டமா

னது ஒவ்வொரு மாகாணத்திற்குமென வெவ்வேறுபட்ட கருப்பொருளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவையாவன:

- ஜரட்ட நவோதய - அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களுக் கானது
- கந்துரட்ட நவோதய - கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங் களுக்கானது
- புவுடமு வெல்லஸ்ஸ - பதுளை, மொனறாகலை மாவட்டங்களுக் கானது
- சப்ரகமுவ அருணலோகய - கேகாலை, இரத்தினபுரி மாவட்டங் களுக்கானது
- உத்துறு வசந்தய - கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவு னியா, முல்லைத்தீவு மாவட் டங்களுக்கானது
- நெகனஹிர நவோதய - திருகோ ணமலை, மட்டக்களப்பு, அம் பாறை மாவட்டங்களுக்கானது
- வயம்ப புவுடமு - குணாகலை, புத்தளம் மாவட்டங்களுக்கானது
- றுஹூணு உடனய - காலி, மாத் தறை, அம்பாந்தோட்டை மாவட் டங்களுக்கானது
- றன் அருண - கம்பஹா, களுத் துறை, கொழும்பு மாவட்டங் களுக்கானது

இப்பிராந்தியத்திலும், ஆசியாக் கண் டத்திலும் உள்ள மிகவும் அபிவிருத்தி யடைந்த நகரங்களில் ஒன்றாக கொழும்பு நகரம் இருக்க வேண்டும் என எதிர்பார்க் கப்படுவதால், மேலே குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்திசெய்யப் பட்டதும், அவற்றுள் றன் அருண திட்ட மானது மிகப் பாரிய திட்டமாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் மிக நீண்ட கால மாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த சமூக மற்றும் பொருளாதார உட்கட்டுமான வச திகளை மேம்படுத்துவதற்காக நெகனஹிர நவோதய அபிவிருத்தித் திட்டம் 2007ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்ட மானது விவசாயமும் நீர்ப்பாசனமும், வாழ் வாதார உதவி, மீன்பிடியும் மிருகவளர்ப் பும், வீதி, மின்சாரமும் சக்தியும், கல்வி, குடிசார் (சிவில்) நிருவாகமும் சுகாதாரமும், கழிவகற்றல் ஆகிய துறைகளை முன்பு இருந்த நிலைக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக, றன்டோ திட்டத்திற்கு ஒரு நிலைப்பட்டதாக மிகப் பெரும் உட்கட்டு மானச்செயற்திட்டங்களும் தேசிய உட்கட் டுமான அபிவிருத்தித் திட்டமும் உள்ள டக்கப்பட்டுள்ளன.

2009 வைகாசி மாதத்தில் ஆயுத மோதல் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து, வட மாகாணத்தில் மீள்குடியேற்றமும் புனர் வாழ்வும் மற்றும் அபிவிருத்திச் செயற் பாடுகள் என்பனவற்றை விரைவுபடுத்து வதற்காக, வடக்கின் வசந்தம் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் துரித மாகச் செயற்பட்டது. இது மின்சாரம், நீர் விநியோகமும் கழிவகற்றலும், போக்கு வரத்து, நீர்ப்பாசனம் என்பவற்றிற்கான உட்கட்டுமானச் செயற்திட்டங்கள், மிருக வளர்ப்பு, உள்நாட்டு மீன்பிடி என்பவற் றோடு, மிக முக்கியமாக A-9 நெடுஞ் சாலை, வடபகுதிக்கான புகையிரதப் பாதை, மன்னார்ப் பாலம், கொக்காவில் ஒளி/ ஒலிபரப்புக் கோபுரம், காங்கேசன்துறை கப்பற் துறைமுகம் ஆகியனவற்றின் புனர் நிர்மாணம் என்பவற்றையும் உள்ளடக் கியுள்ளது.

### பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகள்

ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங் கங்களுமே பிரதேச அபிவிருத்தியை அடை வதன் பொருட்டு, கடந்த சில தசாப்தங் களாக பாராட்டத்தக்க முயற்சிகளையும் பல்வேறு வகைப்பட்ட அபிவிருத்தி உபா யங்களையும் மேற்கொண்டு வந்துள்ள போதும், இலங்கை இன்னும் பிரதேசங்கள் மத்தியிலான தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் ஏற்றத்தாழ்வுகளை அனுபவித் துக் கொண்டிருக்கின்றது. புவியியல்ரீதி யாக பரந்துள்ள இடங்கள் தொடர்பில் காணப்படும் சமச்சீரற்ற பௌதிக மற்றும் சமூகக் கட்டுமானப் பகிர்வும், மேற்கு வலயத்தில் உள்ள வர்த்தக மத்திய நிலைய ங்களைச் சூழவுள்ள சனத்தொகைச் செறிவு என்பனவே இதற்கான மிக முக்கியமான காரணங்களாகும். கைத்தொழில், வர்த்தக மும் வணிகமும் போன்ற பெரும்பாலான பொருளாதாரச் செயற்பாடுகளும் சேவை களும் ஏனைய பிரதேச நிலையங்களை விட, கொழும்பு நகருடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள மத்திய நிலையங்களி லேயே காணப்படுகின்றன. இதன் விளை வாக, நாட்டின் ஏனைய பகுதிகளில் உயரள வான பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகள் காணப்படும் அதேவேளை, கொழும்பும் புறநகர்ப் பகுதிகளுமே பொருளாதார அபி விருத்தியில் முதன்மை நிலையில் உள்ளன.

இலங்கையில் மாகாண அடிப்படை யிலான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பரம்பலை அட்டவணை 2 சதவீத அளவில் எடுத்துக் காட்டுகின்றது. 2006ல் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங் களை உள்ளடக்கியுள்ள மேல் மாகாணம் மாத்திரம் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் 50 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங் களிப்புச் செய்துள்ளது என்பதை இது தெளி வாகச் சுட்டிக் காட்டுகின்றது. அதேசம யம், ஏனைய அனைத்து மாகாணங்களும் ஒன்றுசேர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் 49.9 சதவீதத்திற்கே பங்களிப்புச் செய் துள்ளன. 2006-2010 காலப் பகுதியில் இச் செறிவுநிலை சற்றுக் குறைவடைந்துள்ள போதும், ஏற்றுக் கொள்ள முடியாத வகை யில் அது இன்னும் உயர்வானதாகவே, அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45.1 சதவீதமாக, உள்ளது.

இது தவிர கவனத்தை ஈர்க்கும் மற்று மொரு அம்சம் யாதெனில், நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 5.7 சதவீத நிலப்பரப்பை மாத்திரம் உள்ளடக்கியுள்ள மேல் மாகா ணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45.1 சத வீதத்திற்குப் பங்களிப்புச் செய்யும் அதேவேளை, நாட்டின் மொத்த நிலப்பரப் பில் 15.5 நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ள மிகப் பெரிய மாகாணமான வட-மத்திய மாகாணம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8 சதவீதத்திற்கு மாத்திரமே பங்களிப்புச் செய்கின்றது என்பதாகும் (உரு 1ஐப் பார்க்கவும்).

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 66 சதவீதமானது, நாட்டின் மொத்த நிலப்பரப் பில் 23 சதவீதத்தை கூட்டாக உள்ளடக்கி

**அட்டவணை 1 இலங்கையின் ஆள்வீத மொ. உ. உற்பத்தியும் (தற்போதைய விலைகளின்படி அ. டொலரில்) மொ. உ. உற்பத்தி வளர்ச்சி வீதமும்**

| | 1990 | 2000 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆள்வீத மொ. உ. உற்பத்தி (அ. டொ) | 473 | 899 | 1,062 | 1,241 | 1,421 | 1,617 | 2,014 | 2,057 | 2,400 | 2,836 |
| மொ. உ. உற்பத்தி வளர்ச்சி வீதம் | 6.4% | 6.0% | 5.4% | 6.2% | 7.7% | 6.8% | 6.0% | 3.5% | 8.0% | 8.3% |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2011 மற்றும் 2008*

யுள்ள மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங் களிலேயே செறிந்து காணப்படுகின்றது என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்க ஒரு விடயமாகும். வேறுவிதமாகக் கூறின், நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 77 சதவீதத்தை உள்ளடக்கியுள்ள ஏனைய அனைத்து மாகாணங்களும் ஒன்றுசேர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34 சதவீதத்திற்கே பங்களிப்புச் செய்கின்றன. இது பிரதேசரீதியான சமநிலையின்மைக்கான தெளிவான ஒரு குறிகாட்டியாகும். உரு 1ல் உள்ள புள்ளிவிபரங்களை மாத்திரம் பயன்படுத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கானது நிலப் பரப்புக்கு சரி விகிதசமமாக இல்லாத போதும், ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகைக்கு ஒத்ததாகவே அது உள்ளது என்பதற்கும், பாரியளவான சனத்தொகையால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரியளவான ஒரு பங்கைத் தோற்றுவிக்க முடியும் என்பது வியப்பிற்குரியதல்ல என்பதற்கும் ஆதரவான கருத்துகளை ஒருவர் முன்வைக்கக்கூடும். எனினும், சனத்தொகையின் மிகப் பெரும்பங்கினர் (53.5 %) ஏன் மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங்களுக்குள் உள்ளடக்கியுள்ள சிறியளவு நிலப்பரப்பில் (23 %) வாழ்கின்றனர் என்பதற்கான விளக்கம் கூட, இயற் கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதிக வளங்கள் என்பவற்றின் சமச்சீரற்ற பகிர்வின் காரணமாகத் தோற்றம்பெற்ற பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மேலும், அதுவே உண்மை நிலையாக இருக்குமாயின், மாகாண அடிப்படையிலான ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவு வேறுபாடு காணப்படமாட்டாது. 2010ம் ஆண்டின் மாகாண ரீதியான ஆள்வீத மொத்த உள்நாட்டு

**அட்டவணை 2 மாகாண அடிப்படையில் இலங்கையின் மொ. உ. உற்பத்தியின் விகிதாசாரரீதியான பகிர்வு 2006 - 2010**

| மாகாணம் | வருடம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
| மேல் மாகாணம் | 50.1 | 46.5 | 45.4 | 45.8 | 45.1 |
| மத்திய மாகாணம் | 8.8 | 9.6 | 9.8 | 9.8 | 10.0 |
| தென் மாகாணம் | 10.0 | 10.5 | 10.5 | 10.5 | 10.7 |
| வட மாகாணம் | 2.8 | 2.9 | 3.2 | 3.2 | 3.4 |
| கிழக்கு மாகாணம் | 4.9 | 5.2 | 5.6 | 5.8 | 5.9 |
| வட-மேல் மாகாணம் | 9.1 | 9.9 | 9.9 | 9.6 | 9.4 |
| வட-மத்திய மாகாணம் | 4.0 | 4.0 | 4.7 | 4.6 | 4.8 |
| ஊவா மாகாணம் | 4.3 | 4.9 | 4.5 | 4.5 | 4.5 |
| சப்பிரகமுவ மாகாணம் | 6.1 | 6.4 | 6.4 | 6.1 | 6.3 |

*மூலம் : சமூக பொருளாதாரத் தரவுகள் - 2011, இலங்கை மத்திய வங்கி*


உற்பத்தியை உரு 2 காட்டுகின்றது. 2010ல் இலங்கையின் ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி 2,400 அமெரிக்க டொலராக இருந்தபோதும், மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களினதும் ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி இதைவிடக் குறைவானதாகும். மேல் மாகாணத்தின் நிலையானது தேசிய மட்டத்தை விட 1.6 மடங்கு உயர்வானதாகவும், ஏனைய மாகாணங்களை விட இரு மடங்குகளுக்கு மேற்பட்டதாகவும் காணப்படுகின்றமையானது வருமானப் பகிர்வு தொடர்பான ஏற்றுக்கொள்ள முடியாத சமத்துவமின்மையைக் காட்டுகின்றது.

**தேசிய மட்டத்திலான சமத்துவமின்மை**

வருமானப் பகிர்வில் காணப்படும் சமத்துவமின்மையின் தீவிரத்தன்மையை அளவிடுவதற்கு அதிகளவு பயன்படுத்தப்படும் குறிகாட்டிகளில் ஒன்றாக கினிக் குணகம் உள்ளது. கினி விகிதம் லோறன்ஸ் வளையீயை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த லோறன்ஸ் வளையீயானது *y* அச்சில் சனத்தொகையின் மொத்த வருமானத்தின் பெருக்க (திரண்ட) வீத அளவையும், *x* அச்சில் சனத்தொகையின் திரண்ட பங்கை குறைந்த வருமானத்திலிரு ந்து

கூடிய வருமானம் வரையிலும் குறிப்பதாக அமைந்துள்ளது. கினி விகிதத்தின் பெறுமதி பூச்சியத்திற்கும் ஒன்றிற்கும் இடைப்பட்டதாகும். பூச்சியக் கினிப் பெறுமதியானது பூரண சமத்துவத்தைக் காட்டும் அதேவேளை, அதன் பெறுமதி எந்தளவுக்கு அதிகமாக உள்ளதோ அந்தளவுக்கு சமத்துவமின்மையும் அதிகமாக உள்ளது என்பதை அது குறிக்கின்றது.

இலங்கையின் 1953-2010ம் ஆண்டு காலப்பகுதிக்கு உரிய கினிக்குணகத்தில் காணப்படும் வேறுபாட்டை உரு 3 காட்டுகின்றது. நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர், கினி விகிதம் வீழ்ச்சியடையும் ஒரு போக்கில் இருந்து வந்துள்ளமையானது பொருளாதாரம் ஒட்டுமொத்தமாகக் குறைந்தளவு சமத்துவமற்ற துறையை நோக்கி நகர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை 1970கள் வரையான முதலாவது கட்டத்தில் காணப்படும் தரவுகளிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. இதற்கான மிக முக்கியமான காரணம் யாதெனில், 1950களின் நடுப்பகுதியிலிருந்து மிக முக்கியமான பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து தனியார்துறையை பின்வாங்கச்செய்யும் வகையில் காணப்பட்ட அரசாங்கச் செயற்பாடுகளாகும். 1973 தொடக்கம் 1987 வரையான இரண்டாவது கட்டத்தில் வருமானம் பெறுவோரு டன் தொடர்புடைய கினிக் குணகம் தேசிய மட்டத்தில் 27 சதவீதம் அதிகரித்திருந்தமையானது அதிகரித்துச்செல்லும் வருமானச் சமத்துவமின்மையைச் சுட்டிக் காட்டுகின்றது. இக்கால கட்டத்தில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் வருமானச் சமவத்துவமின்மைக்குப் பின்னால் இருந்த மிகுந்த தாக்க விளைவை ஏற்படுத்தவல்ல முக்கியமான காரணிகளாக 1977ல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் கட்டமைப்பு மற்றும் நிறுவனரீதியான மாற்றங்களும் அமைந்திருந்தன. தாராளமயமாக்கத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பித்த 1989ம் ஆண்டிலிருந்து, 1996/97 காலகட்டத்தைத் தவிர, வருமானச் சமத்துவமின்மையானது ஒப்பீட்டளவில் மிக உயர்வாக இருந்தது. 1996/97காலப் பகுதியில் காணப்பட்ட உயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் காரணமாக, இக்காலகட்டத்தில் சனத்தொகையின் மிகக் கீழ்மட்டத்




| | மேல் மாகாணம் | மத்திய மாகாணம் | தென் மாகாணம் | வட மாகாணம் | கிழக்கு மாகாணம் | வடமேல் மாகாணம் | வடமத்தி மாகாணம் | ஊவா மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலப்பரப்பின் சதவீதம் | 5.7% | 8.9% | 8.6% | 13.2% | 14.9% | 12.0% | 15.5% | 13.3% | 7.8% |
| மொ.உ.உற்பத்தியின் வீதம் | 45.1% | 10.0% | 10.7% | 3.4% | 5.9% | 9.4% | 4.8% | 4.5% | 6.3% |
| சனத்தொகை வீதம் (2010) | 28.4% | 13.0% | 12.1% | 5.8% | 7.6% | 11.3% | 6.0% | 6.4% | 9.4% |


**உரு 1 மாகாண அடிப்படையில் இலங்கையின் மொ. உ. உற்பத்தி, சனத்தொகை, மற்றும் நிலப்பரப்பின் சதவீத அளவிலான பரம்பல்**

*மூலம் : இலங்கை மத்திய வங்கியின் சமூக-பொருளாதாரத் தரவுகளின்(2011) அடிப்படையில் கட்டுரையாசிரியரின் கணிப்பு*

திலுள்ள ஐந்தில் ஒரு பிரிவினரின் வருமானப் பங்கு கணிசமானளவு அதிகரித்திருந்தது. இருந்தபோதிலும் உலக வங்கியின் கட்டமைப்புச் சீராக்கத் திட்டத்தின் கீழான அரச தொழில்முயற்சிகளின் தனியார்மயமாக்கம், தனியார்துறைத் தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புதவிகள் (வரிச் சலுகைகள்/ வரிவிலக் களிப் புகள்), உள்ளூர் விவசாயம் புறக்கணிக்கப்பட்டமை, ஏற்றுமதிசார் கைத்தொழில்கள் மற்றும் பணப் பயிர்கள் என்பவற்றின் மீதான அதிகரித்தளவிலான சிறப்புக் கவனம், அரசாங்க உணவு மற்றும் உரமானியக் குறைப்பு, சமூகநலச் செலவுகள் வரையறுக்கப்பட்டமை போன்ற மிக முக்கியமான பொருளாதாரச் சீராக்கச் செயற்பாடுகளின் விளைவாகத் தோற்றம்பெற்ற படுமோசமான தாக்கவிளைவுகளை இதனால் தணிவுறச்செய்ய முடியாது போய்விட்டது. இவ்வாறாக, கினிக்குணகத்தால் அளவிடப்பட்ட வருமானச் சமத்துவமின்மையானது தற்போது 0.55 எனும் மட்டத்தை எட்டியுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான பொது மதிப்பாய்வின் பிரகாரம், இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ளவற்றுள் இதுவே மிகவும் உயர்வான தொகையாகும். அத்துடன், கடந்த காலத்தில் வருமானச் சமத்துவமின்மையின் மத்தியிலேயே இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைந்துள்ளது என்பது இத்தரவுகள் மூலம் தெளிவாகத் தெரியவருகின்றது.


**துறைரீதியான அல்லது பிரதேசமட்டத்திலான சமத்துவமின்மை**

உரு 4ல் காட்டப்பட்டுள்ளவாறு, குறிப்பிட்ட எந்தவொரு பொது மதிப்பாய்வுக் காலத்திலும் ஏனைய இரு துறைகளுடன் ஒப்பிடுமிடத்து, நகரத் துறையானது மிக உயர்வான வருமான சமத்துவமின்மையை வெளிப்படுத்தியிருந்த அதேவேளை, பெருந்தோட்டத் துறை மிகக் குறைவான சமத்துவமின்மையைக் கொண்டுள்ளது என்பது தெரியவருகின்றது. தேசியரீதியான இப்போக்கைத் தொடர்ந்து, 1996/97 காலத்தில் அடையப்பட்டிருந்த முன்னேற்றங்களைத் தலைகீழாக்கும் வகையில், பெருந்தோட்ட மற்றும் கிராமியத் துறைகளின் வருமானச் சமத்துவமின்மை கூட திடீரென அதிகரித்தது. அதேவேளை, நகரத் துறை வருமானச் சமத்துவமின்மையானது சிறிதளவு ஏற்ற இறக்கங்களுடன் ஓர் உயர் மட்டத்தில் தேக்கநிலையடைந்தது. பெருந்தோட்டத் துறையிலான கினிக்குணகப் பெறுமதிகளில் ஓர் உயர் சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருந்தபோதும், பெருந்தோட்டத்துறையில் உள்ள குடும்பங்களுக்கு இடையிலான வருமான ஏற்றத்தாழ்வானது ஏனைய இரு துறைகளில் காணப்படுவதை விடவும் குறைவாகவே உள்ளது. 2009/10ம் ஆண்டின் பொது மதிப்பாய்வின்படி, நகர, கிராமிய, பெருந்தோட்டத் துறைகளுக்கான கினிக்குணகப் பெறுமதிகள் முறையே 0.54, 0.54, 0.50 என அமைந்திருந்தன. சதவீத அடிப்படையிலான பெறுமதிகளைப் பொருட்படுத்தாத நிலையில், கீழ்மட்ட நிலையிலுள்ள சனத்தொகையின் அளவைக் கவனத்திற் கொள்கையில், கடந்த காலத்தில் கிராமியத் துறையிலேயே பாரியளவிலான ஏற்றத்தாழ்வு இருந்து வந்துள்ளது.




உரு 3 மாகாண அடிப்படையில் (தற்போதைய விலைகளின்படி) இலங்கையின் ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ. டொலரில்) - 2010

*மூலம் : சமூக பொருளாதாரத் தரவுகள் - 2011, இலங்கை மத்திய வங்கி*




உரு 3 வருமானம் பெறுவோர் அடிப்படையில் இலங்கையின் கினிக் குணகம் 1953-2010

*மூலம் : குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு இறுதி அறிக்கை 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதார பொது மதிப்பாய்வு, இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்*

**அட்டவணை 3 மாகாண அடிப்படையில் வருமானப் பகிர்வில் காணப்படும் சமத்துவமின்மை 2009/2010 (கினிக் குணகம்)**

| மாகாணம் | சராசரி குடும்பச் செலவீனம் தொடர்பிலான கினிக் குணகம் | உழைப்போரின் (வருமானம் பெறுவோரின்) வருமானம் தொடர்பிலான கினிக் குணகம் |
|---|---|---|
| மேல் மாகாணம் | 0.40 | 0.55 |
| மத்திய மாகாணம் | 0.37 | 0.55 |
| தென் மாகாணம் | 0.35 | 0.50 |
| வட மாகாணம் | * | 0.47 |
| கிழக்கு மாகாணம் | 0.24 | 0.45 |
| வட-மேல் மாகாணம் | 0.37 | 0.58 |
| வட-மத்திய மாகாணம் | 0.40 | 0.51 |
| ஊவா மாகாணம் | 0.34 | 0.53 |
| சப்ரகமுவ மாகாணம் | 0.33 | 0.59 |
| முழு இலங்கைக்கும் | 0.39 | 0.55 |

*தரவு கிடைக்கவில்லை


*மூலம் : குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு இறுதி இறிக்கை 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் குடும்ப வருமானமும் செலவீனமும் தொடர்பான 2009/10ம் ஆண்டு பொது மதிப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, குடும்பச் செலவீனம் மற்றும் வருமானம் பெறு

வோரின் (உழைப் போரின்) வருமான அளவு ஆகிய இரண்டுடனும் தொடர்புடைய கினி விகிதத்திற்கான தேசிய மற்றும் மாகாண அடிப்படையிலான பெறுமதிகளை அட்டவணை 3 காட்டுகின்றது. மாகாணங்களைக் கவனத்திற் கொள்கின்றபோது, அதிகளவுக்கு வேறுபட்டுக் காணப்படும் ஒரு கினி விகிதம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 0.45 கினிப் பெறுமானத்துடன் கூடிய மிகக் குறைந்தளவான வருமானச் சமத்துவமின்மை கிழக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளை, மிக உயரளவான 0.59 கினிப் பெறுமதி சப்ரகமுவ மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான கினிக்குணகங்கள் தேசியமட்டமான 0.55 எனும் பெறுமதியை துல்லியமாக ஒத்திருக்கின்றன. சப்ரகமுவ (0.59) மற்றும் வடமேல் (0.58) மாகாணங்களின் பெறுமானங்கள் தேசிய மட்டப் பெறுமானத்தையும் விட உயர்வாகக் காணப்படுகின்றன. அதேவேளை, தென் (0.5), வட (0.47), கிழக்கு (0.45), வட- மத்திய (0.51), ஊவா (0.53) ஆகிய மாகாணங்களுக்கான கினிக்குணகப் பெறுமானங்கள் தேசிய மட்டப் பெறுமானத்திற்குக் குறைவாகக் காணப்படுகின்றமையானது ஏற்றத்தாழ்வின் அளவில் உள்ள வேறுபாடுகளைக் காட்டுகின்றது.


லோறன்ஸ் வளையி என அழைக்கப்படும் எளிமையான ஒரு கருவியைப் பயன்படுத்தி, பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகளை இனங்காண முடியும். உரு 5ல் காட்டப்பட்டுள்ள லோறன்ஸ் வளையியானது 2003/04ம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதார பொது மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒன்றுக்கொன்று அருகாக வரையப்பட்டுள்ள ஒன்பது லோறன்ஸ் வளையிகளும் இந்நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் குறிப்பதாக அமைந்துள்ளன. அவற்றுள் சில தேசிய மட்டத்தைப் பிரதிபலிக்கும் லோறன்ஸ் வளையியின் மேலே கவிந்திருப்பதைக் காணமுடிகின்றது. (குறிப்பிட்ட மாகாணத்திற்கு அடுத்ததாக அடைப்புக்குறிக்குள் காணப்படும் பெறுமானங்கள், குறித்த அந்த மாகாணத்திற்கான 2003/04ம் ஆண்டிற்குரிய கினிக் குணகத்தைச் சுட்டுகின்றன.)




**உரு 5 மாகாண அடிப்படையிலான தரவுகளுக்கான லோறன்ஸ் வளையிகளும் கினிக்குணகமும் - 2003/04**

*மூலம் : நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதாரப் பொது மதிப்பாய்வு 2003/04, இலங்கை மத்திய வங்கி*

உரு 5ன் பிரகாரம், பூரண சமத்துவக் கோட்டிலிருந்து விலகிச் செல்லும் லோறன்ஸ் வளையிகள் மாகாண அடிப்படை




| | நகரம் | கிராமம் | பெருந் தோட்டம் |
|---|---|---|---|
| 1986/87 | 0.53 | 0.50 | 0.31 |
| 1996/97 | 0.54 | 0.45 | 0.29 |
| 2006/07 | 0.60 | 0.52 | 0.46 |
| 2009/10 | 0.54 | 0.54 | 0.50 |

**உரு 4 வருமானம் பெறுவோர் அடிப்படையில் இலங்கையின் துறைரீதியான கினிக்குணகம் 1986-2010**

*மூலம் : குடும்ப வருமானம் மற்றும் செலவினம் பற்றிய பொது மதிப்பாய்வு இறுதி அறிக்கை (2009/10), தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

யிலான சமத்துவமின்மை பற்றிய இரு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. அதில் ஒன்று, தீவிரத்தன்மையின் அளவின் மத்தியிலும், அனைத்து மாகாணங்களி லுமே உயரளவிலான சமத்துவமின்மை இருந்து வந்துள்ளது என்பதாகும். அடுத்தது, மாகாணங்கள் மத்தியிலான சமத்துவமின்மையின் அளவில் எளிதில் பார்த்தறியக் கூடிய வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன என்பதாகும். இத்தரவுத் தொகுதிகள் 2003/04 மற்றும் 2009/10 ஆகிய இருவேறுபட்ட காலப்பகுதிக்கான பொது மதிப்பாய்விற்கானவையாக இருப்பதனால், இவற்றை ஒப்பிட முடியாதுள்ளபோதும், 2003/04ல் மிகக் குறைந்தளவான சமத்துவ மின்மையைப் பதிவுசெய்திருந்த சப்ரக முவ மாகாணமானது 2009/10ல் மிக உயர் வான சமத்துவமின்மையைப் பதிவுசெய்து ள்ளது என்பது கவனத்திற் கொள்ளத்தக்க ஒன்றாகும். சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள இரத்தினபுரி மாவட்டமானது அனைத்து மாவட்டங்களிலுமே மிகவும் உயர்வான கினி விகிதப் பெறுமானத்தைப் (0.57) பதிவுசெய்துள்ளது.

**அட்டவணை 4 தென்னாசிய நாடுகளுக்கான மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI)**

| நாடு | HDI 2010 | HDI 2011 |
|---|---|---|
| பாகிஸ்தான் | 0.503 | 0.504 (145) |
| பங்களாதேஷ் | 0.496 | 0.500 (146) |
| நேபாளம் | 0.455 | 0.458 (157) |
| ஆப்கானிஸ்தான் | 0.394 | 0.398 (172) |
| இலங்கை | 0.686 | 0.691 (97) |
| மாலைதீவு | 0.658 | 0.661 (109) |
| இந்தியா | 0.542 | 0.547 (134) |

* அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கமானது நாடுகளின் தரவரிசைப்படுத்தலைக் குறிக்கின்றது

*மூலம் : ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மனித அபிவிருத்தி அறிக்கை - 2011*

## மனித அபிவிருத்தியில் காணப்படும் சமத்துவமின்மை

"மனிதத் தொழிற்பாட்டையும் இயலாற்றல் களையும் விரிவுபடுத்துவதன் மூலம், மக்க ளுடைய தெரிவுகளை அதிகரிக்கச் செய்யும் செயல்முறையே மனித அபிவிருத்தியாகும்"- மனித அபிவிருத்தி தொடர்பான அறிக்கை, UNDP, 1990.[3]


ஒரு நாட்டில் மனித அபிவிருத்தியின் மூன்று பரிமாணங்களில், அதாவது நீண்ட ஆயுட்காலம், அறிவாற்றலைப் பயன்படுத் துவதற்கான வாய்ப்பு, ஏற்றுக்கொள்ளத் தக்க வாழ்க்கைத்தரம் என்பவற்றில் அடை யப்பட்ட சராசரிச் சாதனைகளை, கண்டறி வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சுருக்கமான அளவீடே மனித அபிவிரு த்திச் சுட்டெண்ணாகும் (HDI).[4]

கடந்த காலத்தில், இலங்கையில் மட்ட ளவான பொருளாதார வளர்ச்சியே காணப் பட்டபோதும், மனித அபிவிருத்தி தொடர் பான அடைவுகள் அதிகளவு மெச்சுதலுக் குரியவையாக இருந்துவந்துள்ளன. சரா சரிப் பொருளாதார வளர்ச்சி 4.2 சதவீதமாக இருந்தபோதும் சமூகக் குறிகாட்டிகளி லான வெளிப்பாடுகள் மிகமிகச் சிறந்த தாகக் காணப்பட்ட காலகட்டமான சுதந் திரத்திற்குப் பின்னரான முதல் மூன்று தசாப்த காலத்தில் (1948-1977) இது குறிப்பிடத்தக் களவு தெளிவாகத் தெரியக் கூடியதாக இரு ந்தது. தற்போது, மனித அபிவிருத்திச் சுட் டெண் தொடர்பான உலகளாவிய தரவரி சைப்படுத்தலில் இலங்கை 97வது இடத் தில் இருப்பதுடன், தெற்காசியப் பிராந் தியத்தில் மிகவும் உயர்வான நிலையில் உள்ளது (அட்டவணை 4ஐப் பார்க்கவும்).

"குறைந்த வருமானத்தின் இன்னாத விளை வை வெற்றிகொள்வதில் முன்னோடியாகத் திகழ்ந்த இலங்கையின் உபாயரீதியான அனுபவமானது வறிய நாடுகளில் காணப் படும் ஆதரவளித்தல் மூலமான சமூகப் பாதுகாப்பிற்கான நிகழ்வாய்ப்புகளைப் புரிந்து கொள்வதற்கான மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது"- அமர்த்தியா சென்.


இலங்கை மிக உயரளவிலான ஆயுள் எதிர்பார்க்கையையும் மிகக் குறைந்தள விலான மரண வீதத்தையும் சாதனைகளாக அடைந்துள்ளது. இது மிகு உயரளவான ஆள்வீத வருமானத்தைக் கொண்டுள்ள நாடுகளை விட அதிகளவுக்கு முன்னேற்ற மான நிலையில் உள்ளது. அமர்த்தியா சென் (1995) அவர்களின் கூற்றுப்படி, பொருளாதார வளர்ச்சியின் இறுதி இலக்கு யாதெனில், மனித அபிவிருத்தியை அடை வதாகும். ஆகவே, இலங்கை ஒரு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளதைப் போன்று, உயரளவிலான ஆள்வீத வருமான மட்டங் களை அடைவதற்கு முன்னர் கூட ஒரு நாடு அக்குறிக்கோளை அடைந்திருக்குமாயின், அந்நாடு பொருளாதார வளர்ச்சியின் இறுதிக் குறிக்கோளை அடைந்துவிட்டது என்பது இதன் அர்த்தமாகும். இலங்கை யின் குறைந்தளவான பொருளாதார வளர்ச்சி வீதங்களுக்கு சமூகநலக் கொள்கைகளே காரணமாக இருந்துள்ளன எனும், எதிர் நிலைக் கருத்துக்களைக் கொண்ட பொரு ளியலாளர்களும் காணப்படுகின்றனர். பொருளாதார வளர்ச்சியின் இழப்பி லேயே மனிதவள அபிவிருத்தியிலான இந்த உயர் சாதனைகள் அடையப்பட்டன என்பதையும், நெடுங்காலம் நிலைத்திருக் கின்ற வறுமைக்கும் வேலையின்மைக்கும் இந்த நாட்டின் உயர் சமூகநலச் செலவீனங் களே பொறுப்பாக உள்ளன என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

"மக்களின் தெரிவுகளை விரிவுபடுத்துவதே அபிவிருத்தியின் அடிப்படை நோக்கமாகும். கோட்பாட்டு அடிப்படையில் பார்க்கும்போது, அத்தெரிவுகள் எல்லையற்றவையாக இருப் பதுடன், காலப்போக்கில் மாற்றமடையக்




**உரு 6 1990/91 - 2009/10 காலப்பகுதிக்கான குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வின் அடிப்படையில் வறுமை ஆட்கணிப்பீட்டு விகிதம்/சதவீதம்**

*மூலம் : வறுமைக் குறிகாட்டிகள்-குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*




**உரு 7 துறைரீதியாக வறுமை ஆட்கணிப்பீட்டு விகிதம் (சதவீதம்)**

*மூலம் : வறுமைக் குறிகாட்டிகள்-குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

கூடியவையாகவும் உள்ளன. வருமானம் அல்லது பொருளாதார வளர்ச்சி தொடர்பிலான எண்ணிக்கைகளில் ஏற்படும் அதிகரிப்பை அன்றி, வழமையாக முற்றிலுமாக அல்லது உடனடியாக வந்துசேராத மனித வாழ்க்கையின் ஏனைய அம்சங்களில் அடையப்படும் முன்னேற்றங்களையே முக்கியமானவை என மக்கள் கருதுகின்றனர். அறிவாற்றலைப் பயன்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்புகள், சிறந்த போசாக்கும் சுகாதார சேவைகளும், மேலும் பாதுகாப்பான வாழ்வாதாரம், குற்றச்செயல்கள் மற்றும் உடல்ரீதியான வன்முறையிலிருந்து பாதுகாப்பு, ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழித்தல், அரசியல் மற்றும் கலாசாரரீதியான சுதந்திரங்கள், சமூகச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான பாதுகாப்புணர்வு என்பனவே அவையாகும். நீடித்த, ஆரோக்கியமான, ஆக்கத்திறனுடைய வாழ்க்கையை மக்கள் அனுபவிப்பதைச் சாத்தியப்படச் செய்யும் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதே அபிவிருத்தியின் குறிக்கோளாகும்."- Mahbub ul Haq (1934- 1998)[5]

கட்டுரையின் பின்வரும் பகுதியில், மனித அபிவிருத்தியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அம்சங்களிலும் அவற்றுடன் தொடர்புடைய பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகளிலும் கவனம் செலுத்துவோம்.

**வறுமை**

நீடித்திருந்த பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அண்மைக் காலத்தில் மெய் வருமானமும் வாழ்க்கைத் தரமும் அதிகரித்துள்ளபோதும், வருமானத்திலும் செல்வத்திலும் அடையப்பட்ட நன்மைகள் நாட்டு மக்கள் மத்தியில் சமத்துவமற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, சிலர் செல்வந்தர்களாகவும் ஏனையோர் வறியோராகவும் ஆகியுள்ளனர். முழுநிலை/பூரண வறுமை அளவீடு என்பது குறிப்பிட்ட ஒரு வருமான மட்டத்திற்குக் கீழே வசிக்கும் மக்களின் அல்லது குறிப்பிட்ட அடிப்படைப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத நிலையில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. அதேவேளை, சார்புநிலை வறுமை அளவீடு என்பது ஒரு குடும்பத்தின் நிதி வளங்கள் பொருளாதாரத்தின் சராசரி வருமான மட்டத்திற்குக் கீழே எந்தளவிற்கு வீழ்ச்சியடைகின்றன என்பதைப் பற்றியதாகும்.

இலங்கையில் முழுநிலை வறுமையை அளவிடுவதற்கு அதிகளவு பயன்படுத்தப்பட்டு வரும் பொதுவான ஒரு சுட்டெண்ணாக ஆள் கணிப்பீட்டு விகிதம் அமைந்துள்ளது. இந்த ஆள் கணிப்பீட்டு விகிதமானது வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் நபர்களது எண்ணிக்கையை மொத்தச் சனத்தொகையின் சதவீதமாக முன்வைக்கின்றது.[6] 2009/10ன் பொது மதிப்பாய்வு காலத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் பெறுமதி மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 3,028 ரூபா மெய் மொத்தச் செலவீனமாக இருந்தது. முன்னைய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றத்தைப் பயன்படுத்தி, அதன் அடிப்படை ஆண்டான 2002ல் 1,423 ரூபாவாகக் காணப்பட்ட, உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம், இப்பெறுமானம் பெறப்பட்டது. கடந்த இரு தசாப்த காலத்தில் வறுமைக் குறைப்பில் இலங்கை குறிப்பிடத்தக்க

**அட்டவணை 5 மாவட்ட அடிப்படையில், குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வுக் காலப்பகுதிக்கான (1990-2010) வறுமை ஆட்கணிப்பீட்டு விகிதம்**


| மாவட்டம் | பொது மதிப்பாய்வுக் காலம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1990/91 | 1995/96 | 2002 | 2006/07 | 2009/10 |
| கொழும்பு | 16.2 | 12.0 | 6.4 | 5.4 | 3.6 |
| கம்பஹா | 14.7 | 14.1 | 10.7 | 8.7 | 3.9 |
| களுத்துறை | 32.3 | 29.5 | 20.0 | 13.0 | 6.0 |
| கண்டி | 35.9 | 36.7 | 24.9 | 17.0 | 10.3 |
| மாத்தளை | 28.7 | 41.9 | 29.6 | 18.9 | 11.5 |
| நுவரெலியா | 20.1 | 32.1 | 22.6 | 33.8 | 7.6 |
| காலி | 29.7 | 31.6 | 25.8 | 13.7 | 10.3 |
| மாத்தறை | 29.2 | 35.0 | 27.5 | 14.7 | 11.2 |
| அம்பாந்தோட்டை | 32.4 | 31.0 | 32.2 | 12.7 | 6.9 |
| யாழ்ப்பாணம் | * | * | * | * | 16.1 |
| வவுனியா | * | * | * | * | 2.3 |
| மட்டக்களப்பு | * | * | * | 10.7 | 20.3 |
| அம்பாறை | * | * | * | 10.9 | 11.8 |
| திருகோணமலை | * | * | * | * | 11.7 |
| குருணாகல் | 27.2 | 26.2 | 25.4 | 15.4 | 11.7 |
| புத்தளம் | 22.3 | 31.1 | 31.3 | 13.1 | 10.5 |
| அநுராதபுரம் | 24.4 | 27.0 | 20.4 | 14.9 | 5.7 |
| பொலன்னறுவை | 24.9 | 20.1 | 23.7 | 12.7 | 5.8 |
| பதுளை | 31.0 | 41.0 | 37.3 | 23.7 | 13.3 |
| மொனராகலை | 33.7 | 56.2 | 37.2 | 33.2 | 14.5 |
| இரத்தினபுரி | 30.8 | 46.4 | 34.4 | 26.6 | 10.5 |
| கேகாலை | 31.2 | 36.3 | 32.5 | 21.1 | 10.8 |

* தரவுகள் கிடைக்கவில்லை

*மூலம் : வறுமைக் குறிகாட்டிகள்-குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு 2009/10, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. 2009/10ம் ஆண்டின் வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொதுமதிப்பாய்வின் படி, 1995/96ல் 28.8 சதவீதமாகக் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிப்போரின் வீத அளவானது, 2009/10ல் 8.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது (உரு 6ஐப் பார்க்கவும்). தேசிய மட்டத்திலான விரும்பத்தக்க இச்சாதனையின் மத்தியிலும் குறிப்பிடத்தக்களவிலான பிரதேசரீதியான மற்றும் துறை சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

1995லிருந்து காணப்பட்டு வந்த கிராமியத்துறை வறுமையின் திடீர் வீழ்ச்சியானது தேசிய மட்டத்திலான வறுமையின் முன்னொருபோதும் இல்லாத இவ்வீழ்ச்சிக்குப் பங்களிப்புச்செய்த, மிக முக்கியமான ஒரு காரணியாக அமைந்துள்ளது. உண்மையில், ஒரேசீராக வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த வறுமை தொடர்பான இப்போக்கிற்கு மாறாக, 1990/91 - 2006/07 காலப்பகுதியில் பெருந்தோட்டத்துறையிலான வறுமை 55 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்திருந்தது. எனினும், பின்னர் இப்போக்கு தலைகீழாக மாற்றமடைந்து, பெருந்தோட்டத்துறையிலான வறுமை மூன்றில் இரண்டு பங்கு வீழ்ச்சியடைவதற்குப் பின்னணியாக இருந்த மிக முக்கியமான ஒரு காரணியாக 2006-2010 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வறுமைக் குறைப்புச் செயற்பாடுகள் அமைந்திருந்தன. 2006/07ல் இரு மடங்காகக் காணப்பட்ட, பெருந்தோட்ட மற்றும் கிராமியத் துறைகளுக்கு இடையிலான ஆட்கணிப்பீட்டு விகிதத்தின் இடை வெளியானது 2010ம் ஆண்டிற்குள் புறக்கணிக்கத்தக்க அளவிற்கு திடீரெனச் சுருங்கியது (உரு 7ஐப் பார்க்கவும்).





**உரு 8 இலங்கையின் வேலையின்மை வீதம் 1993-2011**

*மூலம் : இலங்கையின் ஊழியப்படை பற்றிய பொது மதிப்பாய்வு வருடாந்த அறிக்கை 2010, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தரவுகள்*

சுயேட்சையான அளவீடுகளின்படி, கிராமியத் துறையின் வறுமை நிகழ்வு வீதமானது பெருந்தோட்டத் துறையின் வறுமை நிகழ்வு வீதத்தை விடவும் குறைவாகக் காணப்படுகின்ற போதும், கிராமியத்துறையில் உள்ள வறியோரின் எண்ணிக்கை 1.53 மில்லியனுக்கும் மேற்பட்டதாக இருப்பதுடன், அது இந்நாட்டிலுள்ள வறியோரின் மொத்த எண்ணிக்கையில் 84.7 சதவீதமாகக் காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் வறுமையானது யதார்த்தத்தில் ஒரு கிராமிய வறுமையாகக் கருத்துருக் கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களையும் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களுமே வறுமை தொடர்பான தேசிய ரீதியான புள்ளிவிபரங்களுக்கு இணையொத்ததாக, குறிப்பிடத்தக்களவிலான வறுமைக் குறைப்பை 2006/07லிருந்து பதிவு செய்துவந்துள்ளன. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2009/10ம் ஆண்டிற்கான குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான பொது மதிப்பாய்வின்படி, 2006/07ம் ஆண்டில் மிக உச்சநிலையில் 33.8 சதவீதமாகக் காணப்பட்ட நுவரெலியா மாவட்டத்தின் வறுமை ஆட்கணிப்பீட்டு விகிதமானது, 2009/10ம் ஆண்டில் 7.6 சதவீதமாகக் குறைவடைந்தது. முன்னொருபோதும் இல்லாத மிகப் பாரியளவிலான இந்த 77.5 சதவீத வறுமைக் குறைப்பானது தேசியரீதியான வறுமை மட்டத்திற்கும் குறைவானதாகும். 2006/07ல் மிக வறுமையான மாவட் டங்களாக இருந்த பதுளை, மொனராகலை, இரத்தினபுரி ஆகியவற்றிலும் வறுமை முறையே 44 %, 56 %, 60 % எனும் வீத அளவுகளில் குறைவடைந்துள்ளது. குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான பொதுமதிப்பாய்வுக் காலமாகிய 2009/10ல், வடக்குக் கிழக்கின் யுத்தப் பிரதேசங்களைத் தவிர தொடர்ந்தும் வறுமையான மாவட்டமாக இருந்து வந்த மொனராகலையானது 14.5 சதவீத ஆட்கணிப்பீட்டு விகிதத்தைப் பதிவுசெய்திருந்தது (அட்டவணை 5ஐப் பார்க்கவும்).




**உரு 9 மாவட்ட அடிப்படையில் வேலையின்மை வீதம் 2010**


*மூலம் : இலங்கையின் ஊழியப்படை பற்றிய பொது மதிப்பாய்வு வருடாந்த அறிக்கை 2010, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தரவுகள்*

2009/10ம் ஆண்டின் குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான பொதுமதிப்பாய்வின் தரவுகளை மாகாண அடிப்படையில் தொகுத்துப் பார்க்கின்றபோது, கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள மேல் மாகாணமானது அனைத்து மாகாணங்கள் மத்தியிலும் மிகக் குறைந்தளவான வறுமை வீதத்தைப் (4.2 %) பதிவுசெய்துள்ளது என்பது தெரியவருகின்றது. அதே வேளை, ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இதே காலகட்டத்தில் கிழக்கு (14.8 %), ஊவா (13.7 %), வடக்கு (12.8 %) ஆகிய

மாகாணங்கள் வறுமை தொடர்பில் உயர் ந்தளவிலான ஆட்கணிப்பீட்டு விகிதங் களைப் பதிவு செய்திருந்தன. வறுமை தொடர்பான இவ்வேறுபாடுகள், இலங் கையின் வெவ்வேறு மாகாணங்கள் மத்தியில் காணப்படுகின்ற பல்வேறு பட்ட பௌதிகரீதியான மற்றும் கண்ணு க்குப் புலப்படாத சமத்துவமின்மை யுடன் தொடர்புபடுத்தப்படுவதற்கான நிகழ்வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. உட்கட்டுமான வசதிகளின் சமத்துவமற்ற பகிர்வு, கைத்தொழில்சார்ந்த தொழில் முயற்சிகளின் சமச்சீரற்ற பரம்பல், பொருத்தமான செயல் இலக்குகளைக் கொண்டிராத அரசாங்க சமூக நலத்திட்ட ங்கள், உள்நாட்டு விவசாயத் துறை அலட்சியப்படுத்தப்பட்டமை, 30 வருட ங்களுக்கும் மேலாக நீடித்த வட-கிழக்கு ஆயுத முரண்பாடு என்பவை இச்சமத் துவமின்மைக்கான காரணிகளில் சில வாகும்.

## கல்வி

97.5 சதவீதமாகக் காணப்படும் ஆரம் பப் பாடசாலைச் சேர்வுவீதம் காரணமாக, இலங்கையானது தேசிய மட்டத்தில் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்னும் நிலைக்கு அண்மித்த ஒரு கட்டத்தை எட்டி யுள்ளது. 2010ம் ஆண்டில் 91.9 ஆகக் காணப் பட்ட சராசரி எழுத்தறிவு வீதம் இதை வெளிப்படுத்துகின்றது. ஆயினும் கூட 5-20 இடைப்பட்ட வயதுப் பிரிவினரில் 3.5 சதவீதத்தினர் ஒருபொழுதுமே பாடசாலை க்குச் சென்றதில்லை என்பதை 2009/10ம் ஆண்டின் குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பான பொது மதிப்பா ய்வு புலப்படுத்தியுள்ளது. இதனுடன் தொடர்புடைய பெறுமானங்கள் நகரங் களில் 2.6 சதவீதமாகவும், கிராமப்புறங் களில் 3.5 சதவீதமாகவும் காணப்படு வதுடன், பெருந் தோட்டத் துறையைப் பொறுத்தவரை கவலையளிக்கும் வகையில் 5 சத வீதமாக உள்ளது. மொத்தச் சனத் தொகையை கவனத்தில் கொள்ளும்போது, பாடசாலைக்குச் செல்லாதோரின் எண்ணிக்கைதொடர் பில் இம்மூன்று துறைகளிலும் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் (நகரம் 2.5 %, கிராமம் 4.0 %, பெருந்தோட்டம் 13.1 %) சற்றே பெரிதாக உள்ளன (அட்டவணை ஐப் பார்க் கவும்). மாகாணங்கள் மத்தியில் க.பொ.த (சாதாரணதர) வகுப்பு வரையான பாடசாலை அடைவு மட்டத்தில் திடீர் மாற்றங்கள் எதனையும் அவதானிக்க முடியவில்லை. இருந்தபோதிலும், க.பொ.த (உயர்தர) சித்தி வீதம் தொடர்பில் மாகாணங்கள் மத்தியில் மிகப்பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களின் க.பொ.த (உயர்தர) சித்தி வீதங்கள் மேல் மாகாணத்தின் சித்தி வீதத்தின் அரைவாசிக் கும் குறைவாகும். ஆரம்பக் கல்வி வாய்ப் புகளை அனைவருக்கும் வழங்குவதில் இலங்கை வெற்றி பெற்றுள்ளதைப் போல், கல்வித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒதுக்கமாயுள்ள பிரதேசங்களிலும் யுத்தகால அழிவிற்கு உள்ளான பிரதேசங்களிலும் கல்விப் பெறுபேறுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தற்போது சிறப்புக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது.




**உரு 10 மாகாண அடிப்படையில் வேலையின்மை வீதம் 2010**

*மூலம் : இலங்கையின் ஊழியப்படை பற்றிய பொது மதிப்பாய்வு வருடாந்த அறிக்கை 2010, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தரவுகள்*

## வேலையின்மை

2010ல் 4.9 சதவீதமாகக் காணப்பட்ட வேலையின்மை வீதமானது 2011ல் வெளிப் படையாகத் தெரியக்கூடிய வகையில் 4.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது (உரு 8ஐப் பார்க்கவும்). முன்னைய வருடத் தில் 11.6 சதவீதமாக இருந்த க.பொ.த (உயர்தர) மற்றும் அதற்கும் மேற்பட்ட கல்வித் தகைமையுடையோர் மத்தியிலான வேலையின்மை வீதம் 2011ம் ஆண்டில் 9.0 சதவீதமாகக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. உடன் நிகழ்வாக, 2010ல் 6.9 சதவீதமாகக் காணப்பட்ட க.பொ.த (சாதாரணதர) கல்வித் தகைமை யுடையோர் மத்தியிலான வேலையின்மை வீதமும் 2011ம் ஆண்டில் 5.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. மேலும் துல்லியமாகக் கூறின், 2010ம் ஆண்டில் முறையே 20.3 மற்றும் 13.8 சதவீதங்களாக இருந்த 15-19 வயதுப் பிரிவினர், 20-29 வயதுப் பிரிவினர் ஆகி யோர் மத்தியிலான இளைஞர் வேலையின்

**அட்டவணை 6 கல்வி மட்டம், துறைரீதியான மற்றும் மாகாண அடிப்படையில் சனத்தொகையின் சதவீத அளவிலான பரம்பல் 2009/10**

| | பாடசாலைக்குச் செல்லாதோர் | 5ம் தரம் வரை கற்றோர் | 6-10 வரை கற்றோர் | க.பொ.த.(சா.த) சித்தியடைந்தோர் | க.பொ.த.(உ.த) சித்தியடைந்தோர் | விசேட கல்வி கற்றோர் |
|---|---|---|---|---|---|---|
| முழு இலங்கை | 4.2 | 25.1 | 44.6 | 14.7 | 11.2 | 0.1 |
| துறை | | | | | | |
| நகரம் | 2.5 | 21.6 | 42.1 | 17.5 | 16.2 | 0.1 |
| கிராமம் | 4 | 24.6 | 45.5 | 14.9 | 10.8 | 0.1 |
| பெருந்தோட்டம் | 13.1 | 43 | 37.7 | 3.8 | 2.3 | 0.1 |
| மாகாணம் | | | | | | |
| மேல் மாகாணம் | 2.6 | 18.9 | 43.4 | 19.4 | 15.4 | 0.1 |
| மத்திய மாகாணம் | 6.2 | 28.1 | 42.8 | 12.2 | 10.6 | 0.1 |
| தென் மாகாணம் | 4.9 | 25.6 | 42.1 | 15.6 | 11.6 | 0.1 |
| வட மாகாணம் | 1.4 | 28.9 | 52 | 10.5 | 7 | 0.2 |
| கிழக்கு மாகாணம் | 4.3 | 35.1 | 41.2 | 11.9 | 7.4 | 0.1 |
| வட-மேல் மாகாணம் | 4.1 | 26.8 | 46.3 | 13.3 | 9.4 | 0 |
| வட-மத்திய மாகாணம் | 2.9 | 25.4 | 51.4 | 12.5 | 7.5 | 0.1 |
| ஊவா மாகாணம் | 7.9 | 28.3 | 44.7 | 12 | 7 | 0.1 |
| சப்ரகமுவ மாகாணம் | 5.1 | 26.1 | 47.5 | 11.3 | 9.9 | 0.1 |

*மூலம் : குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு இறுதி அறிக்கை (2009/ 10), தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

மையானது 2011ல் முறையே 15.4 மற்றும் 12.4 சதவீதங்களாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.[7]

தேசிய மட்டத்திலான இந்நிகழ்வுக் காட்சிகள் அதிகளவு மெச்சுதலுக்குரிய வையாக உள்ளன எனும் யதார்த்த நிலையின் மத்தியிலும், மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் கணிசமானளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. கண்டி (9.6 %), அம்பாந்தோட்டை (8.9 %), காலி (8.9 %) என்பன மிக உயரளவிலான வேலையின்மை வீதங்களைப் பதிவு செய்துள்ளன (உரு 9ஐப் பார்க்கவும்). இவ்வாறாக, இம்மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள தென் மாகாணமும் (7.8 %) மத்திய மாகாணமும் (6.7 %) 2010ம் ஆண்டில் மிக உயரளவான வேலையின்மை வீதங்களைப் பதிவு செய்திருந்தன (உரு 10ஐப் பார்க்கவும்).

**சமத்துவமின்மையை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கான ஆலோசனைகள்**

பொருளாதார வளர்ச்சியையும் தேசிய மட்டத்திலான மனித அபிவிருத்தியின் மிகவும் முக்கியமான சில அம்சங்களையும் அடைவதில் இலங்கை வெற்றி பெற்றுள்ளபோதும், ஏற்கனவே முன்னிலைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளவாறு, பிரதேசரீதியில் குறிப்பிடத்தக்களவு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. தற்போதைய அரசாங்கத்திற்கு முன்னால் உள்ள மிக முக்கியமான சவால் யாதெனில், பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் பலாபலன்களை மேல் மாகாணத்திற்கு அப்பால் பரவலடையச் செய்வதாகும்.

அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைத் தொகுதியான மஹிந்த சிந்தனை-எதிர்காலத் தொலைநோக்கானது, இலங்கையை ஆசியாவின் அதிசயமாக ஆக்கும் நோக்கிலான ஐந்து மத்திய நிலையங்களைத் தோற்றுவிப்பதன் மூலம், பொருளாதார வளர்ச்சியையும் பிரதேச அபிவிருத்தியையும் தூண்டுவதற்கான உபாயங்களை இனங்கண்டுள்ளது. ஆயினும் கூட பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள பிரிவினருக்கும் நியாயமான முறையில் சென்றடைவதை உறுதிப்படுத்துவது மிகமிக முக்கியமானதாகும். பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் சமத்துவமின்மையை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கும் பின்வரும் செயற்பாடுகளில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

- மேல் மாகாணத்திற்கு வெளியில் போதுமானளவு உட்கட்டுமான வசதிகளை வழங்குதலும் கிராமப் புறங்களுடன் வர்த்தக மத்திய நிலையங்களை இணைத்தலும்.
- அரசாங்கம் - தனியார் பங்குடைமை முயற்சிகளை, குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில், ஊக்குவித்தலும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக உட்கட்டுமான அபிவிருத்தியில் சிறப்புக் கவனம் செலுத்துதலும்.
- உள்நாட்டு விவசாயத் துறையை அபிவிருத்தி செய்தல்
- குறைவிருத்திப் பிரதேசங்களில் வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்தல்
- குறுங்கால அரசியல் நலன்களைக் குறிக்கோளாகக் கொள்ளாது, வறிய மக்களுடன் தொடர்புடைய உறுதியான சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை (social safety nets and safety ropes) இணைச்சேர்க்கையாகக் கொண்ட சமூகநலத் திட்டங்களை செயல்இலக்காகக் கொள்ளுதல்

**துணைநூற் பட்டியல்:**


Annual Report of Central Bank, 2008, 2009, 2011

Dangalle, N. 2002. Regional Development Experience of Sri Lanka in Narman,Anders &Karunanayake, Kamal (ed). Towards a New Regional and LocalDevelopment Research Agenda. Department of Human and EconomicGeography, Goteborg University, and Center for Development Studies, University of Kelaniya, Sri Lanka.

Household Income and Expenditure Survey 2009/10, Final Report, Department of Census and Statistics- Sri Lanka.

Human Development Report 1990 & 2011,UNDP

Mahinda Chintana – Vision for the Future the Development Policy Framework 2010, Department of National Planning, Ministry of Finance and Planning, Sri Lanka

Millennium Development Goals Sri Lanka:Country Report 2008/2009, Colombo: Institute of Policy Studies of Sri Lanka, 2010

Poverty Indicators-Household Income and Expenditure Survey 2009/10, Department of Census and Statistics

Quarterly Labour Force Survey-2011 Q3-Department of Census and Statistics

Sen, A.K (1995), Inequality Reexamined, Oxford University Press

Sri Lanka Labour Force Survey Annual Report 2010- Department of Census and Statistics –Sri Lanka

Sri Lanka Socio-economic Data 2011, Vol xxxiv, Central Bank of Sri Lanka


**அடிக்குறிப்புகள்:**

[1] As per World Bank definition countries having GDP per capita US Dollars 996 - 3945 are known as Lower Middle Income Countries

[2] The Central Bank of Sri Lanka has not produced Consumer Finance and Socio-economic Survey data after 2003/04 period. Thus, this is the latest available data regarding deciles distribution of provincial income as reported in the Central Bank Annual Report 2011 released in April 2012.

[3] United Nations Development Program

[4] The following indicators are used to represent three basic dimensions in computing HDI. (1) Life expectancy at birth, (2) Mean years of schooling and expected years of schooling, (3) GNI per-capita in US dollars adjusted for purchasing power parity

[5] Founder of the Human Development Report

[6] HCR

[7] Quarterly Labour Force Survey-2011 Q3-Department of Census and Statistics

■

............. 14ம் பக்கத் தொடர்ச்சி


*A synthesis of the approach, conclusions and recommendations of TEEB.* United Nations Environment Programme, Malta

United Nations Department of Economic and Social Affairs, 2011, *Rethinking Poverty*, Report on the World Social Situation 2010, United Nations, New York.

United Nations Development Programme, 2011, *Human Development Report 2010 —20th Anniversary Edition: The Real Wealth of Nations: Pathways to Human Development*, United Nations, New York.

United Nations Development Programme Thailand. 2007. *Thailand Human Development Report 2007: Sufficiency Economy and Human Development*, UNDP, Bangkok.

World Bank. 2008. *Global Purchasing Power Parities and Real Expenditures, 2005 International Comparison Program*, World Bank, Washington D.C.


**அடிக்குறிப்புகள்:**

[1] This paper is based on background work carried out by Neranjana Gunetilleke, Nilakshi De Silva and Gayathri Lokuge, for a global research initiative co-ordinated by the Institute of Development Studies in 2010/2011.

[2] http://www.coomaraswamy.com/

[3] For example, see Oxford Poverty and Human Development Initiative www.ophi.org.uk

■

# கல்வி மற்றும் சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மை

**கலாநிதி நிஷா அருணாதிலக**
கொள்கை ஆய்வு நிலையம்
இலங்கை

நீண்ட காலமாக இழுபட்ட இலங்கையின் பிரிவினைவாத யுத்தம், மே 2009ல் முடிவுக்கு வந்தபின்னர், நாட்டின் நடுத்தர காலப் பொருளாதார வளர்ச்சிக்கான வெற்றி வாய்ப்புகள் நம்பிக்கை தருவதாக உள்ளன. 2003 தொடக்கம் 2011 வரையான காலப் பகுதியில், இலங்கை சராசரியாக 6 சதவீதத்திற்கும் கூடுதலான பொருளாதார வளர்ச்சியைப் பேணிவந்துள்ளது. இந்த வளர்ச்சியுடன் இணைந்த வகையில், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் தேசிய மட்டத்தில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் சராசரி நிலையில் இருந்தன. இருப்பினும், இதன் மூலம் அனைவரும் நன்மையடைவதற்கு, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளிலான இம்முன்னேற்றங்கள் வழிசெய்யவில்லை. இந்த முன்னேற்றங்களினால் வறியவர்கள் நன்மையடைந்தனரா என்பதை இந்தக் கட்டுரை மதிப்பீடு செய்கின்றது. மேலும், சுகாதாரம் மற்றும் கல்வியின் அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் முன்னேற்றம் கண்டுள்ளனவா என்பதை இக்கட்டுரை குறிப்பாக ஆராய்கின்றது.

**2.0 இலங்கையில் சுகாதாரத்திலும் கல்விப் பெறுபேறுகளிலும் அடையப்பட்ட முன்னேற்றங்கள்**

பொதுவாகப் பார்க்குமிடத்து, இலங்கையின் மனித அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காட்டி வந்துள்ளன. 2000ம் ஆண்டில் 29.4ஆக இருந்த நிறைகுறைந்த பிள்ளைகளின் சதவீதம் 2006/2007ல் 26.9ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. இதுதவிர, 1996ம் ஆண்டில் 95.7ஆக இருந்த ஆரம்பப் பாடசாலைச் சேர்வுவீதம் 2006/2007ல் 97.4ஆக அதிகரித்திருந்தது.[1] இம்முன்னேற்றங்கள் சமூகத்தின் சகல தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை என்பதை, காலப்போக்கில் நிகழ்ந்த இந்த முன்னேற்றங்களில் சிலவற்றை வெவ்வேறுபட்ட வருமானக் குழுக்களுடன் தொடர்புபடுத்தி ஆராயப்பட்ட ஒப்பீட்டாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

கல்வியின் அனுகூலங்களைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்புகள், குறிப்பாக ஆரம்பக் கல்வியின் அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள், காணப்படுகின்றபோதும், இத்துறையைப் பொறுத்தவரை, தரம்வாய்ந்த கல்வியையும் பொருத்தப்பாடுடைய கல்விச்சூழலையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மையை மேம்படுத்துதல் என்பது பல தசாப்தங்களாக சவாலாகவே இருந்து வருகின்றது (NEC, 2003). கல்விக் கொள்கை தொடர்பான அனேகமான அண்மைக் கால ஆவணங்கள் கல்வியின் பண்புத் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. கல்வி கற்பதற்கு உயரளவான வாய்ப்புகள் உள்ளபோதும், சகல தரத்திலும் உள்ள மாணவர்களினதும் கல்விப் பெறுபேறுகள் இன்னும் முன்னேற்றமடைய வேண்டிய நிலையில் உள்ளன (NEC, 2003; உலக கல்வி, 2005). பிள்ளைகளில் அனேகமாக ஐந்திலொரு பங்கினர் உரியவயதில் தமது ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்வதில்லை என்பதை பிரதான கல்வி சுற்றுவட்டங்கள் தொடர்பான பூர்த்தி வீதங்கள்[2] எடுத்துக் காட்டுகின்றன. மேலும், பாடசாலைக் கல்விப் பூரணப்படுத்தல் வீதங்களை வர்க்க, பால், துறை, மற்றும் மாகாண அடிப்படையில் பார்க்கும்போது, பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இதில், பெருந்தோட்டத் துறையில் உள்ள வறிய ஆண் பிள்ளைகளின் நிலைமை மிகவும் மோசமான தாகும். உயர்தரப் பாடசாலை சுற்றுவட்டங்களைப் பொறுத்தவரை, கல்வியைப் பூர்த்திசெய்யும் வீதங்கள் குறைவாக இருப்பதுடன், அவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் கூட பாரியளவில் காணப்படுகின்றன. பாடசாலைச் சுற்றுவட்ட, குறிப்பாக உயர்கல்விச் சுற்றுவட்ட, பூர்த்தி வீதங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் க.பொ.த. சாதாரணதர மற்றும் க.பொ.த. உயர்தர சித்திவீதங்களில் வெளிப்படுகின்றன. மிகுந்த செல்வந்தர்களாகவுள்ள 20 சதவீதத்தினரில் அடங்கும் பிள்ளைகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டோர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையும் அதே வேளை, மிகவும் வறிய நிலையிலுள்ள 20 சதவீதத்தினரில் அடங்கும் இதேயளவு எண்ணிக்கையிலான பிள்ளைகள் பரீட்சை எழுதாது விடுகின்றனர், அல்லது பரீட்சையில் சித்தியடையாது போகின்றனர். இதே போன்ற ஏற்றத்தாழ்வை க.பொ.த. உயர்தர சித்திவீதம் தொடர்பிலும் அவதானிக்க முடியும்.

சிசு மரணவீதம், தாய் மரணவீதம், பிறப்பின்போதான ஆயுட்கால எதிர்பார்க்கை போன்ற மரபுரீதியான குறிகாட்டிகளின் படி, நாட்டில் மக்களின் ஆரோக்கிய நிலை மேம்பட்டுள்ளது. உதாரணமாக, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத் தரவுகளின் (2008) படி, 1991ம் ஆண்டில் 17.7 சதவீதமாக இருந்த சிசு மரணவீதம் 2003ல் 11.3 வீதமாக கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது.[3] இலங்கையில், பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் முன்னேற்றமடைந்துள்ளதுடன், அது தற்போது பெண்கள் தொடர்பில் 77.2 வருடங்களாகவும் ஆண்கள் தொடர்பில் 68.8 வருடங்களாகவும் உள்ளது. 1980 தொடக்கம் 2002 வரையான காலப் பகுதியில் பிறப்பின்போதான ஆயுட்கால எதிர்பார்க்கை ஆண்கள் தொடர்பில் 1 வருடத்தாலும் பெண்கள் தொடர்பில் 5 வருடங்களாலும் அதிகரித்துள்ளது (Gunasekara, 2008).

ஆரோக்கியம் தொடர்பான சில அம்சங்களில் முன்னேற்றம் காணப்படு

கின்றபோதிலும், புதிதாகத் தோன்றுகின்ற மற்றும் ஏற்கனவே இருந்து வருகின்ற ஆரோக்கியப் பிரச்சினைகளை இந்நாடு எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தற்போதுள்ள ஆரோக்கிய பிரச்சினைகளிடையே 5 வயதிலும் குறைந்த பிள்ளைகள் மற்றும் தாய்மார்களிடையே அதிகளவில் காணப்படும் மந்தபோசணையானது கொள்கை வகுப்பாளர்களுக்கு பெரிதும் விசனமளிக்கும் ஒன்றாக உள்ளது.[4] ஒட்டுமொத்தமாக நாடளாவியரீதியில் பார்க்கின்றபோது, 2000 - 2006ற்கு இடையில் சிறுவர் போஷாக்கு (அதாவது வயதுக்கான உயரம், வயதுக்கான நிறை, உயரத்துக்கான நிறை என்பவை) சிறிய அளவிலாயினும் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை அருண திலக்க மற்றும் ஜயவர்த்தன (2011) ஆகியோரின் ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், ஆரோக்கியம் தொடர்பான ஏனைய குறிகாட்டிகள் இதுபோன்று முன்னேற்றகரமானதாக இல்லை. உதாரணமாக, பிறப்பின்போது இருக்கவேண்டிய குறைந்தபட்ச நிறையுடன் கூடிய புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் மிக சொற்பளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பான இப்போக்குக்கு முரணான வகையில், தாய்மாரின் ஆரோக்கியம் காலப்போக்கில் சற்று முன்னேற்றம் கண்டுள்ளது.

## 3.0 ஆய்வுமுறை

### 3.1 நியாயத்தன்மையின் வரைவிலக்கணமும் பகுப்பாய்வுக்கான குறிகாட்டிகளும்

சுகாதாரம் மற்றும் கல்வியின் அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மையையும், காலப்போக்கில் அவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் இக்கட்டுரை மதிப்பீடு செய்கின்றது. குடும்பங்களின் சமூக-பொருளாதார அந்தஸ்து எதுவாக இருப்பினும், அவற்றிற்கு சமமான வாய்ப்புகளை வழங்குதலே நியாயத்தன்மையாகும் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. 'வாய்ப்புகளின் மட்டத்தை' பல்வகைப்பட்ட குறிகாட்டிகளாலும், சமூக-பொருளாதார அந்தஸ்தை பல்வேறுபட்ட பரிமாணங்களாலும் அளவிட முடியும் என்பதனால், இந்த வரைவிலக்கணம் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளது. இந்த ஆய்வானது குறிப்பாக பொதுவான சேவைகள், சுகாதாரம் மற்றும் கல்வியின் அனுகூலங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத் தன்மையை கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது.

இந்த பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள குறிகாட்டிகள் பின்வருமாறு: கல்வியைப் பொறுத்தமட்டில், கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் (கல்வியின் வெவ்வேறு சுற்றுவட்டங்களிலான தேறிய பாடசாலைச் சேர்வுவீதத்தால்[5] அளவிடப்படுகின்றது) மற்றும் கல்வியின் பண்புத்தரம் (பாடசாலைக் கல்வி பூர்த்தியால் அளவிடப்படுகின்றது) என்பவை கவனத்திற் கொள்ளப்படுகின்றன.[6] சுகாதாரப் பராமரிப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் (மருத்துவ நிறுவனமொன்றில் நிகழும் பிரசவம், சுகாதாரத்துறை ஆளணியினரின் உதவியுடன் நிகழும் பிரசவம், கர்ப்ப காலத்தில் ஏற்பு ஊசிபோடுதல்); தாய்மாரின் ஆரோக்கிய நிலை (தாய்மாரின் உடல் திணிவுச் சுட்டி); சிறுவர்களின் ஆரோக்கிய நிலை; மற்றும் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் மானுட இயல்புசார்ந்த அளவீடுகள் (அதாவது வயதுக்கான உயரம், வயதுக்கான நிறை, உயரத்திற்கான நிறை, பிறப்பின்போதான நிறை) என்பவற்றை சுகாதாரம் தொடர்பில் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் உள்ளடக்குகின்றன.

### 3.2 சுகாதாரம் மற்றும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மை பற்றிய பகுப்பாய்வும் காலப்போக்கில் நிகழ்ந்த மாற்றங்களும்

Ali and Son (2007) ஆகியோரின் ஆய்வைப் பின்பற்றி, சுகாதாரம் மற்றும் கல்வி வாய்ப்புகளை மக்கள் பெறுவதற்கான வழிவகைகள் தொடர்பிலான நியாயத்தன்மையின் தாக்க விளைவுகளை மதிப்பிடுவதற்காக, தரவுகள் கிடைக்கக்கூடியதாகவுள்ள வருடங்களுக்கான (அதாவது, 1996/97, 2003/04, 2006/07 ஆண்டுகள்) சந்தர்ப்ப வளையிகள் இந்த ஆய்வில் வரையப்பட்டுள்ளன. $x_i$ தொகையான வருமானம் பெறும், i எனக் கொள்ளப்படும் ஒவ்வொரு ஆளையும் உள்ளடக்கிய n ஆட்களைக் கொண்ட சனத்தொகையின் சந்தர்ப்ப வளையி பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. $x_i$ வருமானம் பெறும் iவது ஆளால் அனுபவிக்கப்படும் சராசரி சந்தர்ப்பத்தை $y_i$ எனக் கொள்க. இங்கு ஓர் ஆளுக்கு வாய்ப்பு இருக்குமாயின் $y_i$ யின் பெறுமானம் 100 ஆகும். வாய்ப்பு இல்லையாயின் $y_i$ யின் பெறுமானம் 0 ஆகும். ஆகவே, சனத்தொகைக்கான சராசரி வாய்ப்பு பின்வருமாறு அமையும்:

சமன்பாடு 1 - (eq1) $\overline{y} = \frac{1}{n}\sum_{i=1}^{n} yi$

$\overline{y_p}$ என்பது, சனத்தொகையின் அடிமட்டத்திலுள்ள p சதவீதமானோரால் அனுபவிக்கப்படும் சராசரி சந்தர்ப்பம் எனக் கொள்க. இங்கே p யின் பெறுமானமானது 0 இலிருந்து 100 வரை மாறுபடுகின்றது. எனவே p = 100 ஆக உள்ளபோது, $\overline{y_p}$ யின் பெறுமதி $\overline{y}$ இற்குச் சமமாக இருக்கும். p யுடன் $\overline{y_p}$ எவ்வாறு மாறுகின்றது என்பதை காட்டும் வளையியானது சந்தர்ப்ப வளையி என அழைக்கப்படுகின்றது. இங்கே, உயரமான வளையிகள் அதிகளவான சந்தர்ப்பத்தைக் காட்டுகின்றன. காலம் கடந்து செல்கையில் நிகழ்கின்ற வளையியின் மேல்நோக்கி நகர்வானது சந்தர்ப்பத்திலான அதிகரிப்பைக் காட்டுகின்றது. ஆயினும், இச்செயல்முறையில் உள்ளடக்கப்படுவோரின் அளவானது, வளையியின் பெயர்ச்சியின் அளவிலும், வளையியின் இப்பெயர்ச்சியானது வருமானப் பகிர்வில் எந்த இடத்தியில் நிகழ்கின்றது என்பதிலும் தங்கியுள்ளது.

இம்மாற்றத்தின் பருமனை துல்லியமாக ஓர் எண்ணால் குறிப்பிடும் பொருட்டு, மீண்டும் Ali and Son (2007) ஐப் பின்பற்றி, நாமும் சந்தர்ப்பச் சுட்டியையும் (OI) சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டியையும் (EOI) கணிப்போம். இங்கு OI என்பது சந்தர்ப்ப வளையிக்குக் கீழ் உள்ள பகுதியின் பரப்பளவாகும். EOI என்பது OI இற்கும் $\overline{y}$ இற்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.[7]

அதாவது: (eq2) $EOI = OI/\overline{y}$

சந்தர்ப்ப வளையி உயரும்போது, அல்லது (OI ஆல் தரப்படும்) வளையி

யின் கீழ் உள்ள பரப்பளவு அதிகரிக்கும் போது, சகலரையும் உள்ளடக்கும் வகையிலான பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கின்றது. இரண்டாவது சமன் பாட்டை மாற்றுவடிவில் குறிப்பிடு வோமாயின்:

$$OI = \bar{y} * EOI,$$

மக்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களின் சராசரி மட்டத்தை (அதாவது $\bar{y}$ ஆல் தரப்படுவதை) அதிகரிப்பதனால் அல்லது சந்தர்ப்பத்துக்கான நியாயத்தன்மைச் சுட்டியை அதிகரிப்பதனால் அல்லது இரண்டையும் அதிகரிப்பதனால் OI அதிகரிக்க முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

கல்வித்துறைப் பகுப்பாய்வுக்கான தரவுகள் பிரதானமாக, 1996/97 மற்றும் 2003/04ம் ஆண்டுகளில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதார பொது மதிப்பாய்வு, 2006/07ல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு என்பவற்றிலிருந்து பெறப்பட்டன. இரண்டு மூலங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டமையால், கால அடிப்படையில் முடிவுகளை ஒப்பிட்டு ஆராய முடியவில்லை. ஆயினும், மிகவும் பிந்திய நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதார பொது மதிப்பாய்வுக்கான தரவுகள் 2003/04ம் ஆண்டு காலப்பகுதிக்கு உரியதாக இருப்பதனாலும், குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வின் முன்னைய விளக்கங்கள் கல்வி தொடர்பில் விபரமான தகவல்களை கொண்டிராததாலும், இவ்விரு மூலங்களிலும் இருந்தும் பெற்ற தகவல்களை பகுப்பாய்விற்காகப் பயன்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சுகாதாரத்துறை பகுப்பாய்வுக்கான தகவல்கள், 2000 மற்றும் 2006/07ம் ஆண்டுகளில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சனத்தொகை மற்றும் சுகாதாரம் பற்றிய பொது மதிப்பாய்விலிருந்து பெறப்பட்டுள்ளது.

## 4.0 ஆய்வு முடிவுகள்

### 4.1 கல்வித்துறை தொடர்பான ஆய்வு முடிவுகள்

1996/97 தொடக்கம் 2003/04 வரையான காலப்பகுதியில் கல்வி வாய்ப்புகளுக்கான சராசரிச் சந்தர்ப்பமானது, ஆரம்ப கல்விச் சுற்றுவட்டத்தைத் தவிர, கருத்திலெடுக்கப்பட்ட ஏனைய அனைத்துக் கல்விச் சுற்றுவட்டங்கள் தொடர்பிலும் முன்னேற்றம் கண்டுள்ளது (உரு 1a, 1b, 1c, 1d என்பவற்றைப் பாருங்கள்).[8] மேலும், சந்தர்ப்ப வளையிகள் காட்டுவது போல, வெவ்வேறு வருமான மட்டங்களைப் பெறுவோர் மத்தியில் இம்முன்னேற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. ஆயினும், இவ் வாய்ப்புகள் நியாயமானதாக அமையவில்லை. இந்தச் சந்தர்ப்ப வளையியின் சாய்வு மேல் நோக்கியதாக உள்ளமையானது, சகல மட்டத்திலும் குறைந்த வருமானத் தொகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு குறைந்தளவான கல்வி வாய்ப்புகளே இருப்பதைக் காட்டுகின்றது. கல்லூரிமட்ட கல்வி சுற்றுவட்டத்திற்கான சந்தர்ப்ப வளையியின் மேல்நோக்கிய செங்குத்துச் சாய்வானது, இந்த மட்டத்தில் நியாயம் இன்மை கூடியளவில் இருப்பதைக் காட்டுகின்றன.

மேற்படி முடிவுகள் சந்தர்ப்பத்தின் நியாயத்தன்மை சுட்டிகள் தொடர்பான பகுப்பாய்வினால் உறுதி செய்யப்பட்டுள்ளன (முடிவுகள் காட்டப்படவில்லை). 2006/2007ம் ஆண்டில் சகல பாடசாலை சுற்றுவட்டங்களிலும் பாடசாலைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பான ஒட்டுமொத்தச் சந்தர்ப்பத்தின் நியாயத்தன்மைச் சுட்டியானது ஒன்றிலும் குறைவாக உள்ளது. இது, நியாயத்தன்மையானது சகல மட்டங்களிலும் முன்னேற இடமுண்டு என்பதை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. இருப்பினும், சாதகமான அச்சம் யாதெனில், 1996/97 இலிருந்து 2003/04 வரையான காலத்தில் சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டியானது (EOI) முன்னேற்றம் கண்டுள்ளது என்பதாகும். இக்காலப் பகுதியில் வளர்ச்சியானது நியாயத்தன்மையுடன் இருந்ததை இது காட்டுகின்றது. சிரேஷ்ட இடைநிலை மட்டத்தைப் பொறுத்தவரை நியாயத்தன்மையில் மிகக் கூடுதலான முன்னேற்றம் காணப்பட்டது. இதற்கு அடுத்ததாக கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.


அட்டவணை 1ல் காட்டப்பட்டுள்ளவாறு, பாடசாலைக் கல்விப் பூர்த்தி வீதங்கள் சகல பாடசாலை சுற்றுவட்டங்களிலும் நியாயத்தன்மையுடையவையாக இல்லை. பாடசாலை சுற்றுவட்டங்கள் உயர்மட்டத்துக்கு செல்லும்போது, பாடசாலைக் கல்விப் பூர்த்தியின் நியாயத்தன்மை குறைந்து செல்கின்றது. இது குறிப்பாக சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் குறைவாக உள்ளது. 2006/07ல் சகல பாடசாலை சுற்றுவட்டத்திலும் பாடசாலைக் கல்விபூர்த்தியில் சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி ஒன்றிலும் குறைவாக உள்ளது. பாடசாலைக் கல்விபூர்த்தி தொடர்பிலான நியாயத்தன்மை மேல்மட்ட பாடசாலை சுற்றுக்களில் குறைவாக உள்ளது. பாடசாலைக் கல்விப்பூர்த்திக்கான சந்தர்ப்பச்சுட்டி 100இலும் குறைவாக இருப்பதையும், இச்சுட்டியானது மேல்மட்ட பாடசாலைச் சுற்றுவட்டங்களில் குறைந்து செல்வதையும் தெளிவாகக் காண முடிகிறது. பாடசாலை கல்விப்பூர்த்தியின் சந்தர்ப்பச் சுட்டி ஆரம்பக் கல்வி சுற்றுவட்டத்தில் 70.49 ஆகவுள்ளது. இது சிரேஷ்ட இடைநிலை சுற்றுவட்டத்தில் 21.63 ஆக வீழ்ச்சியடைகின்றது. கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகளில் காணப்படும் அதிகரிப்பானது நியாயத்தன்மையுடையதாக இருந்துவந்துள்ள போதும், பாடசாலை கல்வியைப் பூர்த்திசெய்யும் சந்தர்ப்பம் குறைவாக இருப்பதை, குறிப்பாக மேல்மட்ட பாடசாலை சுற்றுவட்டங்களில் குறைவாக இருப்பதை, இப்புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.[9]

### 4.2 சுகாதாரத்துறை தொடர்பான ஆய்வு முடிவுகள்


இந்த நாட்டில் தேசிய மட்டத்தில் மருத்துவ நிறுவனங்கள் மற்றும் மருத்துவ ஆளணியினரைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உயர்வாக உள்ளதுடன், காலப்போக்கில் அவற்றிற்கான சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. இதற்கு முன்னதாக கவனத்திற் கொள்ளப்பட்ட இரு குறிகாட்டிகளை விட குறைவாக இருந்தாலும்கூட, கர்ப்ப காலத்தில் ஏற்பு ஊசியைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

தவிரவும், இந்த ஊசியை பெறுவதற்கான சந்தர்ப்பம் காலப்போக்கில் சொற்பளவு வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இருப்பினும், கவனத்திற் கொள்ளப்பட்ட சகல குறிகாட்டிகள் தொடர்பிலும் சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளில் நியாயத்தன்மை காணப்படவில்லையாயினும், இவை காலப்போக்கில் முன்னேற்றம் கண்டுள்ளன. ஆனால் இதற்கு மாறாக, காலப்போக்கில் ஏற்பு ஊசி பெறுவதற்கான வாய்ப்புகளிலான நியாயத்தன்மை தேசிய மட்டத்தில் குறைந்துள்ளது.


முன்னர் விபரிக்கப்பட்டவாறு, சிறுவர் மற்றும் தாய்மார் போசாக்கு நிலையானது பல்வேறு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டது. ஐந்து வயதிலும் குறைந்த பிள்ளைகள், புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் தாய்மாரிடையே போசாக்கு மட்டங்களை உயர்த்துவதற்கு நிறையவே நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்பதை இந்த முடிவுகள் காட்டுகின்றன. மேலும், இந்த நாட்டில் சுகாதார அனுகூலங்களை அனுபவிப்பதற்கான சராசரி சந்தர்ப்பங்கள் கால ஓட்டத்தில் அதிகம் முன்னேற்றம் காணவில்லை (உரு 2a, 2b, 2c, 2d, 2e என்பவற்றைப் பார்க்கவும்). குழந்தைகளின் பிறப்பின் போதான நிறையில் ஏற்பட்ட சொற்ப வீழ்ச்சி நீங்கலாக, போசாக்குக்கான வாய்ப்புகளிலான நியாயத்தன்மை தேசிய மட்டத்தில் சொற்பளவு அதிகரித்துள்ளது. இந்த முன்னேற்றங்கள் தாய்மார் போசாக்கு தொடர்பில் குறிப்பிடத்தக்களவு பெரிதாக இருந்தன. அத்துடன், இந்த முன்னேற்றங்களை சகல வருமான மட்டத்திலும் காண முடிகின்றது (உரு 2aயைப் பார்க்கவும்). இந்த நாட்டில், போசாக்கிற்கான வாய்ப்பிலான நியாயத்தன்மை கணிசமானளவு உயர்வாக உள்ளது (சந்தர்ப்ப வளையிகள் ஒன்றில் தட்டையாக அல்லது மிகச் சிறிதளவில் மேல் நோக்கிய சாய்வை உடையனவாக உள்ளன). சந்தர்ப்பத்துக்கான நியாயத்தன்மை சுட்டிகளின் கணிப்புகளும் (இங்கு காட்டப்படவில்லை) உயர்மட்ட நியாயத்தன்மை காட்டும் வகையில் ஒன்றுக்கு மிகவும் கிட்டியவையாக உள்ளன.





**உரு 1a ஆரம்பக் கல்வி வாய்ப்புகள் தொடர்பிலான சந்தர்ப்ப வளையிகள்**




**உரு 1b கனிஷ்ட இடைநிலைக் கல்வி வாய்ப்புகள் தொடர்பிலான சந்தர்ப்ப வளையிகள்**




**உரு 1c சிரேஷ்ட இடைநிலைக் கல்வி வாய்ப்புகள் தொடர்பிலான சந்தர்ப்ப வளையிகள்**




**உரு 1d கல்லூரி மட்டக் கல்வி வாய்ப்புகள் தொடர்பிலான சந்தர்ப்ப வளையிகள்**

*மூலம் : 1996/97 மற்றும் 2003/04ம் ஆண்டுகளுக்கான நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதாரப் பொது மதிப்பாய்வு, 2003/04ம் ஆண்டுக்கான குடும்ப வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய பொது மதிப்பாய்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கணிப்பு*

## 5.0 முடிவுரையும் கருத்தாடலும்

கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் கணிசமான அளவில் உயர்வாக இருக்கும் அதேவேளை, சகல மட்ட கல்வியிலும் நியாயத்தன்மை காணப்படவில்லை என்பதை இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. இருப்பினும், கால ஓட்டத்தில் நியாயத்தன்மையில், குறிப்பாக சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட மட்டங்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சகல பாடசாலைச் சுற்றுவட்டங்களிலும் அவற்றைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பில் நியாயத்தன்மை காணப்படவில்லை. மேலும் மேல் மட்டத்திலான பாடசாலை சுற்றுவட்டத்தில்

அட்டவணை 1 கல்விச் சுற்றுவட்டத்தின் அடிப்படையில் பாடசாலைக் கல்விப் பூர்த்திக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பிலான நியாயத்தன்மைச் சுட்டிகள் 2006/07

| | | |
|---|---|---|
| ஆரம்பப் பிரிவு (தரம் 5) | கல்விப் பூர்த்தி வீதம் | 81.4 |
| | சந்தர்ப்பச் சுட்டி (%) | 78.46 |
| | சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி | 0.959 |
| கனிஷ்ட இடைநிலை (தரம் 9) | கல்விப் பூர்த்தி வீதம் | 70.5 |
| | சந்தர்ப்பச் சுட்டி (%) | 66.16 |
| | சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி | 0.933 |
| சிரேஸ்ட இடைநிலை (தரம் 11) | கல்விப் பூர்த்தி வீதம் | 39.1 |
| | சந்தர்ப்பச் சுட்டி (%) | 29.47 |
| | சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி | 0.741 |

குறிப்பு : கல்விப் பூர்த்தி வீதமானது பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்கின்ற வயதுப் பிரிவில் உள்ள சிறுவர்களின் சதவீதமாகக் கருதப்படுகின்றது. தரவுகள் கிடைக்காமையால், இக்கணிப்பீட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை. 1996/97 மற்றும் 2003/04 காலப்பகுதிகளுக்கான நுகர்வோர் நிதி பற்றிய பொது மதிப்பாய்வுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கல்விப் பூர்த்தியைத் துல்லியமாகக் கணிக்க முடியாதுள்ளது.

*மூலம் : குடும்ப வருமானம் மற்றும் செலவினம் பற்றிய பொது மதிப்பாய்வுத் (2006/07) தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது*

அவற்றை எட்டுவதற்கான வாய்ப்புகளிலான நியாயத்தன்மை குறைவாகவே உள்ளது. பாடசாலைக் கல்வியை பூர்த்தியாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அதனைப் பெறுக்கொள்வதற்கான வாய்ப்பு என்பவற்றில் நியாயத்தன்மைக்கான முன்னேற்றம் காண இன்னும் இடம் உள்ளது.

பிள்ளைகள் பாடசாலை செல்லாமைக்கு ஆரோக்கியம் தொடர்பான பிரச்சினைகளே பிரதான காரணமாகும் என்பதை சமத்துவமின்மைக்கான காரணங்களை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும், சமுதாய அந்தஸ்தும் பாடசாலைக்குச் செல்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் இம்முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இதுதவிர சிறுபான்மை இனக்குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகளிடையே பாடசாலைக்குச் செல்வது குறைவாகவே உள்ளது. உரிய வயதில் பாடசாலையில் சேராமையே தேசிய மட்டத்தில் காணப்படும் குறைந்தளவான பாடசாலைப் பங்குபற்றலுக்குக் காரணமாக அமைகின்றது. வலுக் குறைந்த பிள்ளைகளுக்கு பாடசாலையில் இணைவதற்கான வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவதற்கான கொள்கைகள், மிகப் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதற்கான சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்கள், உரிய வயதில் பாடசாலையில் சேர்வதை ஊக்குவிக்கும் கொள்கைகள் என்பவற்றை அமுலாக்குவதனால் பாடசாலை பங்குபற்றல் விளைவை அதிகரிக்க முடியும்.


தகுதிவாய்ந்த மருத்துவ ஆளணி மற்றும் பிரசவத்துக்கான சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் இந்த நாட்டில் கூடுதலாக உள்ளன. ஏற்பு ஊசி பெறுவதற்கான வாய்ப்புகளும் கூடுதலாக உள்ளன. ஏற்பு ஊசி பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உயர்வாக உள்ளபோதும், அது முன்னர் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளையும் விட குறைவாகவே உள்ளது. ஆனால் இந்த வாய்ப்புகளில் நியாயத்தன்மை காணப்படவில்லை. சுகாதார நிறுவனங்கள் மற்றும் சுகாதார ஆளணி என்பவற்றின் சேவைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மை அதிகரித்துள்ளபோதும், ஏற்பு ஊசி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பிலான நியாயத்தன்மை குறைவடைந்துள்ளது. இந்த வாய்ப்புக்கான நியாயத்தன்மை, குறிப்பாக கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் வீழ்ச்சி கண்டுள்ளது. தொலைதூரக் கிராமங்களிலுள்ள மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிப்பதில் பிரச்சினைகள் இருப்பதை அண்மைக்கால நிகழ்வுச் சான்றுகள் நிரூபிக்கின்றன. நிர்வாக முறைமையிலுள்ள குறைபாடுகளே இப்படியான தாழ்நிலைக்கு காரணமாக இருக்கலாம். வறுமையும் குறைந்த கல்வி மட்டமுமே மருத்துவ ஆளணியினதும் நிறுவனங்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளைப் பாதிக்கின்றன என்பதை பிற்செல்கைப் பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

சிறுவர்கள் மற்றும் தாய்மாரில் ஐந்திலொரு பகுதியினருக்கு போதிய எவு போசாக்கு கிடைப்பதில்லை என்பதை பல்வகைப்பட்ட குறிகாட்டிகளைக் கொண்டு அளவிடப்பட்ட முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. காலப் போக்கில், இக்குறிகாட்டிகள் பொதுப் படையாக அதிகரித்துள்ள போதும், இந்த முன்னேற்றம் சொற்ப அளவினதாகவே உள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்கையில், நாட்டில் போதிய போசாக்கிற்கான வாய்ப்பிலான நியாயத்தன்மையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிறுவர்களினதும் தாய்மார்களினதும் போசாக்கு நிலைமையை முன்னேற்றுவதற்காக இன்னும் நிறையவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதை இந்த முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. குறைந்தமட்ட போசாக்குக்கு வறுமை பிரதான காரணமாக உள்ளபோதும், விழிப்பூட்டல் மூலம் பிள்ளைகளின் போசாக்கு நிலையை உயர்த்த முடியுமெனவும் இப்பிற்செல்கை ஆய்வு முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.


அட்டவணை 2 சுகாதாரப்பராமரிப்பு வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பிலான நியாயத்தன்மைச் சுட்டிகள்

| | 2000 | | | 2006 | | |
|---|---|---|---|---|---|---|
| | இடை | சந்தர்ப்பச் சுட்டி (%) | சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி | இடை | சந்தர்ப்பச் சுட்டி (%) | சந்தர்ப்பத்திற்கான நியாயத்தன்மைச் சுட்டி |
| சுகாதாரத்துறை ஆளணியினரின் உதவியுடன் நிகழும் பிரசவம் | 96.6 | 94.6 | 0.980 | 99.7 | 98.8 | 0.995 |
| அரசாங்க அல்லது தனியார் வைத்தியசாலைகளில் நிகழும் பிரசவம் | 97.9 | 95.6 | 0.978 | 99.0 | 97.9 | 0.993 |
| கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்பு ஊசி பெற்றோர் | 95.8 | 94.8 | 0.991 | 95.3 | 94.0 | 0.987 |


*மூலம் : அருணாதிலக மற்றும் ஜெயவர்த்தன (2011)*





உரு 2a தாய்மாரின் உடல் திணிவுச் சுட்டி> 18.5





உரு 2b குறைந்தபட்ச பிறப்பு-நிறையுடன் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள்




உரு 2c வயதிற்கான குறைந்தபட்ச உயரத்தைக் கொண்ட 5வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள்




உரு 2d வயதிற்கான குறைந்தபட்ச நிறையைக் கொண்ட 5வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள்




உரு 2e உயரத்திற்கான குறைந்தபட்ச நிறையைக் கொண்ட 5வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள்

*மூலம் : 2000 மற்றும் 2006ம் ஆண்டுகளுக்கான சனத்தொகை மற்றும் சுகாதாரம் பற்றிய பொது மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட கணிப்பு*

**துணைநூற் பட்டியல்:**


Ali, I. and Son, H.H. (2007), "Measuring Inclusive Growth". *Asian Development Review* 24 (1), 11-31.

Arunatilake, N. And P. Jayawardena, (2011), "Equity in Education and Health Services in Sri Lanka" in Hyun Son (Ed.) "Equity and Well-Being: Measurement and Policy Practice", New York: Routledge.

Gunesekara, H. R., 2008, Life tables for Sri Lanka and districts 2000-2002, Colombo: Department of Census and Statistics.

IPS/UNDP, 2010, Millennium Development Goals Country Report – 2008/09, Colombo: IPS.

Jayawardena, Priyanka, 2010, "Socio-economic determinants and inequalities in maternal and childhood malnutrition" Masters Thesis, University of Colombo.

MOE (2008), School Census – 2008, Ministry of Education, Battaramulla, Sri Lanka.

NEC (2003), Proposals for a National Policy Framework on General Education in Sri Lanka, National Education Commission, Colombo, Sri Lanka.

UNESCO (2010), http://www.uis.unesco.org/ev.php?ID=2867_201 &ID2=DO_TOPIC, accessed 4th October, 2010.

World Bank (2005), *Treasures of the Education system in Sri Lanka: Resorting Performance, Expanding Opportunities and Enhancing Prospects*, World Bank, Sri Lanka.


**அடிக்குறிப்புகள்:**

[1] IPS/UNDP, 2010, Millennium Development Goals Country Report – 2008/09.

[2] It is not possible to examine time trends in these indicators as earlier household survey data does not contain necessary information for accurate calculations.

[3] Source: Gunesekara, H. R., 2008, Life Tables for Sri Lanka and districts 2000-2002, Department of Census and Statistics.

[4] Arunatilake and Jayawardena, 2011.

[5] Net enrolment rate is defined as the percentage of children of the official age group, in school for a given level of education (UNESCO, 2010). The official age groups for primary, and junior secondary are 5 to 10, and 11 to 14, respectively.

[6] Following MOE (2008), school completion is defined to be the proportion of children in the corresponding age group completing the relevant school cycle by official age. For example, officially children who complete 10 years by end of January in a particular year should have completed their primary education by the end of previous year.

[7] When everyone in the population enjoys the same opportunity OI is equal to. y Then the ratio between OI for a particular opportunity curve and y provides an estimation of how opportunities are distributed across the population.

[8] As stated earlier, the estimates for 2006/07 are not comparable with those for 1996/97 and 2003/04, as the data comes from a different. For this reason, the comparisons over time will only be done for CFS 1996/97 and CFS 2003/04 data sets.

[9] Although an attempt was made to calculate various equity indices at the provincial level for school completion, the results are not reliable as the sample sizes at the provincial level are very small. ■

# பொருளாதார அபிவிருத்திக்கான பௌத்த அணுகுமுறை

**பேராசிரியர் அசங்க திலகரத்தின**
பாளி மற்றும் பௌத்த கற்கைகளுக்கான நிறுவனம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

தனிமனிதனதும் சமூகங்களினதும் தேசங்களினதும் பிரதான நோக்கம் பொருளாதார அபிவிருத்தியாகும். மனித வாழ்வில் ஏனையவை எல்லாம் இரண்டாம் பட்சமாகிவிடுமளவுக்கு இது மிக முக்கியமான ஒன்றாகிவிட்டது. வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் எவரும் வாழமுடியாது என்பதிலிருந்தே, அனைவருக்கும் தேவையான இப்பொருளாதார அபிவிருத்தி யின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். தேசங்களால் பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியாதுள்ளதன் விளைவாக எழும் அடிப்படைக் குறைபாட்டிலிருந்தே பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. மந்த போஷனை, பட்டினி, நோய்கள், கடும் குற்றச்செயல்கள், குறைந்த கல்வியறிவு என்பன அபிவிருத்தியடைந்தவரும் நாடுகளில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளின் மாதிரிவகையாக உள்ளன. பொருளாதார அபிவிருத்தி அடையப்பட்ட இடங்களில், வேறு காரணங்கள், நிலைமைகள் மற்றும் இப்பொருளாதார அபிவிருத்தியாலேயே தோற்றுவிக்கப்பட்ட செல்வச் செழிப்பு நிலை என்பனவற்றின் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினைகள் வெவ்வேறு அளவுகளில் காணப்படுகின்றன. மிகை நுகர்வு, இயற்கையையும் இயற்கை வளங்களையும் தனது ஆதாயத்திற்காக நேர்மையற்ற முறையில் பயன்படுத்துதல், ஏழைகளுக்கு எதிரான பாகுபாடு என்பன அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணக்கூடியதாக உள்ள பிரச்சினைகளில் சிலவாகும். நாம் வாழும் இவ்வுலகின் நிலையை மாற்றியமைப்பதில் பங்களிப்பு செய்யக் கூடியனவாக உள்ள எமது உளப்பாங்கு, கருத்துகள் மற்றும் மனவெழுச்சி என்பவற்றைத் தீர்மானிப்பதில், எமது பொருளாதார அபிவிருத்தியின் அளவு மிக முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளதாகத் தோன்றுகின்றது.

தனிமனிதனதும் பொதுமக்களினதும் நலன்களைப் பாதுகாக்கும், ஒரு நல்ல வாழ்வை மக்கள் அநுபவிக்கும் வகையிலான சமூகம் ஒன்றை மலரச் செய்வதற்குப் பொருத்தமான பௌத்த போதனைகளும் நடைமுறைகளும் பற்றி இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன. புத்த பெருமானின் போதனைகள் சாதாரண மனிதனின் நலனில் அக்கறை கொள்வதில்லை எனவும், மனித அபிவிருத்திக்கு உதவக்கூடிய எதுவும் அதில் இல்லை எனவும் பரவலாகக் காணப்படும் அபிப்பிராயம் பிழையானது என்பதை இக்கருத்தாடல் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது.

**அபிவிருத்தியும் பௌத்த சமூகமும்**

பௌத்த சமூகமானது பிக்குகள், பிக்குணிகள் மற்றும் பௌத்தத்தைப் பின்பற்றும் ஆண், பெண் குடும்பஸ்தர்கள் (உபசக்க, உபசிக்க) என நான்கு பிரிவினரை உள்ளடக்கியுள்ளது. அனைவருமே மனித இருப்பானது துக்கம் தோய்ந்தது எனும் அவரது அடிப்படையான புரிதலிலும், நிர்வாண நிலையை அடைவதன் மூலம் இந்த ஒவ்வாத நிலைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர்கள் கடினமாக உழைக்க வேண்டும் என்பதிலும் நம்பிக்கை வைத்து புத்த பெருமானைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும், துறவு பூண்ட குழுவினருக்கும் குடும்பஸ்தர்களுக்கும் இடையே மிகவும் முக்கியமான ஒரு வேறுபாடு உண்டு. துறவுக் குழுவினர் தமது நோக்கத்தை அடைய நேரடிப் பாதையில் செல்லும் அதே வேளை, குடும்பஸ்தர்கள் இதே நோக்கத்தை அடைவதற்காக நீண்ட சுற்று வழிப் பாதையில் செல்கின்றனர். இந்த அடிப்படை வித்தியாசம் இரு குழுவினரையும் வெவ்வேறு வகையான வாழ்க்கை முறையை கைக்கொள்ள வைத்துள்ளது. பிக்குகளும் பிக்குணிகளும் செல்வம், குடும்பம், இல்லற வாழ்வின் சமூக உறவுகளின் சிக்கலான வலையமைப்பு ஆகியவற்றைத் துறந்தவர்களாக உள்ளனர். அதேவேளை, இல்லற வாழ்வில் ஈடுபடுவோர் துறவிகள் விலக்கி வைத்தவற்றை ஏற்று வாழ்க்கை நடத்துவர்.

புத்த பெருமானின் கருத்தின்படி, செல்வம், சொத்து என்பவற்றை இல்லறத்தோர் வைத்திருக்க வேண்டும். இந்த செல்வங்களைப் பயன்படுத்தி இல்லறத்தில் உள்ளோர் தாமும் சுகங்களை அநுபவித்துக் கொண்டு, தமது குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவினர், நண்பர்களையும், இறுதியாகத் தமக்கென வருமானம் உழைக்காத சமய வாழ்வில் ஈடுபடுபவர்களையும் கவனிக்க வேண்டும். புத்தரைப் பின்பற்றும் இல்லற வாழ்வில் ஈடுபட்டிருப்போர் பொருளாதாரரீதியில் மட்டும் தன்னிறைவைக் கொண்டிருந்தால் போதாது. பௌத்த சமூகத்தில் மக்களிடம் நற்பண்புகள் மற்றும் அறவொழுக்கத்தை வளர்த்தெடுக்கும் பாத்திரத்தை ஏற்றுள்ள, 'உற்பத்தியில் ஈடுபடாத' இத்துறவிகளை போஷிப்பதற்காக மிகை வருமானத்தையும் ஈட்ட வேண்டும் என்பதே இவர்களது இருப்பிற்கான நியாயமாகும். இந்த இரண்டு குழுக்களினதும் இருவேறு வாழ்க்கைமுறை பற்றி நாம் மனதைக் குழப்பாமல் வைத்திருப்பது முக்கியமானது. துறவறத்தில் உள்ளோருக்குக் கூறப்பட்டதை பௌத்த சமயத்தைப் பின்பற்றும் சகலரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் எனப் பிழையாகக் கருதப்படுவதினாலேயே, பௌத்தம் குடும்ப வாழ்வை மறுத்தவர்களுக்கு மட்டுமே உரியது எனும் கருத்தை சிலர் கொண்டுள்ளனர். பல நூற்றாண்டு காலமாக பௌத்த சமயத்தைப் பின்பற்றி வந்த மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கு வழிகாட்டி வந்த சமயமாக பௌத்தம் இருப்பதால், இப்பிரச்சினை பற்றி பெரிதாக யோசிக்க வேண்டிய தேவையில்லை. மக்கள் புத்த பெருமானின் போதனைகளால் வழி நடத்தப்பட்டு, சந்தோஷத்துடன் மன நிறைவான வாழ்க்கையை நடத்தியுள்ளனர். ஒருவர் நல்ல முறையில் வாழ்வது

எவ்வாறு என்பதையிட்டு விளக்கம் தந்துள்ள புத்த பெருமானின் போதனைகளை இன்றைய காலகட்டத்தில் மீள் சோதனைக்கு உட்படுத்துவது முக்கியமானதாகும்.

### நல்வாழ்வு எதிர் மகிழ்ச்சியான வாழ்வு

சமகால நன்னெறிக் கோட்பாட்டாளர்கள் பலர் நல்லவாழ்வின் இயல்பு பற்றி வாதித்து வருகின்றனர். பலர் கேளிக்கை என்பதற்கு அப்பால் எதுவுமில்லாத மகிழ்ச்சியான வாழ்க்கையுடன் நல்வாழ்வை சமப்படுத்துவதை ஒரு வழக்கமுறையாகக் கொண்டுள்ளனர். பொதுவான பேச்சுவழக்கில், சந்தோஷம் என்பது மனக்கிளர்ச்சியும் இன்பமும் நிறைந்த வாழ்வு என பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வகையான நோக்கில் எமது வாழ்வின் விருப்பத்துக்குரிய இறுதி நோக்கம் இன்பம் எனக் கொள்ளப்படுகின்றது. இதன் விளைவாக, அறநெறிகளைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு வாழ்க்கைமுறையை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறான வாழ்க்கை முறையானது தனியே பொருள்முதல் உலகுசார்ந்த அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு மாத்திரம் அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்கின்றது. புத்த பெருமான், இல்லற வாழ்வில் இருந்து கொண்டு தன் கருத்துகளைப் பின்பற்றுவோருக்கு வகுத்த வாழ்க்கை முறையானது எப்போதும் புற அபிவிருத்தி (பொருள்முதல் உலகு சார்ந்தவை) மற்றும் அக அபிவிருத்தி (அறநெறி சார்ந்தவை) என்பவற்றின் கூட்டாகவே இருந்தது. மக்களை, அவர்களின் வாழ்க்கை பற்றிய கருத்தின் அடிப்படையில், மூன்று குழுக்களாக வகைப்படுத்த முடியுமென புத்த பெருமான் ஒருமுறை கூறினார். ஒரு கண் உடையவர்கள், இரண்டு கண்களும் உள்ளவர்கள் என்போரே அக்குழுக்களாகும். அகம் சார்ந்த அபிவிருத்தியைப் போன்று, இந்த லௌகீக விடயங்களின் அபிவிருத்தியையும் மதிப்பிடுவதற்கு ஆற்றல் அற்றவர்களே பூரணமாகப் பார்வையற்றவர்களாவர் என அவர் விளக்கினார். ஒரு கண் உடையவர் பொருள்முதல் உலகு சார்ந்த அபிவிருத்திக்கான பார்வை மட்டும் உடையவர். இரண்டு கண்களும் உடையவர் அகம் மற்றும் புறம் ஆகிய இரண்டு வகை அபிவிருத்தியையும் நாடுபவராக இருப்பார். புத்த பெருமானின் வழியைப் பின்பற்றும் இலட்சிய இல்லறத்தவர் இவ்வுலக வாழ்வில் வெற்றி பெற்றவராகவும் கெடுதியேதும் இல்லா வகையில், தார்மீக நல்வழியில் செல்வத்தை ஈட்டிப் பஞ்ச சீலத்தை அநுட்டித்து அறநெறியில் நின்று வாழ்பவராகவும் இருப்பார்.

மனித உளவியல் பற்றிய பௌத்த புரிதலின்படி, சகல மனிதரும் சந்தோஷத்தை விரும்புகின்றனர் என்பதோடு சந்தோஷமின்மையை வெறுக்கின்றனர். சந்தோஷம் என்பது ஆகவும் கூடுதல் விருப்பமான வாழ்வின் இலட்சியம் என்பது மறுக்க முடியாதது. ஆனால், சாதாரணமான பொருள்முதல் உலகு சார்ந்த, லௌகீக சந்தோஷம் என்ற எண்ணக்கருவுக்கு அப்பால் செல்லும் பௌத்தமானது, மனித வாழ்வின் பொருள்முதல் உலகுசார்ந்த அம்சம், அகம்சார்ந்த அம்சம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய சந்தோஷத்தைப் பற்றி விளக்குகிறது. இல்லறத்தவர்கள் அநுபவிக்க வேண்டிய நான்கு வகைச் சந்தோஷங்கள் இருப்பதாக புத்த பெருமான் கூறுகிறார். பொருட்களை உடைமையாகக் கொண்டிருப்பதால் வரும் சந்தோஷம், நுகர்வால் வரும் சந்தோஷம், கடன் இல்லாதிருப்பதால் வரும் சந்தோஷம், மற்றும் பழிக்கப் படாதிருத்தலால் வரும் சந்தோஷம் என்பனவே அவையாகும். முதல் இரு வடிவங்களும் பொருட்களை வைத்திருப்பதன் அல்லது பொருள் சார்ந்த செல்வத்துக்கு உரியவராக இருப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றன. அதேவேளை இறுதியான நிர்வாணம் (மோட்சம்) எனும் அர்த்தத்தில் பார்க்கையில், பொருள்சார்ந்த செல்வம் ஆசையை அதிகரிக்கச்செய்து துன்பத்துக்கு காரணமாக அமைகின்றது. ஆனால் இங்கு எடுத்தாளப்பட்ட கருத்தால் செல்வத்தோடு அதிகம் தொடர்புபடும் இல்லறத்தவர் மீதே பிரதான கவனம் செலுத்தப்படுகிறது. சந்தோஷத்தின் இரண்டாவது வடிவமானது, ஒருவர் தனது செல்வத்தை தானும், தனது விரிந்த குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், சமயவாழ்வில் ஈடுபடுவோர் போன்ற ஏனையோரும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது நுகர்வதன் மூலம் கிடைக்கின்றது. இந்த வகை மகிழ்ச்சியானது ஒருவர் தனது செல்வத்தை அநுபவிக்காமலும் ஏனையோரிடம் பகிராமலும் பதுக்கி வைக்கக்கூடாது என்பதை எமக்குக் கூறுவதாக உள்ளது. மகிழ்ச்சியின் மூன்றாம் வகை நாம் கடன்படாது சுதந்திரமாக இருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. நான்காவதும், ஆகவும் கூடிய முக்கியத்துவம் உடையதுமான சந்தோஷம் யாதெனில், ஒருவர் செல்வத்தை ஈட்டிய முறையில் பழிக்கு ஆளாகாமல் இருப்பதால் வரும் இன்பமாகும். இந்த இடத்தில்தான் பௌத்தம், வாழ்வின் அறவிழுமியங்களில் அக்கறையின்றி இன்பம் நாடும் வகை அபிவிருத்தி மாதிரிகளிலிருந்து வேறுபடுகின்றது. ஒருவர் தனது தொழில் செயல்முறைகளை மீட்டுப்பார்த்து விசாரணைக்கு உட்படுத்தும்போது, தான் பெருமதிமிக்க நன்னெறி கோட்பாடுகளை மீறவில்லை என திருப்தியடையக் கூடியவராக இருக்க வேண்டும். வேறு வார்த்தையில் கூறுவதாயின், ஒருவரின் மனச்சாட்சி அவரின் ஒழுக்கக்கேடான தொழில் நடைமுறைகளைச் சுட்டிக்காட்டி பழிப்பதாக இருக்கக் கூடாது.

வாழ்வின் இந்த இரண்டு அம்சங்களுக்கிடையே சமநிலையே அபிவிருத்தி பற்றிய பௌத்த தத்துவத்தின் சிறப்பம்சமாகும். இதற்கான ஓர் அதிசிறந்த உதாரணத்தை ***சம்யுக்த நிக்கயாவின் வையக்கபஜ்ஜ சூத்திரத்தில்*** காணக்கூடியதாக உள்ளது. குடும்பத்துடன் இன்பங்களை அநுபவித்துக் கொண்டும் செல்வம் தேடும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டும் உள்ள தன்னைப் போன்ற இல்லறத்தவர்களுக்குப் பொருந்தும் வகையில் போதிக்க வேண்டுமென, டிஹாஜனு என்னும் ஓர் இளைஞன் புத்தரிடம் கேட்டபோதே, இப்போதனை நிகழ்ந்தது. இவ்வுலக வாழ்வின் நலனுக்கு சாதகமான நான்கு காரணிகளும், இறப்பின் பின்னரான வாழ்வின் சந்தோஷத்துக்கு (அக விருத்திக்கு) சாதகமான நான்கு காரணிகளும் உண்டென புத்த பெருமான் இவனுக்குக் கூறினார். இவ்வுலக வாழ்வின் நலன் தொடர்பான காரணிகளென செயல்முன்னெடுப்பிற்கான ஆற்றலையும் ஊக்கத்தையும் கொண்டிருத்தல், சம்பாதித்ததை பாதுகாத்தல், நல்ல நண்பர்கள் மற்றும் சமநிலைப்பட்ட வாழ்வு என்பவற்றைப் புத்தர் கூறினார். இந்த நான்கு காரணிகளில் முதல் இரு காரணிகளான செயல்முன்னெடுப்பிற்கான ஆற்றலும் ஊக்கமும் மற்றும் சம்பாதியத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு விளக்கம் தேவையில்லை. ஏனெனில் பொருள் முதல் உலகுசார்ந்த வெற்றியின் பின்னால் இருக்கும் அத்தியாவசியமான காரணிகள் இவைதான்.

இன்றைய நடைமுறையில் உள்ளது போல, கடைசி இரண்டு காரணிகளும் அபிவிருத்திக்கு உதவும் காரணிகளில் சாதாரணமாகக் காணப்படுவன அல்ல. நல்ல நண்பர்களைப் பெற்றிருத்தல், கூடாத கூட்டாளிகளை தவிர்த்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை புத்தர் அதிகளவில் வலியுறுத்தியுள்ளார். இதை அவர் பொருள்முதல் உலகுசார்ந்த அபிவிருத்தியில் மட்டுமன்றி அக விருத்தி தொடர்பிலும் அழுத்திக் கூறியுள்ளார். ஒருமுறை புத்தரின் உதவியாளரான ஆனந்த தேரர் அக விருத்தியின் அரைவாசி, நல்ல நண்பர்களால் அமைவது எனக் கருத்துரைத்த போது, புத்தர் அவர் கூறியதை திருத்தி, அக விருத்தி முழுவதுமே நல்ல நண்பர்களால் அமையும் என்றார். இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் புத்தர் பொருளாதார அபிவிருத்தியில் நல்ல நண்பர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இது தனிப்பட்ட மட்டம், சமூக மட்டம் எனும் இரு வெவ்வேறு மட்டங்களில் செயற்படுவதாக விளங்கிக் கொள்ளப்படலாம். ஒரு மனிதனுக்கு அவனது தொழிலை அபிவிருத்தி செய்ய நல்ல நண்பர்கள் தேவைப்படுவது போலவே, ஒரு நாட்டுக்கும் அதன் அபிவிருத்திக்கு நல்ல நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம்.

ஒருவரின் வருமானத்துக்கு ஏற்ப அவரின் செலவை ஒழுங்குபடுத்திக் கொண்டு, ஒரு சமநிலைப்பட்ட வாழ்க்கையை நடத்துதல் எனும் இறுதிக் காரணி ஒருபுறம் வெளிப்படையானது எனினும், மறுபுறத்தில் அது மறக்கப்பட்டுள்ள அல்லது அலட்சியப்படுத்தப் பட்டுள்ள ஒரு காரணியாக உள்ளது. தனி ஆட்களும் குடும்பங்களும் இந்த சம நிலையைப் பேண முடியாது போய் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றனர். இதுபோலவே இந்த எளிய உண்மையைக் கவனிக்காமல் விடுவதனால், சமூகங்களும் நாடுகளும் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிடுபவர்கள் அந்த நாட்டின் இயலாற்றல் பற்றிய யதார்த்தத்தை அறிந்தவர்களாகவும், அந்த நாட்டின் முன்னுரிமைத் தெரிவுகளை இனம்காணும் அளவிற்கு அறிவுபூர்வமானவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

புத்தரின் போதனை எமது இருப்புக்கு அவசியமான நான்கு விடயங்களை இனங்கண்டுள்ளது. உணவு, உடை, வாழ்விடம், மருந்து என்பனவே அவையாகும். மக்களின் இருப்புக்கு அவசியமான குறைந்தபட்சத் தேவைகளை இவை (நான்கும்) உள்ளடக்கியுள்ளன. ஒரு பௌத்த நோக்குநிலையில் பார்க்கின்றபோது, இந்த நான்கு அடிப்படைத் தேவைகளையும் தமது மக்களுக்கு வழங்க வேண்டிய கடப்பாடு எந்த வொரு ஆட்சியாளருக்கும் உண்டு என நாம் கூற முடியும். ஒரு சமூகத்தில் பெரும் பணக்காரர்கள் இருக்கக்கூடும். இதனால் அச்சமூகம் உயரளவிலான ஆள்வீத வருமானத்தைக் கொண்டிருக்கும். ஆனால், அச்சமூகத்தில் உள்ள சகல மக்களும் இந்த அடிப்படைத் தேவைகளை உண்மையில் பெற்றுக் கொள்கின்றனர் என்பது இதன் பொருளானது. பௌத்த தர்மத்தின்படி, விரும்பத்தகு அபிவிருத்தி என்பது, சிலர் மிகுந்த செல்வந்தராகவும் அதேசமயம் வேறு சிலர் மிகுந்த ஏழைகளாகவும் இருப்பதாக அன்றி, சகலரினதும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் ஒரு சமூகம் காணப்படுவதேயாகும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்போது மட்டுமே, ஒரு சமூகம் ஆடம்பரங்களையும் சொகுசான வாழ்க்கையையும் பற்றி யோசிக்க முடியும். நடைமுறையில் பார்த்தால், உதாரணமாக, ஒரு சிலருக்கு பயன்தரவல்ல விலையுயர்ந்த இயந்திரங்களில் செலவளிக்காமல் பரந்துபட்ட மக்களுக்கு பயன்தரவல்ல மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களில் கூடுதலாக செலவு செய்ய வேண்டும்.

டீஹாஜனுவுக்கும் புத்தருக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலில், புத்தர் அக விருத்திக்கு சாதகமான நான்கு காரணிகள் என பற்றுறுதி, அறநெறி, தயாளகுணம், விளங்கிக்கொள்ளல் என்பவற்றை எடுத்துக் கூறினார். தனது பொருளாதார அபிவிருத்திக்காக உழைத்துக் கொண்டு சமூக வாழ்வை வாழும் ஒவ்வொருவரும் இந்த நல்லொழுக்கங்களை கைக்கொள்ள வேண்டும் எனப் புத்தர் கூறுகின்றார். இந்த நல்லொழுக்கங்கள் எவ்வாறு ஒரு சமூகத்தில் பிரயோகிக்கப்படலாம் என்பதை அந்தச் சமூகத்தின் தலைவர்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டும். புத்தர் எப்போதும் வெற்றிகரமான அபிவிருத்தி என்பதை அக மற்றும் புற நலன்களின் இணைந்த கூட்டாகவே காண்கின்றார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த வேண்டியுள்ளது.

ஓர் ஒத்திசைவான முழுமையை உருவாக்குவதற்காக இந்த இரண்டு அம்சங்களையும் ஒன்றிணைக்கும் மையக் கருத்துருவாக்கமாக 'தர்மம்' அமைந்துள்ளது. தர்மமானது, பொதுப்படையாக அன்றி, துல்லியமாக நேர்மை என அழைக்கப் படுகின்றது. புத்த பெருமான் டிகஜானுவுக்கு உபதேசித்தபோது, (மேலே எடுத்தாளப்பட்ட உதாரணத்தில்) "ஒருவர் தனது முயற்சியால் சம்பாதிப்பதை நேர்மையான வழியில் சம்பாதிக்க வேண்டும்" என்றார். மீண்டும் அதை அழுத்திக் கூறுவதாயின், இங்கு கூறப்படும் தர்மம் எனும் எண்ணக்கரு பௌத்த சமூக தத்துவத்தின் மைய எண்ணக் கருவாகும். உள்ளூர், பிராந்திய அல்லது உலக மட்டத்தில் அபிவிருத்தி, அரசியல் அதிகாரம் அல்லது சமூகநலம் என எதுவாக இருப்பினும் இவை யாவுமே தர்மத்தின் எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டும். ஒவ்வொரு பின்னணியிலும் தர்மம் என்பது உண்மையில் எதைக் கருதுகின்றது என்பது அவ்விடத்துக்கு உரித்தான விசேட நிலைமைகளை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். மேலே கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கக்கூடிய 'தர்மத்திற்கான' வழிகாட்டல்கள் எவையெனில், பஞ்ச சீலங்களை அநுட்டித்தலாகும். (பஞ்ச சீலங்களாவன: 1. கொலை செய்யாதிருத்தலும், அதற்குப் பதிலாக உயிர்களைப் பேணிப்பாதுகாத்து நேசித்தலும்; 2. தனக்கு வழங்கப்படாதவற்றை, அதாவது சட்டரீதியாகவும் நேர்மையான முறையிலும் உடைமையாகக் கொண்டிராத எதனையும் எடுக்காதிருத்தலும், அதற்குப் பதிலாக ஏனையோரின் சொத்துகளைப் பாதுகாத்துக் கொடுத்தலும்; 3. பாலியல் துர்நடத்தையில் ஈடுபடாதிருத்தலும், அதற்குப் பதிலாக திருமண விழுமியங்களை மதித்து ஒழுகுதலும்; 4. பொய் கூறாமலும் ஏமாற்றாமலும் இருத்தலும், அதற்குப் பதிலாக ஒருவரது நடத்தையில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருத்தலும்; 5. போதைக்கும் கவனக் குறைவிற்கும் காரணமான பொருட்களை விலக்கி வைத்தலும், அதற்குப் பதிலாக எப்போதும் நிதானத்தை பேணுதலும்.)

பஞ்ச சீலங்கள் போன்ற நல்லொழுக்கங்களை கைக்கொள்வதனால் ஒரு சமூகத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என ஒருவர் வாதிடக்கூடும். குறிப்பாக கொலையை தவிர்ப்பதாயின் நாட்டில் மீன், இறைச்சி என்பவற்றை உற்பத்தி

செய்யமுடியாது என ஒருவர் கூறலாம். நேர்மையாக இருப்பின் தொழில் முயற்சிகள் கிட்டத்தட்ட சாத்தியமே இல்லை எனக்கூட அவர் வாதிடலாம். மதுபான வியாபாரம் அரசுக்கு கணி சமான வருமானம் தரும் ஒரு மூலமாக உள்ளது என்பதுவும் மிகவும் தெளிவான ஒரு விடயமாகும். இவ்வாறான தர்க் கங்கள் காணப்படும் நிலைமையில் இவற்றைப் பூரணமாக ஒழித்துக்கட்ட முடியாதிருப்பின், இத் தீமைகளை இயன்றளவிற்குக் குறைத்தல் என்பதே பௌத்தத்தின் நிலைப்பாடாகும். ஒரு பௌத்த பொருளாதாரம் புகையிலை, மதுபானம் என்பவற்றின் விற்பனை யால் கிடைக்கும் வருமானத்தைச் சார்ந்திருக்க முடியாது. அது மதுபானம் மற்றும் சிகரெட் உற்பத்தி போன்ற கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வ தன் மூலம் ஒரு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கமாட் டாது. பதிலாக, பௌத்த தத்துவங்களை மதிக்கும் ஓர் அரசு தீங்கில்லாத வேறு பொருட்களின் உற்பத்தியில் கவனத்தைச் செலுத்தும். ஒரு பௌத்த பொருளாதா ரத்தில், ஒருவர் ஊக்குவிக்கும் தொழில் முயற்சிகளின் விரும்பக்கூடிய இயல்பு களை அவரே மதிப்பிடலாம் என்பது தெளிவானது. புத்தர் சாதாரண ஒரு மனிதனாக இருந்தபோது, தனது மகன் ராகுலனுக்குக் கற்பித்த விடயமே பௌத்த பொருளாதார நடத்தையின் பின்னால் உள்ள அளவுகோலாகும்.

யோசித்துப் பார்க்கும்போது, நீங்கள் (உங்கள் உடலால், வார்த்தையால், மனத்தால்) செய்யவிழையும் காரியம் உங்களுக்குத் தீங்கிழைக்கும், ஏனை யோருக்கும் தீங்கிழைக்கும் அல்லது இருவருக்கும் தீங்கிழைக்கும் என அறிவீர்களாயின், அது துன்பமான விளைவைத்தரும் ஆரோக்கியமற்ற ஒரு செயலாகும். எனவே நீங்கள் அதை செய்யாது தவிர்த்துக் கொள்ள வேண் டும். நீங்கள் யோசித்துப் பார்க்கும் போது, (உங்கள் உடலால், வார்த் தையால், மனதால்) செய்யவிழையும் காரியமானது, உங்களுக்கும் தீங்கிழைக் காது, ஏனையோருக்கும் தீங்கிழைக் காது அல்லது இருவருக்குமே தீங் கிழைக்காது என அறிவீர்களாயின், அது மகிழ்வளிக்கும் நன்னெறிப்பட்ட ஒரு செயலாகும். இதைப் போன்ற செயல் களையே நீங்கள் செய்ய வேண்டும் (அம்பலத்திகா ராகுலோவடா சூத்திரம், மஜ்ஹிமாநிக்காய 61).

இந்த விசாலித்த எண்ணக்கருவை குறித்த நிலைமைகளுக்கேற்ப சற்று மாற்றியமைக்க வேண்டியுள்ளது. ஒரு சமூகத்துக்கு அல்லது நாட்டுக்கு பிரை யோகிக்கக்கூடிய இந்த நீதிநெறிகள் தனிமனிதனுக்குப் பிரயோகிக்கப்படும் நீதிநெறியிலிருந்து வித்தியாசமானதாக இல்லை. நாம் முன்னர் பார்த்ததுபோல அபிவிருத்தி பற்றிய பௌத்த தத்துவ மானது பொருளாதாரம், அறநெறி ஆகிய இரண்டு அம்சங்களையும் கருத்தில் எடுக்கின்றது. இது ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெற விழையவில்லை. பௌத்தத்தின் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு தனித்து இலாபத்தை அல்லது வளர்ச்சியை ஆதரிக்கவில்லை. அபிவிருத்தியின் தொகையளவையன்றி, பண்பு விருத்தியோடு வரும் தொகை விருத்தியையே அது கருத்தில் கொள் கின்றது.

## முடிவுரை

அகத் தூண்டுதலுக்கும் வழிகாட் டலுக்குமான ஒரு மூலமாக பௌத்த போதனைகளைக் குறிப்பிடுவது எமது நாட்டுப் பொருளியலாளர்களின் அல்லது திட்டமிடலாளர்களின் வழக்கமாக இருக்கவில்லை. 1960களில் 'சிறியதே அழகானது' என்னும் பிரபலமான நூலை எழுதிய மேற்கத்தைய எழுத்தாளரான ஈ.எப். ஸ்கூமச்சர் என்பவரே பொரு ளாதாரம் மற்றும் அபிவிருத்தி என்ப வை தொடர்பில் புத்தரின் போதனைகள் பற்றி முதன்முதலில் பேசத் தொடங் கினார் என்பது சுவாரஷியமான ஒன் றாகும். அவர் தனது புத்தகத்தில் 'பௌத்த பொருளாதாரம்' என்பதற்கு ஓர் அத்தியாயத்தை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடய மாக பௌத்த பொருளாதாரம் உள்ளது என அவர் உலகத்துக்கு எடுத்துக்காட் டினார். பெரியதே கூடுதல் சிறப்பானது எனும் பரவலான கருத்துக்கு எதிராக, ஸ்கூமச்சர் சிறியதே அழகானது, ஆரோக் கியமானது, மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கற்றது எனப் பிரகடனம் செய்தார்.

ஸ்கூமச்சரின் காலத்துக்கு முந்திய நிலைமை போன்று தற்காலத்து நிலை மை இல்லை. நான்கு தசாப்தங்களின் பின்னர், உலக பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் பௌத் தர்கள் மும்முரமாகச் செயற்படும் ஓர் உலகில் நாம் இன்று வாழ்கின்றோம். பிரச்சினைகளுக்கு மாற்று அணுகு முறையை வழங்கும் செயல்ஈடு பாட்டுப் பௌத்தம் (Engaged Buddhism) என அழைக்கப்படும் இயக்கம் உலகின் பல பாகங்களிலும் ஊக்கத்துடன் செயற்படுகிறது. பசுமைப் பௌத்தம் (Green Buddhism) சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத ஆரோக்கியம் தொடர் பான புரிதலையும் செயல்முறைகளை யும் உள்ளடக்கியிருப்பதாக அறியப்பட் டுள்ளது. இயற்கை குறித்த தற்போதைய அணுகுமுறையில், உலகமானது இந்த பௌத்த புரிதலைப் பின்பற்றும் வகை யில் மனிதனை மையப்படுத்தியதாக இல்லை. புத்தரின் போதனையிலிருந்து பெறப்பட்ட தூண்டலினால், இயற்கை யானது விலங்குகள், பறவைகள், ஊர் வன, மரங்கள், கொடிகள் அடங்கலான சகல உயிர் வாழ்வனவற்றையும் உள்ளடக்கியதாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. இது கரணிய-மெத்த சூத்திரத்தில் கூறப்பட்டுள்ள இலட்சியத் துடன், அதாவது 'சகல உயிர்களும் நன்றாகவும், மகிழ்ச்சியாகவும் இருப் பதாக' என்பதுடன் தொடர்புடையதாகும் (சபே சத்தா பகவந்து சுகிதத்தா).

இவ்வுலகில் வாழும் ஓர் உயிரினம் மட்டுமன்றி, சகல உயிர் வாழ்வனவும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். தற்கால நவீன எண்ணக்கருவாக இதை 'நீடித் திருக்கத்தக்க அபிவிருத்தி' எனக் கூற லாம். லௌகீக விடயங்களின் வளர்ச் சியாக மட்டும் இது இருக்காது. 20 சதவீதமானோர் 80 சதவீத வளங்களை பயன்படுத்தும் இந்த உலகத்தில் நீடித் திருக்கத்தக்க அபிவிருத்தியின் தத்துவத் துக்கு அமைய நடந்துகொள்ள, புத்தரின் போதனையில் கூறப்பட்டுள்ளவாறு மிகுந்த விளக்கம், கட்டுப்பாடு, பரிவு என்பன ஒருவருக்கு இருக்க வேண்டும்.

பௌத்தக் கோட்பாடுகளிலும் தத்து வார்த்த விளக்கங்களிலும் அன்றி, பொதுமக்களின் சுவையை திருப்தி செய்யும் அம்சங்களிலும் கலாசார நிகழ்வுகளிலும் நாம் அதிகம் அக்கறை கொள்வதனால், எம்மைப் போன்ற பாரம்பரிய பௌத்த நாடுகள் பௌத் தத்தின் பெறுமதிமிக்க அம்சங்களை விளங்கிக் கொள்வதில் இன்னும் பின்னிற்கின்றன. புத்தரின் போதனை களை வெறும் சமய அநுட்டானமாக அன்றி, ஒரு சமநிலைப்பட்ட அபிவிருத் தியை அடைவது தொடர்பான பிரச்சி னை அடங்கலாக எமது சமூகத்தின் அவசர தீர்வு தேவைப்படும் பிரச்சினை களின் தீர்வுக்கு வழிகாட்டும் தத்துவ மாகக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. ■

# தேசிய வருமானக் கணக்கீட்டின் அனுகூலங்களும் வரையறைகளும்

பேராசிரியர் டனி அத்தபத்து
சிரேஷ்ட பொருளியல் பேராசிரியர்
றுஹுணு பல்கலைக்கழகம்

"இச்செயல்முறையில் பெரும்பாலும் எழுந்தமானமான தீர்மானங்களையும் செயற்பாடுகளையுமே முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக்கூடும், ஆனால், தவிர்க்கமுடியாத வகையில் இது சில குறைபாடுகளைக் கொண்டுள்ளபோதும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இச்செயல்முறைத் தொகுதியானது பயன்படுத்துவதற்குப் பெரிதும் உகந்தது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்."

#### அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரயோகப் பொருளியலில் காணப்பட்ட மிகுந்த தாக்கவிளைவை உண்டாக்கவல்ல புத்தாக்கங்களில் ஒன்றாக தேசியக் கணக்கு முறைமையின் கண்டுபிடிப்பில் ஏற்பட்ட வளர்ச்சி அமைந்துள்ளது. ஒருவேளை, இம்முறைமை இல்லாதிருந்திருப்பின் கெயின்ஸியப் பகுப்பாய்வின் செயல்முறை அடிப்படையிலான பெறுமதியானது மிகக் கடுமையான வரையறைக்கு உட்பட்டதாக இருந்திருக்கும் என்பதால், கெயின்ஸியக் கோட்பாட்டுரீதியான ஆய்வுப் பணியைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதற்கான தகுதி இத்தேசியக் கணக்கு முறைமைக்கும் உண்டு. யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் புகழ்பெற்ற பொருளியல் நிபுணரான காலஞ்சென்ற பேராசிரியர் சிமன் குஷ்நெற்ஷ் (Prof. Simon Kuznets) அவர்களின் பங்களிப்பு இல்லாது இருந்திருக்குமாயின், கோட்பாட்டை எண்களாக மாற்றுவது தொடர்பில் எழுந்த, எண்ணக்கருரீதியான கடினமான வினாக்களுக்கு பதில் தெரியாமல் திண்டாடுவதில் அனேகமானோர் நீண்ட நேரத்தைச் செலவிட்டிருப்பர். பொருளாதார அளவீட்டு உத்திகளுக்கான அவரது பங்களிப்புக்களுக்காக, பேராசிரியர் குஷ்நெற்ஷ் அவர்களுக்கு பொருளியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இச்செயல்முறையில் பெரும்பாலும் எழுந்தமானமான தீர்மானங்களையும் செயற்பாடுகளையுமே முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக்கூடும், ஆனால் தவிர்க்கமுடியாத வகையில் இது சில குறைபாடுகளைக் கொண்டுள்ளபோதும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இச்செயல்முறைத் தொகுதியானது பயன்படுத்துவதற்குப் பெரிதும் உகந்தது என்பதைப் புரிந்துகொள்வீர்கள். பொருளாதார மற்றும் சமூகநலச் செயற்பாடுகளை அளவிடுவதற்காக தேசியக் கணக்குகளை பயன்படுத்துகின்றபோது, அவற்றின் முக்கியமான சில அனுகூலங்களையும் வரையறைகளையும் முன்னிலைப் படுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

#### தேசியக் கணக்குக் குறிகாட்டிகளின் பயன்கள்

**1. பொருளாதாரத்தை முகாமைசெய்தலும் பகுப்பாய்வு செய்தலும்**

தேசியக் கணக்குகள் என்பவை பல்வேறுபட்ட பொருளாதார மாறிகளுக்கு இடையிலான தொடர்பைக் காட்டுவதற்காக, வியாபாரக் கணக்கீட்டு இரட்டைப் பதிவுக் கோட்பாட்டையும் கணக்குகளின் ஒரு வரிசைத் தொகுதியையும் பயன்படுத்தும் தேசிய வருமானச் சுழற்சி பற்றிய பேரினப் பொருளாதார விபரிப்பாகும். இரண்டாம் உலக மகாயுத்த காலத்திலிருந்து இத்தேசியக் கணக்குகள் உலகளாவியரீதியில் பொதுவான ஒரு புள்ளிவிபரமாக இருந்துவருவதுடன், இப்புள்ளிவிபரமானது தேசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு பொதுப்படையான விளக்கத்தையும் வழங்குகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதன் வளர்ச்சியும், ஆள்வீதத் தேசிய வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்க வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் கணித்தல் போன்ற முக்கியமான குறிகாட்டிகள் உலகெங்கும் உள்ள தேசியப் பொருளாதாரங்களை முகாமைசெய்வதிலும் பகுப்பாய்வுசெய்வதிலும் முதன்மையான ஒரு வகிபாகத்தைக் கொண்டுள்ளன. பேரினப்பொருளாதாரப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படையான மொத்தப் புள்ளிவிபரங்களே தேசிய வருமானக் கணக்குகளாகும்.

**2. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளைப் பகுப்பாய்வுசெய்தல்**

தெளிவான, எப்போதும் ஒரே மாதிரியான தரநியமங்களைக் கொண்ட, ஒன்றிணைக்கப்பட்ட பேரினப்பொருளாதாரக் கணக்குகளின் தொகுதி, சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கருக்கள், வரைவிலக்கணங்கள், வகைப்படுத்தல்கள், கணக்கீட்டு விதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஐந்தொகையையும் அட்டவணைகளையும் இத்தேசியக் கணக்கு முறைமை உள்ளடக்கியிருக்கின்றது. இது, ஒரு பொருளாதாரத்தினுள் நிகழும் உணர்ந்தறிவதற்குக் கடினமான பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் சந்தையில் அல்லது பிறிதோர் இடத்தில் உள்ள வெவ்வேறுபட்ட பொருளாதாரச் செயற்பாட்டாளர்களுக்கும் அத்தகைய செயற்பாட்டாளர்களின் குழுக்களுக்கும் இடையிலான தொடர்பு என்பன பற்றிய, அனைத்தையும் உள்ளடக்கிய விபரமான ஒரு பதிவை வழங்குகின்றது. பொருளாதார அபிவிருத்தி மட்டமும் பொருளாதார வளர்ச்சி வீதமும், அத்துடன் மொத்தப் பொருளாதாரத்தின் நுகர்வு, சேமிப்பு, முதலீடு, படுகடன் என்பவை மாத்திரமன்றி, அரசாங்கம், அரச மற்றும் தனியார் கம்பனிகள், குடும்பங்கள் போன்றவற்றின் நுகர்வு, சேமிப்பு, முதலீடு,

படுகடன் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் அளவிடுவதற்கு தேசியக் கணக்கீட்டு முறைமை பொருளியலாளர்களுக்குத் துணைபுரிகின்றது.

தேசியப் பொருளாதாரங்கள், அவற்றின் முதன்மையான பொருளாதாரச் செயற்பாட்டாளர் குழுக்களும் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார ஒழுகுமுறைகளும் (மாறிகள்), இருப்புகளும் பொருளாதாரச் செயல்முறைகளும் முதலியன பற்றிய, தனிச்சிறப்பு வாய்ந்த பொதுவான ஒரு விளக்கத்தை இத்தேசியக் கணக்குகள் வழங்குகின்றன. தேசியக் கணக்குப் புள்ளிவிபரங்கள் தேசியப் பொருளாதாரம் பற்றிய பொதுவான ஒரு விளக்கத்தை வழங்குவதால், குறிப்பான புள்ளிவிபரங்களை மதிப்பீடுசெய்வது தொடர்பில், மிகுந்த தாக்க விளைவை ஏற்படுத்தக்கூடிய கருத்துகளின் தொகுதியாகவும் நிருவாகரீதியான தரவு மூலங்களாகவும் கூட அவை பயன்படுகின்றன.

**3. பொருளாதார மாதிரியைப் பின்பற்றுதலும் எதிர்வுகூறலும்**

பொருளாதார மாதிரி ஒன்றை உருவாக்குவதில், பொருளாதார வளர்ச்சியை எதிர்வுகூறுதல் மற்றும் விலைப் பகுப்பாய்வு நோக்கங்களுக்காகவும் அரசாங்கக் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளை மதிப்பிடுவதற்குமாகப் பயன்படுத்தப்படுகின்ற மிக முக்கியமான தகவல்களில் பெரும்பாலானவற்றை இத்தேசியக் கணக்குகள் தொடர்பான காலக்கிரம அடிப்படையிலான தரவுத்தொகுதிகள் வழங்குகின்றன. பொருளாதார விளைவுகள் பற்றிய மதிப்பீடு, மிகுந்த விபரங்களுடன் கூடிய கைத்தொழில் மற்றும் உற்பத்தி மட்டங்களில் மேற்கொள்ளப்படும் உற்பத்தித்திறன் பகுப்பாய்வு என்பவற்றிற்கு அவசியமான தரவுத் தளத்தை தேசியக் கணக்கீட்டு முறைமையிலிருந்து பெறப்பட்ட உள்ளீட்டு-வெளியீட்டு அட்டவணைகள் வழங்குகின்றன. இருந்தபோதிலும், நுண்ணயம் வாய்ந்த பொருளாதாரக் கருவிகளின் ஆதரவு இல்லாத நிலையிலும், ஒரு பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயற்பாட்டை, அதாவது அதன் பலவீனத்தைப் போன்று பலத்தையும், கண்காணிப்பதில், தேசியக் கணக்குகளின் கூட்டு மொத்தத்திலிருந்து பெறப்பட்ட குறிகாட்டிகள் மிகுந்த பயனுடையவையாக இருந்துவருகின்றன.

**4. ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செயற்பாடுகளைக் கண்காணித்தல்**

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெய் வளர்ச்சி வீதம், இறுதி நுகர்வும் மொத்த மூலதன உருவாக்கமும், சேமிப்பு வீதம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகச் சேமிப்பு), முதலீட்டு வீதம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த மூலதன உருவாக்கம்), அரசாங்க வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை) வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை என்பனவே பொருளாதாரத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான நன்கு தெரிந்த குறிகாட்டிகளாக உள்ளன. இக் குறிகாட்டிகளை தேசியக் கணக்குத் தரவுகளிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவை குறித்த பொருளாதாரத்தின் செயற்பாடுகளை காலக்கிரம அடிப்படையில் காட்டுவது மாத்திரமன்றி, அபிவிருத்தியில் ஒரே மட்டத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டாய்வுகளை மேற்கொள்வதற்கும் துணைபுரிகின்றன. வேறு வழியின்றி, நுண்ணயம் வாய்ந்த பொருளாதார மாதிரி ஒன்றைப் பின்பற்றாது விடினும், தேசியக் கணக்குகளிலிருந்து பெறப்படும் குறிகாட்டிகள் ஒரு பொருளாதாரத்தின் நன்னிலை (ஆரோக்கிய நிலை) பற்றிய பயன்மிகுந்த தகவல்களை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக, கணிசமான ளவு பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடையும் பொருட்டு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் குறைந்தபட்சம் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 சதவீதத்தை முதலீட்டு வீதமாகக் கொண்டிருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதுதவிர அரசாங்க வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3 சதவீதத்திற்குள் இருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவை இதற்கு அதிகமாக காணப்படுமாயின், அது எதிர்காலத்தில் நெருக்கடி உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தேசியக் கணக்குகளில் காணப்படும் மிகுந்தபயனுள்ள மற்றுமோர் விடயம் யாதெனில், இருப்புகளில் ஏற்படும் மாற்றமாகும். தயாரிப்புக் கைத்தொழிலில் காணப்படும் வெளியீடு தொடர்பிலான இருப்புகளில் ஏற்படும் அதிகரிப்பானது பொருளாதார மந்தநிலைக்கும் அதன் எதிர் நிலைக்குமான ஓர் அறிகுறியாக அமைந்துள்ளது.

தேசியக் கணக்குகளில் உள்ள உருப்படிகளை ஒன்றுசேர்ப்பதன் மூலம், ஏனைய குறிகாட்டிகள் பெறப்படுகின்றன. உதாரணமாக, மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாகக் கணிக்கப்படும் தயாரிப்புப் பொருட்களின் ஏற்றுமதி அளவானது ஏற்றுமதியால் நெறிப்படுத்தப்படும் கைத்தொழில் மயமாக்கத்தின் குறிகாட்டியாகப் பயன்படுத்தப்படும் அதேவேளை, ஏற்றுமதிகள் தொடர்பிலான படுகடன் கொடுப்பனவானது படுகடன் கொடுப்பனவு இயலாற்றலின் ஒரு குறிகாட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றது. குறிகாட்டிகள் தீர்க்கமான கட்டங்களாக அமையும் முக்கியமான சில விகிதங்களை விஞ்சும்போது, பொருளாதார பிரச்சினைகளை இணங்காண்பதற்கான சிறந்த கருவியை இந்த எளிய பொருளாதாரக் குறிகாட்டிகளே வழங்குகின்றன.

**5. பொருளாதாரத்தை விபரிப்பதற்கான ஒரு தொடர்பாடல் கருவியாகப் பயன்படுத்துதல்**

தொடர்பாடலுக்கும் தீர்மானம் மேற்கொள்ளலுக்குமான ஒரு கருவியாகப் பயன்படுதல் கூட தேசியக் கணக்குப் புள்ளிவிபரங்களின் முதன்மையான வகிபாகங்களில் ஒன்றாகும். உலகெங்குமுள்ள தேசியப் பொருளாதாரங்கள் பற்றிய தெளிவான எண்ணக்கருக்கள், உண்மைத் தகவல்களின் தொகுதி என்பவற்றையும் இத்தேசியக் கணக்குப் புள்ளிவிபரங்களே வழங்குகின்றன. தேசியப் பொருளாதாரங்கள் மற்றும் அதன் முதன்மையான கூறுகள் என்பன பற்றிச் சிந்திப்பதிலும், தொடர்புகொள்வதிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயல்முறைசார்ந்த கருத்துகளின் ஒரு தொகுதியாகக் கூட அவை பயன்படுகின்றன. இது, அரசாங்க மற்றும் தனியார் துறைச் செயற்பாட்டாளர்களின் ஒரு பரந்த தொகுதியுடன், எடுத்துக்காட்டாக குடும்பங்கள், தொழில்முயற்சிகள், இலாப நோக்கமற்ற நிறுவனங்கள், அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள், நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள், பொருளியலாளர்கள், பத்திரிகையாளர்கள், தொழிற் சங்கங்கள் முதலியவற்றுடன், தொடர்புபட்டுள்ளது. இவர்கள் அனைவருமே தேசியக் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் குறித்த வகையில் பொருளாதார வளர்ச்சி, குடும்பங்களின் இறுதி நுகர்வுச் செலவீனம், மூலதன உருவாக்கம், அரசாங்க வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை, வரிகள், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் நிலை போன்ற விடயங்களைப் பற்றிச் சிந்தித்து, உலகின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொள்கின்றனர்.

**6. முதலீடு, நுகர்வு, கூலிகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்குப் பயன்படுத்துதல்**

முதலீடு, நுகர்வு, கூலிகள் என்பன தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளலில் தேசியக் கணக்குப் புள்ளிவிபரங்கள் பெரும்பாலும் வெளிப்படையாகவே உள்ளடக்கப்படுகின்றன. தேசியப் பொருளாதாரங்களின் ஒப்புநோக்கப்படாத மற்றும் ஒப்பீட்டு ரீதியான வளர்ச்சி தொடர்பான புள்ளிவிபரங்கள் நிதிசார் உறுதிப்பாடும் பொருளாதாரச் செயற்பாடும் பற்றிய ஒரு குறிகாட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் பின்விளைவாக, வெளிநாட்டு நேரடி முதலீடு, உரிமைப்பங்கினதும் நாணயங்களினதும் கொள்வனவும் விற்பனையும், சர்வதேசக் கடன்களுக்கான நிபந்தனைகள் தொடர்பிலான பேரப் பேச்சுகள் (பேச்சுவார்த்தை) என்பவற்றில் அப்புள்ளிவிபரங்களால் செல்வாக்குச் செலுத்த முடியும். தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்படு

கின்ற கூலி தொடர்பான பேரப் பேச்சுகள் பகுதியளவில் தேசியக் கணக்குகளை ஆதாரமாகக் கொண்ட பேரினப் பொருளாதார உற்பத்தித்திறன் அதிகரிப்பு பற்றிய எதிர்வு கூறல்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவ்வாறே பாரிய முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் கூட பகுதியளவில் பொருளாதார வளர்ச்சி, மூலதன உருவாக்கம், கூலி அதிகரிப்பு மற்றும் விலைகளில் ஏற்படும் பொதுவான மாற்றங்கள் என்பன பற்றிய எதிர்வு கூறல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடும். தொடர்பாடலுக்கும் அரசாங்க மற்றும் தனியார் துறையினரின் தீர்மானம் மேற்கொள்ளலுக்குமான ஒரு கருவியாக செயற்படுகின்ற அவற்றின் வெளிப்படையான அனுகூலங்களை தேசியக்கணக்குகளின் இப்பயன்பாடுகள் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.

### 7. கொள்கை வகுத்தலுக்கும் அரசாங்கக் கொள்கை பற்றிய மதிப்பீட்டிற்கும் பயன்படுத்துதல்

அளவுசார் பேரினப்பொருளாதார மாதிரியையும் (முறைமை) பகுப்பாய்வையும் அடிப்படையாகக் கொண்டு, பொருளாதாரக் கொள்கைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவற்றை மதிப்பிடுவதற்குமான ஓர் அளவுசார்ந்த அடிப்படையை தேசிய வருமானக் கணக்குகள் வழங்குகின்றன. சனத்தொகைத் தரவுகளுடன் இணைந்த வகையில், ஆள்வீத (தலா) வருமானம் மற்றும் காலப்போக்கில் அதில் ஏற்படும் அதிகரிப்பு என்பவற்றின் ஊடாக, நன்னிலை தொடர்பான ஓர் அளவீட்டை இத் தேசிய வருமானக் கணக்குகளால் வழங்க முடியும். மேலும், உற்பத்தித்திறன் மட்டத்தையும் அதன் அதிகரிப்பு வீதத்தையும் மதிப்பிடுவதற்கு, ஊழியப்படை பற்றிய தரவுகளுடன் இணைந்த வகையில் இத் தேசிய வருமானக் கணக்குகளைப் பயன்படுத்த முடியும். நிதி மற்றும் நாணயத் தரவுகளுடன் இணைந்த வகையில், பணவீக்கம் தொடர்பான கொள்கைக்கான வழிகாட்டலையும் தேசிய வருமானக் கணக்குகளே வழங்குகின்றன. அரசாங்கக் கொள்கையை மதிப்பிடுவதற்கான ஓர் அடிப்படையை தேசிய வருமானக் கணக்குகள் வழங்குவதுடன், அரசாங்கக் கொள்கைகளின் அளவிடக்கூடிய அம்சங்களில் அதிருப்தியடைந்துள்ள மக்களால் ஆட்சியதிகாரத்தில் உள்ளோருக்கு விடுக்கப்படும் அரசியல்ரீதியான சவால்களை இதன் மூலம் நியாயப்படுத்தவும் முடியும்.

### தேசிய வருமானக்கணக்கீட்டின் வரையறைகள்

வாழ்க்கைத் தரம் எனும் எண்ணக்கருவின் ஊடாக மக்களின் பொருளாதார ரீதியான நன்னிலையை அளவிடுதலானது தேசிய வருமானத் தரவுகளின் முதன்மையான பயன்பாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இதற்கான அடிப்படையான பொதுத்திட்ட அளவு யாதெனில், நபர் ஒருவருக்கான மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பயன்படுத்துவதாகும். சமுதாயத்தை 'சிறந்த வாழ்க்கைக்கு' இட்டுச்செல்லத்தக்க வகையில் அதிகளவான உற்பத்தி காணப்படும் ஒரு நிலையில், மெய் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் சமூக நலனுக்கும் இடையில் ஓர் உறுதியான நேர் இணைவு இருக்க வேண்டுமென, பெரும்பாலானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் எடுகோள் உண்டு. இதனால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சில குறைபாடுகளைப் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல குறைபாடுகள் உள்ளன. அவை தொடர்பில் நீங்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டியுள்ளது. இக்குறைபாடுகள் காரணமாக, எமது பொருளாதாரரீதியான நன்னிலையைக் கணிப்பதற்கான ஓர் அளவீட்டுக் கருவியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை விளக்க வேண்டுமாயின், நாம் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டியுள்ளது.

முதலாவதாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது முறைசார்ந்த சந்தைகளில் இடம்பெறாத கொடுக்கல்-வாங்கல்களைப் பொருட்படுத்தாமல் விடுகின்றது. மக்கள் தமது சொந்த வீடுகளில் தமக்காகவே மேற்கொள்ளும் துப்பரவு செய்தல், சமையல், இலவச குழந்தைப் பராமரிப்பு போன்ற சேவைகள் இதற்கான மிக முக்கியமான உதாரணங்களாகும். இச்சேவைகள் சந்தைகள் ஊடாக நிகழாத காரணத்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிக்கும் புள்ளிவிபரவியலாளர்களால் அவற்றை அளவிட முடியாதுள்ளது. அத்தகைய கொடுக்கல்-வாங்கல்கள் வியாபார நிறுவனங்களின் இலாபநட்டத்தில் வெளிக் காட்டப்படுவதில்லை என்பதுடன், இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பை குறைத்துக் கூறுவதற்கு காரணமாக அமையும் வகையில், அவை தேசிய வருமானக் கணக்காளர்களால் தவறவிடப்படுகின்றன. அண்மைய வருடங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை மிகையாக மதிப்பீடு செய்வதற்கு இது பெரும்பாலும் வழிவகுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, கடந்த மூன்று தசாப்தங்களாக ஊழியப்படையில் உள்ள பெண்களின் சதவீதத்தில் பாரியளவிலான ஓர் அதிகரிப்பு இருந்து வருகின்றது. தற்பொழுது அதிகளவான பெண்கள் வீடு அல்லாத வேறு இடங்களில் பணியாற்றுவதால், உணவகங்களில் சமைக்கப்படும் உணவுகள், துப்பரவாக்கற் சேவைகள், பணம் செலுத்தும் குழந்தை பராமரிப்புச் சேவை என்பவற்றிற்கு இயல்பாகவே அதிகளவான கேள்வி காணப்படுகின்றது. இப்புதிய கேள்விகள் அனைத்துமே தற் போதைய மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்புகளில் வெளிப்படுகின்றன. ஆனால் அச்சேவைகள் முன்னர் இலவசமாக வழங்கப்பட்டபோது, அவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிப்படவில்லை. இது இயல்பாகவே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காணப்படும் உண்மையான வளர்ச்சியை மிகைப்படக் கூறுகின்றது.

இரண்டாவதாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியானது பொருளாதாரத்தில் நிகழும் உற்பத்தியின் ஓர் அளவீடாக வடிவமைக்கப்பட்டுள்ளமையால், அதில் ஓய்வு நேரம் உள்ளடக்கப்படுவதில்லை. இந்த ஓய்வு நேரமானது எமது பொருளாதாரரீதியான சமூக நலத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும் ஒரு பொருளாதார நன்மையாகும். ஏனையவை மாறாத நிலையில், எமக்கு ஓய்வு நேரம் எந்தளவுக்குக் கூடுதலாகக் கிடைக்கின்றதோ, அந்தளவுக்கு நாம் செல்வந்தர்களாக இருப்போம். ஓய்வு நேரமன்றி, வேலை நேரமே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. சந்தைசாராத ஏனைய செயற்பாடுகளுடன் சேர்த்து ஓய்வு நேரமும் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணக்கீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை. ஆயினும் பொருளாதாரரீதியான சமூக நலன்சார்ந்த நோக்கில் பார்க்கின்றபோது, குறைந்தபட்சம், நாம் பணிபுரிந்த கடைசி மணித்தியாலத்திற்கான கூலியைப் போன்று ஓய்வு நேரமும் பெறுமதிவாய்ந்ததாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின், ஓய்வெடுப்பதற்குப் பதிலாக நாம் வேலையில் ஈடுபடுவோம். கடந்த வருடங்களில் ஓய்வு நேரம் ஒரேசீராக அதிகரித்து வந்துள்ளது. வேலை நாட்கள் சுருங்கியுள்ளதுடன், விடுமுறை நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொருளாதார ரீதியான நன்னிலையில் ஏற்பட்டுள்ள இம்முன்னேற்றங்கள் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிப்படவில்லை. குடும்பங்கள் ஓய்வு நேரத்தை எந்தளவுக்கு பெறுமதியானவை எனக் கருதுகின்றனவோ, அந்தளவிற்கு ஓய்வு நேரத்திலான அதிகரிப்புகள் உயரளவான சமூக நலத்திற்கு வழிவகுக்குமேயொழிய உயர் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அல்ல.

மூன்றாவதாக, உத்தியோகபூர்வமான அதிகார அமைப்புகளுக்கு தகவல்கள் தெரிவிக்கப்படாது கொடுக்கல்-வாங்கல் நிகழும் மறைவான/இரகசியமான பொருளாதாரச் செயற்பாடுகளை மொத்த உள்

நாட்டு உற்பத்தி பொருட்படுத்தாமல் விடுகின்றது. இந்த மறைவான பொருளாதாரச் செயற்பாடுகள் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதுடன், வரிகளையும், ஒழுங்கு விதிகளையும் தவிர்ப்பதற்காக அல்லது பொருட்களும், சேவைகளும் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படுவதன் காரணமாக, அது வேண்டுமென்றே அரசாங்கத்திற்குத் தெரியாதவாறு மறைக்கப்படுகின்றது. மறைவான பொருளாதாரச் செயற்பாடுகள் வெளியே தெரிய வராத காரணத்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளில் இருந்து அவை விடுபட்டு விடுகின்றன. இந்த மறைவான பொருளாதாரச் செயற்பாடுகளை அளவிடுவது கடினமான காரியம் எனினும், அதை விபரிப்பது இலகுவானதாகும். அது, சட்ட விரோதமான மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும், குறைந்தபட்சக் கூலியை விட குறைவான கூலியை வழங்கி உழைப்பை சட்ட விரோதமாகப் பயன்படுத்தும் உற்பத்திச் செயற்பாடு, வருமான வரிகளைத் தவிர்ப்பதற்காக காசுக் கொடுப்பனவிற்காகத் தொழில்புரிதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைச் செயற்பாடானது மிகப் பெரிய ளவில் காணப்படுவதுடன், அது தனிப்பட்ட தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்துறை வல்லுனர்களைப்போல, ஊழியக் கைம்மாறு சம்பாதிக்கும் வாடகைக் கார்ச் சாரதிகள், சிகையலங்கரிப்போர், விடுதி மற்றும் உணவகத் தொழிலாளர்கள் போன்றோரின் செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. இந்த மறைவான பொருளாதாரச் செயற்பாடானது சட்டவிரோதப் பொருளாதாரத்திற்கு நிகரான வகையில் வளர்ந்து வருகின்றது என்பதை குறிப்பால் தெரிவிப்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் மறைவான பொருளாதாரச் செயற்பாடுகளின் உத்தேச அளவானது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடையில் உள்ளது எனவும் ஏனைய சில நாடுகளில் அது இதையும் விட அதிகமாக உள்ளது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது குறிப்பாக, சோசலிசப் பொருளாதாரத் திட்டமிடலில் இருந்து சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நிலை மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் பரவலாகக் காணப்படுகின்றது.

நான்காவதாக, பொருட்களின் உற்பத்தியின்போது நிகழும் சுற்றுச்சூழல் மாற்றங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பிடுவதில்லை. உற்பத்தி மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்ததாகத் தோற்றம் பெறுகின்ற, விரும்பத்தகாததும் அதிகளவுக்கு பிரபல்யப்படுத்தப்பட்டு வருவதுமான ‘மொத்த உள்நாட்டு இணையுற்பத்திகள் (by-products)’ கூட காணப்படுகின்றன. பொருளாதாரச் செயற்பாடானது சுற்றுச்சூழலின் பண்புத்தரத்தில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஐதரோ காபன் எரிபொருட்களைப் பயன்படுத்துதலானது எமது சுற்றுச்சூழலுக்கு சேதத்தை ஏற்படுத்துகின்ற அதிகளவிற்கு வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு செயற்பாடாகும். ஆயினும், இது மாத்திரம் இதற்கான ஓர் உதாரணமாக அமையாது. பயன்படுத்தித்தீர்ந்து போகத்தக்க வளங்கள் குறைவடைதல், காடுகளை மிகப் பெருமளவில் அழித்தல், மோட்டார் வாகனக் கழிவுப் பொருட்களை ஓர் இடத்தில் குவித்தல், வாகன நெரிசல், இரைச்சல், ஏரிகளும் நதிகளும் மாசுறுதல் என்பனவே கைத்தொழில் உற்பத்தியால் ஏற்படும் சுற்றுச்சூழல்சார்ந்த மிக முக்கியமான ஏனைய பாதகமான விளைவுகளாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புடைய இந்த மேலதிகச் செலவுகள் தற்போது மொத்த வெளியீட்டிலிருந்து கழிக்கப்படுவதில்லை என்பதுடன், இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, எமது பொருளாதார ரீதியான சமூக நலனை மிகைப்படவும் கூறுகின்றது. ‘பொருளாதார வாழ்வின் இறுதியான பௌதிகப் பொருட்கள் குப்பை கூளங்களேயாகும்’ என ஒரு பொருளியல் அறிஞரால் குறிப்பிடப்பட்டவாறு, அதிகரித்துச் செல்லும் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பதன் அர்த்தம் யாதெனில், மேலும் அதிகளவான குப்பைகூளங்களும் மேலும் அதிகளவான சுற்றுச்சூழல் மாசுறுதலும் என்பதாகும். சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதன் காரணமாக, எமது பொருளாதார ரீதியான நன்னிலையின் ஓர் அளவீடாக அமைந்துள்ள மொத்த உள் நாட்டு உற்பத்திக் கணக்கீடு தொடர்பான இவ்வரையறை முதன்மையான ஒன்றாகும்.

இறுதியாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தர அடிப்படையிலான ஓர் அளவீடு என்பதை விட, அளவுசார்ந்த ஒன்றாகும். பொருட்களின் தரத்தில் காணப்படும் முன்னேற்றங்களை இது துல்லியமாக வெளிப்படுத்துவதில்லை என்பது ஒரு குறைபாடாகும். பொருட்களின் அளவில் ஏற்படும் அதிகரிப்பானது எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதோ அந்தளவிற்கு, பொருட்களின் தரத்தில் ஏற்படும் முன்னேற்றங்களின் ஒவ்வொரு கூறும் பொருளாதார ரீதியான நன்னிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. காலப் போக்கில் பொருட்களின் தரம் எந்தளவிற்கு முன்னேற்றமடைகின்றதோ அந்தளவிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எமது பொருள்முதல் உலகு சார்ந்த (ஆன்மா அல்லது உள்ளுணர்ச்சிகளுடன் தொடர்பற்ற) நன்னிலையில் காணப்படும் முன்னேற்றத்தைக் குறைத்து மதிப்பிடுகின்றது.

நன்னிலை மற்றும் மனித அபிவிருத்தி என்பவற்றின் அளவீட்டுக் கருவியாகக் காணப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரையறைகள் காரணமாக, மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் (HDI) போன்ற புதிய அளவீடுகள் கொள்கை வகுப்பாளர்களால் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணானது வருமான அளவுகளை மாத்திரமன்றி, மக்களின் நன்னிலை தொடர்பில் பங்களிப்புச் செய்கின்ற கல்வி, சுகாதாரம் போன்ற ஏனைய மாறிகளையும் கவனத்திற் கொள்கின்றது.

## முடிவுரை

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டினுடைய பொருளாதாரச் செயற்பாடு பற்றிய கணிசமானளவு சரியானதும் மிகுந்த பயனுடையதுமான ஓர் அளவீடாகும். நாம் தற்போது புரிந்துகொண்டுள்ளவாறு, ஒரு நாட்டினுள் நிகழும் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கும் நாடுகளுக்கு இடையிலான வெளியீடுகளின் பெறுமதியை ஒப்பிட்டு ஆராய்வதற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் அதனுடன் தொடர்புடைய குறிகாட்டிகளையும் பயன்படுத்த முடியும். தேசியக் கணக்கீட்டுப் புள்ளிவிபரங்கள் அளவு சார்ந்த பொருளியல் பகுப்பாய்விற்கு மாத்திரமன்றி, தர அடிப்படையிலான, அதாவது அதிகளவிற்கு கோட்பாட்டுரீதியான பொருளியல் பகுப்பாய்விற்கான அகத்தூண்டலுக்குரிய ஒரு மூலமாகவும் பயன்படுவதாக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது பொருளாதாரத்தின் ஆரோக்கிய நிலையை அளவிடுவதற்கான மிக்க பெறுமதி வாய்ந்த ஒரு கருவியாக இருக்கும் அதேவேளை, அது பூரணமான ஓர் அளவீடல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியால் பொருள்முதல் உலகுசார்ந்த நன்னிலை பற்றிய நடைமுறைக்கு ஏற்ற ஓர் எண்ணப்பதிவை தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கக்கூடும். ஆயினும், அது சமூக நலன் தொடர்பான சரிநுட்பமான ஒரு குறிகாட்டியாக இருப்பதிலிருந்து பெரிதும் வேறுபட்ட ஒன்றாக உள்ளது. ■

# இலங்கையில் சந்தைப் பொருளாதார முறைமையின் கீழ் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி: புத்ததாஸ ஹேவாவிதாரண பாராட்டுமலர் தொகுதி 1

செம்மையாக்கம்: சமன் கெலேகம மற்றும் டிலெனி குணவர்த்தன
வெளியீடு: விஜித்த யாப்பா பதிப்பகம், 2012,
பக்கம் 517

மதிப்பாய்வுரை:
டபிள்யு.ஏ. விஜேவர்த்தன
முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி

"1977ன் பின்னர் இலங்கையில் நடைமுறையில் இருந்துவருகின்ற பொருளாதார முறைமை பற்றிய எந்தவொரு ஆய்வுக்குமான உறுதியான ஓர் அத்திவாரத்தை ராஜபத்திரனவின் கட்டுரை அமைத்துக்கொடுத்துள்ளது. 1950களின் பிற்பகுதியில் இந்த நாடு கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் இதன்பின்னர் இவற்றால் உண்டான ஏமாற்றங்கள் என்பன பற்றிய விளக்கங்களாக இது உள்ளது."

### அறிமுகம்

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக புகழ்பெற்றிருந்த பேராதனையின் புகழ்பெற்ற ஆசான் முன்னாள் பொருளியல் பேராசிரியர் புத்ததாஸ ஹேவா விதாரண அவர்களை நாட்டின் அதியுயர் கொள்கைவகுப்பு ஆலோசனைக்கான நிபுணத்துவ அமைப்பான கொள்கை ஆய்வுகள் நிறுவனமும், பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல்த்துறையும் பாராட் டியுள்ளன. இவருக்குப் புகழாரம் சூட்டும் வகையில் இவை இரண்டும் ஒரே சமயத்தில் இரு நூல்களை வெளியிட்டுள்ளன. இந்த இரண்டு தொகுப்பு நூல்களிலும் இவரது மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் என 54பேர் எழுதிய 44 கட்டுரைகள் காணப்படுகின்றன. இப்பாராட்டு நூல்களின் கருப்பொருள் "இலங்கையில் சந்தைப் பொருளாதார முறைமையின் கீழ் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி" என்பதாகும். 1977ல் அறிமுகப்படுத்தப்பட்டு சிறு மாற்றங்களுடன் இன்றுவரை நடைமுறையில் உள்ள இக்கொள்கை முறைமையானது இதில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 1990 தொடக்கம் 2006 வரையான காலப் பகுதியில் ஆளுநர் சபையின் ஸ்தாபக அங்கத்தவராகவும் பின்னர் 2006-2010 காலப்பகுதியில் அதன் தலைவராகவும் நாட்டின் கொள்கை ஆய்வு நிபுணர்கள் குழுமத்துக்கு ஆற்றிய பெறுமதிமிக்க சேவைக்காக கொள்கை ஆய்வு நிறுவனம் இந்த சிறப்புமிக்க பொருளியலாளருக்கு பாராட்டுத் தெரிவிக்க விரும்பியது. பேராசிரியர் ஹேவா விதாரணவுக்கு பெருமளவில் கடமைப்பட்டிருந்த பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல்த் துறை, மிகவும் பொருத்தமான வகையில் கைம்மாறு செய்ய விரும்பியது. இவர், 43 வருட காலமாக கல்விப்பணி புரிந்துவந்துள்ளார். உதவி விரிவுரையாளராக இணைந்து பின்னர் பேராசிரியர், துறைத் தலைவர் என உயர்ச்சி பெற்ற இவர், பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல்த் துறையின் கல்விசார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்தினார். இக்காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான பொருளியலாளர்களையும் பல நூறு பொருளியல் அறிஞர்களையும் இவர் உருவாக்கியுள்ளார்.

இவ்விரு நூல்களும் கொள்கை ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த சமன் கெலேகம மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டிலெனி குணவர்தன ஆகியோரால் செம்மையாக்கம் செய்யப்பட்டன. இந்நூல்கள் நான்கு மதிப்பீட்டாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. முதலாவது நூலை இக்கட்டுரை ஆசிரியரும் இரண்டாவது நூலை கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, பேராசிரியர் சிறிமல் அபயரத்ன மற்றும் பேராசிரியர் ஜே.பி.திஸநாயக்க ஆகியோரும் மதிப்பீடு செய்துள்ளனர். இலங்கையின் எதிர்கால கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்க உதவும் முகமாக முதலாவது நூலில் உள்ள பிரதான செய்திகள் மற்றும் அதிலிருந்து பெறப்படும் கற்றலின் விளைவுகள் பற்றிய மதிப்பீடு கீழே தரப்படுகின்றது.

### இலங்கைக்கு வருகைதந்த 'கெயின்ஸியக்கோட்பாட்டாளர்களிடம்' ஆலோசனை கேட்டல்

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 1957/58ல் இங்குவந்து, இலங்கையின் பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து, மேற்கொள்ள வேண்டிய உபாயங்களை சிபாரிசுசெய்த ஏழு பிரபல பொருளியலாளர்களும் அரசாங்கத்துக்கு வழங்கிய கொள்கை ஆலோசனை பற்றிய மதிப்பீடாக, முன்னாள் உலக வங்கி பொருளியலாளரும் வொஸிங்டனைத் தளமாகக்கொண்ட பொருளாதார மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் தற்போதைய உப தலைவருமான சரத் ராஜபத்திரனவின் முதலாவது கட்டுரை அமைகின்றது. வருகைதந்த பொருளியலாளர் பத்திரங்கள் என்று தலைப்பிடப்பட்டு ஒரு தொடராக வெளியிடப்பட்ட இவர்களது பரிந்துரைகள் அக்காலத்தில் சிலோன் என அறியப்பட்ட இந்த நாட்டினால் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த 10 வருட பெருந்திட்டத்தினுள் உள்வாங்கப்படவிருந்தன.

அரசாங்கத்தால் அழைக்கப்பட்டிருந்த இப்பொருளியலாளர்கள் யாவருமே இத்துறையில் புகழ்வாய்ந்தவர்களாக இருந்தனர். ஜோன் ஹிக்ஸ் (John Hicks), உர்சுல ஹிக்ஸ் (Ursula Hicks), கண்ணர் மிர்தல் (Gunnar Myrdal), ஜோன் றொபின்சன் (John Robinson), நிக்கொலஸ் கல்டர் (Nicholas Kaldor), ஒஸ்கர் லங்க (Oskar Lange), ஜோன் கெனத் கல்பிறெய் (John Kenneth Galbraith) ஆகியோரே அப்பொருளியலாளர்களாவர். இது நிகழ்ந்து இன்று 50 வருடங்களுக்கு மேலாகிவிட்டபோதும், அவர்களின் கொள்கைப் பத்திரங்களை

மதிப்பீடு செய்ய வேண்டும் என்னும் பட்டறிவு ராஜபத்திரனவுக்கு இருந்துள்ளது.

இவர்கள் யாவருமே பிரித்தானிய பொருளியலாளரான ஜோன் மேனாட் கென்ஸை (John Maynard Keynes) பின்பற்றுபவர்களாக இருந்தனர். முன்னேறிய பொருளாதாரங்களில் பொருளாதார மந்தத்தை வெற்றிகொள்வதற்கு அரசாங்கங்கள் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தை அறிமுகம்செய்ய வேண்டுமெனவும் அரசாங்க செலவின நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாகவே செலவீனங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் பரிந்துரைப்பு செய்த ஒரு பொருளாதார கொள்கையை கென்ஸ் 1930களில் முன்வைத்திருந்தார். இப்பொருளியல் கோட்பாட்டைப் பின்பற்றியோர் கென்ஸியர்கள் என அழைக்கப்பட்டனர். எனவே இச்செயற்பாடானது, இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை முன்மொழிவதற்காக கென்ஸியர்களை அழைப்பது போல இருந்தது.

1977ன் பின்னர் இலங்கையில் நடைமுறையில் இருந்துவருகின்ற பொருளாதார முறைமை பற்றிய எந்தவொரு ஆய்வுக்குமான உறுதியான ஓர் அத்திவாரத்தை ராஜபத்திரனவின் கட்டுரை அமைத்துக்கொடுத்துள்ளது. 1950களின் பிற்பகுதியில் இந்த நாடு கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் இதன்பின்னர் இவற்றால் உண்டான ஏமாற்றங்கள் என்பன பற்றிய விளக்கங்களாக இது உள்ளது. இங்கு வருகைதந்த பொருளியலாளர்களின் அபிப்பிராயங்களை பல்வேறு தலைப்புகளின் கீழ் பட்டியலிட்டுக் கூறியுள்ள ராஜபத்திரன, பட்டறிவு மற்றும் அப்போதும் அதற்கு முன்னரும் நிலவிய பொருளியல் மதிநுட்பம் ஆகியவற்றின் அடிப்படை யில் இவர்களின் அபிப்பிராயங்கள், பரிந்துரைகள் பற்றி ஒரு விமர்சன ரீதியான மதிப்பீட்டைச் செய்துள்ளார். ராஜபத்திரனவின் கருத்துப்படி, இங்கு வருகைதந்த பொருளியலாளர்களின் பரிந்துரைகள் நடைமுறையில் வெற்றியளிக்கவில்லை. வளர்ச்சிக்கு தடையாக அமையக்கூடிய சனத்தொகைப் பெருக்கம் பற்றி அவர்கள் அச்சம் தெரிவித்தனர். ஆனால், உண்மையில் நடந்தது இதற்கு நேர்மாறானதாகும். அவர்கள் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களையே சிபார்சு செய்திருந்தனர். பெரும் நட்டத்தை விளைவித்த இவை 1977ன் பின்னர் கைவிடப்பட்டன. இவர்கள், முக்கிய கைத்தொழில்கள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென அல்லது பொருளாதாரத்தை முன்னெடுக்கக்கூடிய வகையில் பொதுத்துறையை விரிவாக்க வேண்டுமென பரிந்துரை செய்திருந்தனர். இவை இரண்டையுமே செயற்படுத்தியதன் காரணமாக, செயற்றிறன் இன்மை, வரியிறுப்பாளர்களுக்கு ஏற்பட்ட சுமை, அருமையான வளங்கள் வீணடிக்கப்படுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு இட்டுச்சென்ற ஒரு பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கிக்கொண்டது. திட்டமிடல் தொடர்பான இவர்களின் பரிந்துரைகள் இலங்கையில் வெற்றியளிக்கவில்லை. இவர்களின் சிபார்சுகளின் அடிப்படையில் வரையப்பட்ட 1959ம் ஆண்டின் முதலாவது பத்தாண்டுத் திட்டம் ஒருபோதும் செயற்படுத்தப்படவில்லை. 1971ம் ஆண்டின் ஐந்தாண்டுத் திட்டம் கூட வளப்பற்றாக்குறை காரணமாக தோல்வி கண்டது. இங்கு வருகைதந்த பொருளியலாளர்களின் கூட்டு சிபார்சுகளில், ராஜபத்திரன மூன்று குறைபாடுகளைக் காண்கின்றார். கொள்கை வகுப்பின் அரசியல் பொருளாதார அம்சத்தைக் கணக்குப்போடத் தவறியமை, தோற்றம் பெற்று வளர்ந்துவந்த இனப்பிரச்சினையை உணரத் தவறியமை, விரிவடைந்துவிட்ட பொதுத்துறையில் அரசியல் தலையீட்டை இனங்காணாமல் போனமை என்பவையே அவையாகும். இப்பிரச்சினைகளே, சந்தைப் பொருளாதார முறைமை என அழைக்கப்பட்ட முறைமையில் காணப்பட்ட பிரதான பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினைகளாக உருவெடுத்தன.

### பொருளாதாரச் சீராக்கத்தை மேற்கொள் அல்லது 'நடுத்தர வருமானப் பொறி' ஒன்றில் சிக்கு

"அபிவிருத்தியடைந்துவரும் நாடு எனும் நிலையிலிருந்து நடுத்தர வருமானம் பெறும் ஒரு நாடாக மாற்றமடைவது தொடர்பில் சந்தைப் பொருளாதார முறைமையின் வகிபாகம்: அடுத்து நடக்கவிருப்பது என்ன?" என்ற தலைப்பிலான தனது கட்டுரையில் கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளரும் பெயர்பெற்ற பேரினப்பொருளியல் ஆய்வாளருமான துஸ்னி வீரக்கோன் என்பவர், 1977ன் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் முழுமையான பொருளாதார முறைமை மாற்றம் பற்றி மதிப்பீடு செய்துள்ளார். இக்காலப்பகுதியில், சில குறிப்பிட்ட வளர்ச்சிக்கான உந்துதலைத் தோற்றுவிக்க இலங்கைக்கு உதவிய தீர்வைக் குறைப்பு, அந்நியச்செலாவணிக் கட்டுப்பாடுகளின் நீக்கம், நிர்வாகரீதியான சிவப்பு நாடாக்களை ஒழித்தல் போன்ற முதலாவது தலைமுறை கொள்கைச் சீராக்கங்கள் இடம்பெற்றன. தொடர்ந்தும் வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்பட்ட கொள்கைகள், கட்டுப்பாடுகள், நிறுவனங்கள் என்பவற்றை அகற்றும் வகையில் தொடர்ச்சியான இரண்டாவது தலைமுறைச் சீராக்கங்களும் நடந்திருக்க வேண்டும். இது மேற்கொள்ளப்படாமையால், இக்காலப் பகுதியில் இலங்கையால் அதன் முழுமையான பொருளாதார வலுவை பயன்படுத்த முடியாமல் போயிற்று. இதனால், அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரம் எனும் நிலையிலிருந்து குறைந்த நடுத்தர வருமானப் பொருளாதாரம் எனும் நிலையை அடைவதற்கு இலங்கைக்கு இரண்டரை தசாப்தங்கள் எடுத்தன. இதேயளவு காலத்தில் சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் உயர் வருமான நாடுகளின் குழுவில் சேர்வதில் வெற்றி கண்டன. ஆகவே, இலங்கையின் எதிர்காலம் என்னவாகும்? விரிவான சீராக்கங்கள் நடைபெறாது போயின், இப்போது இலங்கை அநுபவித்துவரும் கட்டுமான அடிப்படையிலான பொருளாதார செழிப்புநிலை மறைந்துவிட, பேரினப் பொருளாதார உறுதிநிலை குலையும். இந்த இரண்டாம் தலைமுறைக் கொள்கைச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது விடப்படுமாயின், மலேசியா மற்றும் சில இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்று இலங்கையும் நடுத்தர வருமான பொறியில் சிக்கிக்கொள்ளும் ஆபத்து உள்ளதாக துஸ்னி வீரக்கோன் எச்சரித்துள்ளார்.

### பாதிக்கப்படுவோரையும் நன்மை அடைவோரையும் வென்றெடுத்தல்

கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் கைத்தொழில், அரசாங்கத் தொழில் முயற்சி சீராக்கம் மற்றும் ஒழுங்குபடுத்தற் கொள்கைப் பிரிவின் தலைவியான மாலதி நைற் ஜோன் என்பவர், தனியார்மயமாக்கம், போட்டித்தன்மை மற்றும் ஒழுங்குபடுத்தல் பரிபாலன முறைமை என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும், பரிணாமவளர்ச்சி பெற்றுவரும் அரசின் வகிபாகம் எனும் விடயம் பற்றிய தனது கட்டுரையில், அரச துறையை வினைத்திறனுடையதாக ஆக்குவதற்குத் தேவையான கொள்கைச் சீராக்கங்களை இனங்கண்டுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை ஆவணமான மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ளவாறு, அரசால் கட்டுப்படுத்தப்படும் ஒரு பொருளாதாரம் எனும் நிலைக்கு இலங்கையின் பொருளாதாரக் கொள்கை நகர்ந்துள்ளது. அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் துரிதமான, நிலைத்திருக்கத்

தக்க பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக அமையும் வினைத்திறன் இன்மை காணப்படுவதை யாரும் புறக் கணிக்க முடியாது. பழைய முறை மையால் நன்மை அடைபவர்கள் மாற்றங்களை எதிர்க்க விரும்புவர் எனவும், புதிய முறைமையால் நன்மை அடையக்கூடியவர்கள் மாற்றங்களுக்கு அளிக்கும் ஆதரவு ஏனோ தானோ என்ற ரீதியில்தான் இருக்கும் எனவும் நைற் ஜோன் மாக்கியவல்லியை மேற்கோள் காட்டி கூறியுள்ளார். இதனால், கொள் கை சீரமைப்பு திட்டங்களுக்கு பரந்தள விலான பொதுமக்கள் ஆதரவு கிடைப் பது சாத்தியமானதன்று. அசமந்தப் போக்கு உள்ள வெற்றியாளர்களை கொள்கை மாற்றங்களை ஆதரிக்கும் வகையில், விலை கொடுத்து வாங்கவும் கொள்கை மாற்றத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் இவற்றின் மூலம் கொள்கை மாற்றங் களுக்கு பொதுமக்கள் ஆதரவைத் திரட் டும் வகையிலான ஒரு பொறிமுறை இருக்க வேண்டும் எனும் கருத்தை நைற் ஜோன் முன்வைக்கின்றார். முக்கிய அரச தொழில்முயற்சிகளில் நிதி நெருக்கடி தாங்க முடியாத அளவுக்கு வந்துவிட்ட தாலும் இந்த ஆபத்தான கட்டத்தில் தொடர்ந்தும் இருக்க அனுமதிக்க முடியாது என்பதாலும் இப்போது நிலைமை ஒரு தீர்க்கமான கட்டமாக உள்ளது. இலங்கை மாற்றத்துக்கான இந்த வாய்ப்பை இனியும் தவறவிடக் கூடாது எனவும் நாடு தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழியாக இது இருப்பதனால் கசப்பான கொள்கைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளக்கூடிய உறுதியான அரசியல் தலைமையை ஆட்சி செலுத்துவோர் வழங்க வேண் டும் எனவும் நைற் ஜோன் முடிவு செய்துள்ளார்.

### இரு வகைக் கொள்கையின் அவசியம்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் கொள்கை ஆய்வு நிறுவனத்தின் தற்போதைய தலைவருமான டபிள்யூ.டி.லக்ஸ்மன், 'பங்குபற்றல் அபிவிருத்தி' என்ற பொரு ளிலான தனது கட்டுரையில் இவ்வகை அபிவிருத்தியின் நியாயத்தன்மை, ஆய்வு முறை மற்றும் குறைபாடுகள் பற்றி கருத்தாடல் செய்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரம் பங்குபற்றுவோரில் சிலரை பின்னே விட்டுச் செல்வதால், இவ்வாறான அபிவிருத்தி முறைமை தேவையாக உள்ளது என லக்ஸ்மன் வாதிடுகின்றார். இவர்களை வசப் படுத்தி பிரதான பொருளியல் செயற் பாட்டினுள் கொண்டுவர 'இரு வகைப் பொருளாதார கொள்கை' தேவையா கின்றது. இதில் ஒரு வகை, பேரினப் பொருளாதாரத்தை சீர்திருத்துவதில் ஆதிக்கமான வகிபாகத்தை உடையதாக இருக்கும். அடுத்த கட்டம், முதல் வகை அபிவிருத்தியின் தீய விளைவுகளை சரிப்படுத்துவதாக அமையும். இலங்கை யில் செயற்படுத்தப்படும் இதுபோன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வாசகர்களை இட்டுச் சென்ற பின்னர் லக்ஸ்மன், ஏனைய கட்டுரையாசிரியர்கள் பரிந் துரைத்த பேரினப் பொருளாதார அடிப்படையிலான கொள்கை சீர்திருத் தங்களுக்கான தேவையை நிராகரிக்காத போதும், இவ்வாறான கொள்கைகளால் உருவாக்கப்பட்ட பொருளாதார சமத்து வமற்ற நிலைகளை நலிந்த பிரிவினரை இலக்கு வைக்கும் திட்டங்கள் மூலமும் கீழிருந்து அபிவிருத்தி செய்து செல்லும் முறையைப் பின்பற்றுவதாலும் சரி செய்யலாம் என்னும் முடிவுக்கு வருகின் றார். அபிவிருத்திக்கான இரு வகைக் கொள்கை அணுகுமுறை பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள சமூக, அரசியல், இன நெருக்குதல்களை வெற்றிகொள்ள நிச்சயம் உதவும்.

### மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் அல்லாத பண நிரம்பல்

அகவய பண நிரம்பல் பற்றி எழுதும் போது, பண நிரம்பல், பொருளாதார முறைமையின் உள்ளே தீர்மானிக்கப் படுகின்றது எனவும் அதற்கு வெளியே மத்திய வங்கியால் தீர்மானிக்கப் படுவதில்லை எனவும் நடைமுறைச் சான்றுகள் காட்டுவதால் தான் நினைத்த மாதிரி பண நிரம்பலைக் கட்டுப்படுத்த முடியும் என்ற எடுகோளின் அடிப்படை யிலான இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடைமுறையில் பயனளிப்பது இல்லை எனவும், முன் னாள் மத்திய வங்கியாளரும் தற்போது நாட்டின் பல்கலைக்கழக முறைமையில் முன்னணி அறிஞருமான எஸ்.எஸ். கொலம்பகே விவாதித்துள்ளார். கொல ம்பகே, தனது ஆய்வுக் கட்டுரையில் இன்னும் முழுமையாக வெற்றிபெறாத கோட்பாட்டு விவாதம் ஒன்றை முன் வைத்துள்ளார். உலகெங்குமுள்ள மத்திய வங்கிகள் நாணயவியலாளரின் சிந்த னைப் போக்கில் அமைந்த ஒரு பொரு ளாதார மாதிரியுருவின் அடிப்படையில் தமது நாணயக் கொள்கையை அமைத் துள்ளன. இந்தக் கொள்கையானது வரு மானம் மற்றும் விலை மட்டங்களைத் தீர்மானிப்பதில் பண நிரம்பல் புறக் காரணியாக அமைவதாக எடுத்துக் கொள்கின்றது. எனவே பண நிரம்பலை கட்டுப்படுத்துவதன் மூலம், மத்திய வங்கியால் பண வீக்கத்தை கட்டுப் படுத்த முடியும் என நம்பப்படுகின்றது. கொலம்பகே வாதிப்பதுபோல, பண நிரம்பலானது இம்முறைமையினுள் தீர்மானிக்கப்படுவதாக இருப்பின், அதாவது வருமானம் மற்றும் விலைகள் மாறும்போது பண நிரம்பல் மாறு மாயின், பண நிரம்பலைக் கட்டுப் படுத்துவதன் மூலம், மத்திய வங்கியால் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடி யாது. ஏனெனில், அதன் இலக்குகள் (goal post / பந்தடிக் கம்பம்) தொடர்ந்து தள்ளிப் போய்க்கொண்டிருக்கும். என வே, மத்திய வங்கி பந்தை கம்பம் அருகே கொண்டுசென்று பார்க்கும் போது, பந்தடிக் கம்பம் இடம் மாறி யிருக்கும். எனது கருத்துப்படி, இது அறிவியலுக்குச் செய்யப்பட்ட நல்ல தொரு பங்களிப்பாகும். கொலம்பகே யின் முடிவின் அடிப்படையில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கிகள் புதிய கொள்கை அடிப்படையிலான நடவடிக்கைகளை தேடிக் கண்டறிய வேண்டும். இருப் பினும், மத்திய வங்கிகளினால் பண நிரம்பலையும் பண வீக்கத்தையும் கட்டுப்படுத்த முடியாது என்பதால் அவை தேவையற்றவையாக ஆகிவிட் டன என்ற முடிவுக்கு கொலம்பகேயின் கருத்து மேலும் இட்டுச் செல்கின்றது.

### பணவீக்கம்: கேள்வியால் தூண்டப்படும் ஒன்றா அல்லது நிரம்பலின் தாக்கத்திற்கு உட்படும் ஒன்றா?

றுஹுணுப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியரான டனி அத்தபத்து, தனது கட்டுரையில் 1977ன் பின்னரான காலப்பகுதியில் இலங்கை யின் மொத்த விலை மட்டம் அகக் காரணிகளாலும் புறக் காரணிகளாலும் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக விவாதித் துள்ளார். 1952ம் ஆண்டை அடி ஆண்டாகக் கொண்ட பழைய, ஆனால் இப்போது கைவிடப்பட்டுள்ள கொழும்பு நுகர் வோர் விலைச் சுட்டெண்ணை ஆதார மாகக் கொண்டு, விலை மட்டத்தை தீர்மானித்த அகக்காரணிகளாக உள் நாட்டு உணவு உற்பத்தியையும் கட்டுப் படுத்தப்பட்ட பிரதான நுகர்வுப் பொரு ட்களின் விலைகளையும் அத்தபத்து அவர்கள் இனங்கண்டுள்ளார். இறக்கு மதி விலைகளின் மாற்றங்கள் புறக்கார ணிகளாகும். இக்காரணிகள் சந்தையில் நிரம்பல் நிலைமையில் உண்டான மாற்றங்களுடன் தொடர்புறுகின்றன. ஆனால், நிரம்பலில் ஏற்படும் மாற்றங் களால் மட்டும் விலைகள் மாறுவ தில்லை. அவை கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டிலும் ஏற்படும் மாற்றங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. சமன்பாட்டின் கேள்விப் பக்கம் பண நிரம்பலில்

ஏற்படும் மாற்றங்களிலிருந்து வருகின்றது. இது இவரது கட்டுரையின் கருத்தில் எடுக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்துடன் விசேடமாக தொடர்புபடுத்தப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கலும் அதன் தாக்கமும் என்ற தலைப்பில் முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தரான எம்.எஸ். மூக்கையா எழுதிய கட்டுரை வங்கித் துறையிலிருந்து பெற்ற கடனால் நிதிப்படுத்தப்பட்ட உயரளவான வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறைகளிலிருந்து உருவான பண நிரம்பல் மாற்றங்களால் இக்காலத்தில் பண வீக்கம் ஏற்பட்டது என விவாதித்துள்ளது. மத்திய வங்கி தேவையற்ற ஒன்று எனும் முடிவுக்கு வந்துள்ள கொலம்பகே மற்றும் அத்தபத்துவின் கருத்தோடு ஒத்துப்போகும் வகையில் தமது நோக்கத்தில் தோல்வி கண்டுள்ள மத்திய வங்கிகள் மூடப்படுமாயின், சமூகங்கள் மேலும் சிறப்பாக அமையும் என அடித்துக்கூறியுள்ள மில்டன் பிறைட்மன் மற்றும் பிறட்றிஜ் ஹேயக் (Milton Friedman, Friedrich Hayek) ஆகியோருடன் முரண்பட முடியாது போகும்.

**வரவு-செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்துதல்**

இறைக் கொள்கை பற்றிய மூன்று கட்டுரைகளில் இரண்டு இலங்கையின் இறைக் கொள்கையில் இன்னும் ஏராளமான பிரச்சினைகள் இருப்பதாக வாதிடும் அதேவேளை, மூன்றாவது கட்டுரை மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க முயல்கிறது. சுயாதீன பொருளியல் ஆலோசகரான மாட்டின் பிறவுண் பிரிட்ஜ் மற்றும் உலக வங்கியின் முன்னணி பொருளியலாளர் சுதர்சன் கனகராஜா ஆகியோர் எழுதிய மேலும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி என்னும் கட்டுரை இலங்கையில் இறை சீர்திருத்தம் தேவையான பல முக்கிய இடங்களை இனங்கண்டுள்ளது. இவர்களின் கருத்துப்படி, இறைப் பற்றாக்குறையை குறைத்தல், வரி சீர்திருத்தங்கள் மற்றும் செலவினங்களை ஏற்புடைய வரையறைக்குள் வைத்திருத்தல் என்பன நாட்டின் இறை உறுதிப்பாட்டுக்குச் சவாலாக உள்ள பிரதான பிரச்சினைகள் ஆகும். செலவீனங்களை ஏற்புடைய வரையறைக்குள் வைத்திருத்தல் என்ற விடயத்தில் மீண்டெழும் செலவினங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் இறைக் கணக்கில் மிகையை உருவாக்க வேண்டிய தேவையை அவர்கள் வலியுறுத்துகின்றனர். இலங்கையின் இறைக் கொள்கையானது கொள்கைச் சீராக்கம் இடம்பெறும் ஏனைய பரப்புகளுடன் ஒப்பிடுகையில் பல வகையிலும் பின்தங்கியுள்ளது. இதனால் வளர்ச்சிக்கான இறைக் கொள்கையின் பங்களிப்பைப் பெற முடியாதுள்ளது என அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜே.எம். ஆனந்த ஜயவிக்கிரம, 'மறுசீரமைப்புக்கு பிந்திய பொது நிதி முகாமைத்துவம்: பிரச்சினைகளும் வெற்றிக்கான வாய்ப்புகளும்' என்ற தனது கட்டுரையில் இலங்கை முகங் கொடுக்கும் பல முக்கியமான இறைப் பிரச்சினைகளை இனங்கண்டுள்ளார். வரவு-செலவுத் திட்ட கட்டுப்பாட்டை அடைவதற்கு தேவையான உறுதியான அரசியல் தலைமைத்துவம் இல்லையெனவும் இறைவரி சேகரிப்பு பின்னடைதல், மீண்டெழும் செலவு வேகமாக அதிகரித்துச் செல்லுதல் என்பன பொது நிதி முகாமைத்துவத்தில் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினைகளாக தொடர்ந்தும் இருந்து வருவதாகவும் அவர் கூறுகிறார். அரசாங்கத் துறையின் அளவை கணிசமானளவு குறைக்கத் தவறியதால் அவர் பொது நிதி சீர்திருத்தத்தின் வினைத்திறன் தொடர்பில் சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.

**இறைச் சீராக்கத்தின் அவசியம்**

அனுபவம் வாய்ந்த பொருளியலாளரும் கொள்கை வகுப்பு நிபுணருமான பி.பீ. ஜயசுந்தர, மேற்படி குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டாலும் மறுசீரமைப்புக்கு பிந்திய பொருளாதாரத்தில் இறைக் கொள்கை பிரச்சினைகள்: பேரண்ட இறை வெற்றி வாய்ப்புகள் என்னும் தனது கட்டுரையில் இவற்றுக்கு விடையளிக்க முயன்றுள்ளார். மறுசீரமைப்புக்கு பிந்திய காலம் முழுவதுமே இறைக் கொள்கை மறுசீரமைப்பு தொடர்ந்து இருந்துவந்துள்ளது எனவும் ஆனால் பயங்கரவாதத்துக்கு எதிரான, 25 வருடமளவுக்கு நீண்ட யுத்தத்தால் விளைந்த பாதகமான அம்சங்கள் காரணமாக மறுசீரமைப்பின் நன்மைகள் மழுங்கடிக்கப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவர் பொது நிதியில் பல முக்கிய பிரச்சினைகளுக்கு நாடு இன்னும் முகங்கொடுத்து வருகின்றது எனக் கூறினார். தொடர்ந்து வரும் இறைவரி பற்றாக்குறை, நாட்டின் மொத்த உள்நாட்டு சேமிப்பின் மீது இதன் பாதகமான தாக்கம், பெரியளவிலான பொதுக்கடன், கடனைச் செலுத்த கடன் பெற வேண்டியிருத்தல், வட்டிக் கொடுப்பனவு, இறைவரித் தளத்தை வெளிநாட்டு வியாபாரத்திலிருந்து உள்நாட்டு வருமானம் மற்றும் பெறுமதி கூட்டல் ஆகியவற்றுக்கு மாற்றியமை, தொடர்ந்து காணப்படும் பெரியதொரு பொதுத்துறை, வெளியிலிருந்து வரும் பாதகமான திடீர் தாக்கங்களுக்குத் தயாராக இருக்காமை ஆகியவை இறை செயற்பாட்டில் தொடர்ந்து காணப்படும் பிரச்சினைகளில் சிலவாகும். தற்போதைய ஜனாதிபதி 2005ல் பதவிக்குவந்த பின்னர், நாட்டின் இறைக் கொள்கை செயற்படும் வீச்சை மீள்வடிவமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. மஹிந்த சிந்தனை-பத்து வருட அபிவிருத்தி எல்லையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மாற்றங்களைத் தொடர்ந்து இப்பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகின்றன. நாட்டின் கொள்கை வகுத்தல் தொடர்பான அதியுயர் அதிகாரி என்ற வகையில் அவரது இறுதிச் செய்தி மிகவும் தெளிவானதாக உள்ளது: இறைவரிக் கணக்கில் மிகையை கொண்டு வாருங்கள்; முதலீடுகளுக்கு நிதிப்படுத்துவதற்கு இந்த மிகையை பெரியளவில் பயன்படுத்துங்கள். இதைச் சாதிப்பதற்கு வரியறவீடு, அரச தொழில்முயற்சிகளின் முகாமைத்துவம் மற்றும் பொதுச் செலவினக் கட்டுப்பாடு என்பவற்றில் வினைத்திறன் மிக்க மறுசீரமைப்புகளை நடைமுறைப் படுத்துவது அவசியமனதாகும். இதன் மூலம், முக்கியத்துவம் குன்றாத பொது முதலீட்டுத் திட்டங்களை தொடரக் கூடியதாக இருக்கும்.

**சீராக்கம் அல்லது சீரழிவு**

இக்கட்டுரைகளில் புகழ்பெற்ற பொருளியலாளர்கள் தந்துள்ள முக்கியமான செய்திகள் யாவை? பல ஆலோசனைகள் கூறப்பட்டிருப்பினும், அவை யாவுமே பொருத்தமான மறுசீரமைப்புகளைத் தொடர்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இது இரண்டாம் தலைமுறை மறுசீரமைப்பு, சில சமயம் மூன்றாம் தலைமுறை சீர்திருத்தம் என தொடர வேண்டும்; இது வரவு-செலவுத் திட்டத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்; இறைவரிக் கணக்கில் மிகை காணப்பட வேண்டும்; மூல வளங்களை நுகர்விலிருந்து முதலீடு நோக்கி திருப்ப வேண்டும்; நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இலாப மீட்டும் நிறுவனங்களாக ஆக்க வேண்டும். இலங்கை அதன் எதிர்காலத்தை வெற்றிகொள்ள வேண்டுமாயின், இவை நிறைவேற்றப்பட வேண்டிய மிகவும் குறைந்த நிபந்தனைகளாகும். தொகுத்து நோக்கும்போது, புத்ததாஸ ஹேவாவிதாரன பாராட்டுமலர் தொகுதி 1ற்குப் பங்களிப்புச்செய்த பொருளியலாளர்களின் உரத்த குரல் தெளிவாகக் கூறுவது யாதெனில், மறுசீரமைப்பு செய்யுங்கள் அல்லது அழிந்துபோங்கள் என்பதேயாகும்.

**மதிப்பாய்வுரையாளருடனான தொடர்புகளுக்கு:**
*waw1949@gmail.com*

நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளையும் இன, மத, ஒற்றுமை மற்றும் நல்லுறவையும் கெடுப்பதை நோக்கமாகக் கொண்ட சகல வெளிநாட்டுச் சதிகளையும் தோற்கடிப்பதற்கு அற்பசொற்ப வேறுபாடுகளை களைந்துவிட்டு அரசாங்கத்துடன் கைகோர்க்கு மாறு, மூன்று நிக்காயக்களின் மகாநாயக்க தேரர்களும் ஒரு கூட்டறிக்கை மூலம் அழைப்பு விடுத்துள்ளனர்.

29 கியூபா அரசாங்கம் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், ஜெனீவாவில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கான தனது முழுமனதுடனான ஆதரவை வெளிப் படுத்தியுள்ளது.

A.T. Kearney Global Management Consultants எனும் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, உலகளாவிய சேவைகள் அமைவிடச் சுட்டியில் இலங்கை 21வது நிலையில் உள்ளதாக இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அறிவித்துள்ளது. இவ்வறிக்கையில், ஒப்பந்த அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான மிகச் சிறந்த இடங்களாக 50 நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**மார்ச், 2012**

1 இலங்கைக்கு எதிராகச் செயற்படும் பொருட்டு அமெரிக் காவினதும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவைத் தேடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது அணிசேரா நாடுகளின் ஆசியக்குழுவானது இலங்கைக்கு தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்தது.

2 ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் தற்போது ஓர் அரச தலைவராக இருப்பதால், அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய முடியாதென்பதைச் சுட்டிக்காட்டி, ஜனாதிபதிக்கு எதிரான வழக்கை அமெரிக்க மத்திய நீதிமன்ற நீதிபதி ஒருவர் தள்ளுபடி செய்துள்ளதாக வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் ஒரு பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இலங்கையானது மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் காட்டத் தவறியுள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க உதவி செயலாளர் மரிய ஒட்டரே விமர்சித்தமைக்கு கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில், ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங் கையின் நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் அவர்கள் அமெரிக்காவின் இரட்டை வேடமும் போலித்தனமும் இந்த பேரவையின் நியாயத்தன்மையை கடுமையாக பாதிக்கும் எனப் பதிலளித்தார்.

8 மாத்தறை-கதிர்காமம் புகையிரதப் பாதை நீடிப்புச் செயற்றிட்டத்தின் கட்டம் ஒன்றான மாத்தறை-பெலியத்த பகுதியின் நிர்மாணத்திற்கு நிதியளிப்புச் செய்வதற்காக மக்கள் சீன குடியரசு அதன் ஏற்றுமதி-இறக்குமதி (எக்ஸிம்) வங்கியூடாக வழங்கப்படும் சலுகை அடிப்படையிலான 278.2 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்கு அங்கீகாரமளித்துள்ளது.

13 NDTV உடனான ஒரு நேர்காணலின்போது, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம், பிரபாகரனின் 12 வயது மகன் குரூரமாகக் கொல்லப்பட்டார் என்ற குற்றச்சாட்டு பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியின் இன்னுமொரு கட்டுக்கதை எனவும், சனல் 4ன் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்ற வையும் உறுதிப்படுத்தப்படாதவையுமாகும் எனவும், அவை எந்தவொரு அதிகார பீடத்தினாலும் சரிபார்க்கப்படாதவை எனவும் கூறினார்.

14 பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள், இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மற்றும் போலிக் காணொலிக் காட்சியுடனான புதிய சனல் 4 ஆவணம் ஆகியவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். வீதிகளில் குவிந்த இலங்கையர்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலான சர்வதேச தலையீட்டுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

17 கடைசியாக வெளியிடப்பட்ட சனல் 4 காணொலிக் காட்சி பற்றி கருத்துரைத்தபோது, எண்ணியல்சார் தகவல் பரிமாற்றக் (டிஜிட்டல்) காணொலி முறையில் உலகின் முன்னணி நிபுணர் களில் ஒருவரும் சிஸ்கோவின் உலக ஒளிபரப்பு மற்றும் எண்ணியல்சார் தகவல்பரிமாற்றக் காணொலி செயல்முறை பிரிவின் தலைவருமான சிரி ஹேவாவிதாரண என்பவர், அது புதிய சான்றாக மீள்வடிவமைக்கப்பட்ட பழைய காட்சியாகும் எனக் கூறினார்.

22 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிராக அமெரிக்க முன்னெடுப்புடன் கொண்டுவந்த தீர்மானம் 24 நாடுகளின் ஆதரவுடனும் 15 நாடுகளின் எதிர்ப்புடனும் நிறைவேறியது.

மனித உரிமைகளில் இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 19வது அமர்வில் தனது முடிவுரை யின்போது "எனது நாட்டுக்கு மட்டுமன்றி வேறு பல நாடுகளுக்கும் பாதகமான தார்ப்பரியங்களை கொண்டுவரப் போகும், முக்கிய கோட்பாடுகளை அப்பட்டமாக மீறும் வகையில் பல பாதகமான அம்சங்களை கொண்டுள்ள, பிழையான விளக்கத்தில் அமைந்துள்ள, நியாயப்படுத்த முடியாத, மோசமான தருணத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுமான தீர்மான வரைவு ஒன்றுக்கு முகங்கொடுக்க எனது நாடு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

24 ஜெனீவாவிலுள்ள இலங்கைத் தூதுவர், ஆபிரிக்க நாடுகளின் குழுவுக்காக தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்புரையில், அமெரிக் காவால் முன்னெடுக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பல நாடுகளை பாதிக்கின்ற அதிலும் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் உலகைச் சேர்ந்த நாடுகளைப் பாதிக்கின்ற படுமோசமான மிரட்டலைக் கொண்டதாகவும் பயங்கரமான முன்னுதார ணமாகவும் அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

25 இஸ்ரேலிய குடியேற்றங்களைப் பற்றி ஆராய்வதற்கு அதிகாரம் வழங்கிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வாக்கெடுப்பைத் தொடர்ந்து, இந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை தாங்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என இஸ்ரேலின் வெளிநாட்டமைச்சர் அவிக்டர் லிபமென் பொது வானொலிக்குக் கூறியுள்ளார்.

26 ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை தொடர்பாக கொழும்பில் கருத்துரைத்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தற்போதைய நிலைமையில் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஊடாக எந்த வழியில் சர்வதேச மயப்படுத்தினாலும், அது இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நல்லிணக்கச் செயல்முறைக்கு உதவியாக அமையாது என்பது மட்டுமல் லாமல், அது கெடுதியாகவே அமையும் எனக் கூறினார். ■


# உலகின் நியாயத்தன்மை, மனிதாபிமானம் மற்றும் நீடித்தருக்கத்தக்கதன்மை தொடர்பான சிறப்புக்கூறுகள்

## வறுமை தொடர்பான உலகளாவிய தகவல்கள்

- 1990ல் 47 சதவீதமாக இருந்த, நாள் ஒன்றுக்கு 1.25 அ. டொலருக்கும் குறைவான வருமானத்துடன் வாழ்க்கை நடாத்தும் மக்களின் வீத அளவானது 2008ல் 24 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதாவது இது 2 பில்லியனிலிருந்து 1.4 பில்லியனாகக் குறைவடைந்தது.
- 1990ல்,நாள் ஒன்றுக்கு 1.25 அ. டொலருக்கும் குறைவான வருமானத்துடன் வாழ்க்கை நடாத்தும் மக்கள் தொடர்பான உலகளாவிய வறுமை சதவீதமானது 2010ல் ஏறத்தாழ அரைவாசியாக வீழ்ச்சியடைந்துள்ளது என ஆரம்பகட்ட மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. இம்முடிவுகள் உறுதிப்படுத்தப்படுமாயின், மிகுந்த வறுமைநிலையை அரைவாசியாகக் குறைக்க வேண்டும் எனும், ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் முதலாவது இலக்கானது எதிர்பார்க்கப்பட்ட காலமாகிய 2015ம் ஆண்டிற்கு முன்னரே அடையப்பட்டுவிட்டது எனக் கருத முடியும்.
- ஆண்களை விட பெண்களே அதிகளவு பாதிப்புகளுக்கு உட்படக்கூடிய தொழில்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர்.
- 1990ல் இருந்து போசாக்கின்மையால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.
- அனேகமான பிராந்தியங்களில் உணவு கிடைக்காமையிலிருந்து விடுபடுதல் தொடர்பிலான முன்னேற்றத்தின் வேகம் குறைவடைந்துள்ளது அல்லது நிறுத்தப்பட்டுள்ளது.
- ஆபிரிக்காவின் உப சகாராப் பிராந்தியத்திலுள்ள நாடுகளே உணவு மற்றும் நிதி நெருக்கடிகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவையாகும்.
- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள ஐந்தில் ஒரு குழந்தை நிறைகுறைந்ததாகக் காணப்படுகின்றது.
- கிராமிய மற்றும் நகர்ப்புறச் சிறார்களுக்கு இடையில் காணப்படும் போசாக்குநிலையிலான ஏற்றத்தாழ்வுகள் இலத்தின் அமெரிக்க மற்றும் கரிபியன் பிராந்தியங்களில் அதிகளவில் உள்ளன.
- அனைத்துப் பிராந்தியங்களிலுமே, சிறுவர்கள் மத்தியிலான போசாக்குநிலையை நிர்ணயிக்கும் மிக முக்கியமான காரணியாக வறுமை உள்ளது.
- 2011ல், அகதிகளையும் இடம்பெயர்ந்தோரையும் திருப்பியனுப்புவதில் முன்னேற்றம் காணப்பட்டபோதும், அவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் உயர்வானதாகவே உள்ளது.

*மூலம் : ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான அறிக்கை, 2012*

## செல்வந்தர்களில் 20 சதவீதம் எனும் அடிப்படையில் அபிவிருத்தியடைந்துவரும் பிராந்தியங்களில் உள்ள 5 வயதிற்குட்பட்ட நிறை குறைந்த சிறுவர்களின் வீத அளவு 2006-2010 (%)




அனைத்துப் பிராந்தியங்களிலுமே போசாக்கின்மையை நிர்ணயிக்கும் காரணியாக வறுமை உள்ளது

## போதைப்பொருட் துஷ்பிரயோகம் தொடர்பான உலகளாவிய தகவல்கள்

- ஒவ்வொரு வருடமும் நிகழும் 2..5 மில்லியன் மரணங்களுக்கு தீங்கிழைக்கத்தக்க மதுப் பாவனைகாரணமாக அமைகின்றது.
- 15ற்கும் 29ற்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவில் அடங்கும் 320,000 இளையோர் மதுப் பாவனையுடன் சம்பந்தப்பட்ட காரணங்களால் இறக்கின்றனர். இது அவ்வயதுப் பிரிவினர் மத்தியில் நிகழும் மொத்த மரணங்களில் 9 சதவீதமாக உள்ளது.
- குறைந்தபட்சம் 15.3 மில்லியன் பேருக்கு மதுப்பாவனை தொடர்பான உடல் மற்றும் உளக்கோளாறுகள் உண்டு.
- 148 நாடுகளில் உள்ளோர் ஊசி மூலம் போதைப் பொருட்கள் ஏற்றும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர் எனவும், அதில் 120 நாடுகளில் உள்ளோருக்கு எச். ஐ. வீ. தொற்று காணப்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது.

*மூலம் : உலக சுகாதார நிறுவனம்*

## வன்செயல் தொடர்பான உலகளாவிய தகவல்கள்

- வன்செயல் காரணமாக உலகளவில் ஒவ்வொரு வருடமும் 1.6 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். இவர்களில் 51,000ற்கு மேற்பட்டோர் அமெரிக்கர்களாவர்.
- உலகளாவிய வன்செயல் மரணங்களில் தற்கொலை 54 சதவீதமாகவும், கொலை 35 சதவீதமாகவும், யுத்தம் மற்றும் ஏனைய ஆயுத முரண்பாடுகளால் இறப்போர் 11 சதவீதமாகவும் உள்ளன.
- 15-29 வயதுப் பிரிவினர் மத்தியில் காணப்படும் மரணங்களுக்கு வன்செயலே முதன்மையான காரணியாக உள்ளது.
- ஐக்கிய அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் நிகழும் வன்செயல்களில் பெரும்பாலானவை வறியோர் மத்தியிலேயே காணப்படுகின்றன; வன்செயல் காரணமாக ஏற்படும் மரணங்களில் 91 சதவீதமானவை குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளிலேயே நிகழ்கின்றன.

## தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பிரச்சினைகள், மனிதாபிமான விடயங்கள் தொடர்பான குறிகாட்டிகள்


| நாடு | 2011ல் ஆள்வீத மொ. உ. உற்பத்தி (அமெரிக்க டொலரில்) | 2010ல் ஆள்வீத காபன் டயஒக்சைட் வெளியேற்றம் (தொன்/நபர்) | 1,00,000 நபர்களுக்கான தற்கொலை எண்ணிக்கை | சர்வதேச மட்டத்தில் 1,00,000 நபர்களுக்கான கொலைகளின் வருடத்திற்கான வீதம் - 2011 | ஆள்வீத லீற்றரில் வளர்ந்தோர் (15 வயதிற்கு மேற்பட்டோர்) மத்தியிலான மதுபான நுகர்வு - 2005 | 1,00,000 நர்களுக்கான சிறைக் கைதிகளின் எண்ணிக்கை - 2003 | 1,000 நபர்களுக்கான விவாக ரத்துகளின் எண்ணிக்கை - 2004 | 2010ல் ஆயுத ஏற்றுமதி (மில்லியன் அமெரிக்க டொலரில்) | 2007ல், வளர்ந்த ஒருவருக்கான சிகரெட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ. அமெரிக்கா | 48,442 | 16.9 | 11.80 (2008) | 4.80 | 9.44 | 715 | 4.95 | 8,641 | 1,196 |
| ஐக்கிய இராச்சியம் | 38,818 | 8.1 | 6.90 (2009) | 1.23 | 13.37 | தரவு கிடைக்கவில்லை | 3.08 | 1,054 | 790 |
| சீனா | 5,430 | 6.8 | 22.23 (2010) | 1.12 | 5.91 | 119 | 0.79 | 1,423 | 1,648 |
| இந்தியா | 1,489 | 1.5 | 10.50 (2009) | 3.20 | 0.75 | 29 | தரவு கிடைக்கவில்லை | தரவு கிடைக்கவில்லை | 99 |
| ரஷ்யா | 13,089 | 12.2 | 21.40 (2011) | 12.00 | 15.76 | 584 | 3.36 | 6,039 | 2,319 |
| பிரேசில் | 12,594 | 2.2 | 4.8 (2008) | 26.00 | 9.16 | 169 | 0.26 | தரவு கிடைக்கவில்லை | 580 |
| தென்னாபிரிக்கா | 8,070 | 7.6 | 15.40 (2005) | 32.00 | 9.46 | 402 | தரவு கிடைக்கவில்லை | தரவு கிடைக்கவில்லை | 511 |
| அவுஸ்திரேலியா | 60,642 | 18.0 | 9.70 (2009) | 1.34 | 10.02 | 116 | 2.52 | தரவு கிடைக்கவில்லை | 1,130 |
| யப்பான் | 45,903 | 9.2 | 23.80 (2011) | 0.34 | 8.03 | 54 | 1.92 | தரவு கிடைக்கவில்லை | 2,028 |
| பிரான்ஸ் | 42,377 | 5.9 | 16.20 (2008) | 1.09 | 13.66 | 95 | தரவு கிடைக்கவில்லை | 1,834 | 876 |
| ஜேர்மனி | 43,689 | 10.0 | 9.50 (2009) | 0.86 | 12.81 | 96 | தரவு கிடைக்கவில்லை | தரவு கிடைக்கவில்லை | 1,125 |
| இலங்கை | 2,835 | 0.6 | 19.00 (2009) | 4.60 | 0.79 | 105 | 0.15 | தரவு கிடைக்கவில்லை | 205 |

*மூலம் : www.nationmaster.com, www.wikipedia.com, www.worldbank.com, http://edgar.jrc.ec.europa.eu/news_docs/C02%20Mondiaal_%20webdef_19sept.pdf*

## 1990-2000ற்கும் 2000-2010ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் காடுகளின் பரப்பளவில் ஏற்பட்ட தேறிய மாற்றம் (வருடத்திற்கு மில்லியன் ஹெக்ரயர்)

ஆசியாவில் காடுகளின் பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பானது காடழிப்பு வேகத்தைக் குறைப்பதற்குத் துணைபுரிந்துள்ளதெனினும், அதனால் உலகளாவிய இழப்புகளை முழுமையாக மாற்ற முடியவில்லை.

1990-2000
2000-2010




*மூலம் : ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான அறிக்கை, 2012*


5ஆம் வகுப்பு திறமைசாலிக்கு இம்முறையும்
'சிசு உதான'விடமிருந்து பெறுமதிமிக்க பரிசு...
சிரத்தையுடன் கல்வி கற்று, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகளைப்
பெறும் மாணவ மாணவியர்க்கு மக்கள் வங்கியின் "சிசு உதான" விடமிருந்து புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
விஷேட புலமைப்பரிசில்
5ஆம் ஆண்டு புலமைப்பரிசிலில் அனைத்து மாவட்டங்களிலும் முதலாவது, இரண்டாவது மற்றும்
மூன்றாவது இடங்களைப் பெறும் பிள்ளைகளுக்கு, முறையாக ரூ.25,000/-, ரூ.20,000/-,
ரூ.15,000/- பெறுமதியான புலமைப்பரிசில்கள்.
ரூ. 5,000/- வீதம் 1000 புலமைப்பரிசில்கள்
2012 ஓகஸ்ட் 26ஆம் திகதியில் "சிசு உதான" கணக்கில் 5,000/- ரூபாயினை ஆகக்
குறைந்தபட்ச வைப்பாகப் பராமரிக்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்வாகும் 1000
பிள்ளைகளுக்கும் இப் புலமைப்பரிசில் வழங்கப்படும்.
இப் புலமைப்பரிசிலை வெல்ல "சிசு உதான" கணக்கில்
ரூ. 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை சேமியுங்கள்.
மக்கள் வங்கி
சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்
AA- Brand Finance Rating AA Fitch Rating
நீங்களும் மக்கள் வங்கியின் "சிசு உதான" கணக்கில் சேமியுங்கள்
சிரத்தையுடன் கல்வி கற்று பரிசு பெறுங்கள்.
*நிபந்தனைகளுக்குட்பட்டது
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk

QD/62/News/2012 எனும் இலக்கதின் கீழ் இலங்கை
அஞ்சல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தடங்கலின்றி வெளியிடப்பட்டு வரும் பொருளியல் நோக்கு, சமகால சமூக-பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் அழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான ஒரு பொது மன்றத்தை வழங்குகிறது. இவ்வேட்டின் அண்மைக்கால இதழ்கள் பின்வரும் முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியுள்ளன:

வரவு-செலவுத் திட்டம் - 2012: பொருளாதார வளர்ச்சி தொடர்பான கொள்கைப் பிரச்சினைகள்
ஆயுர்வேதம்
தரைப் போக்குவரத்து
புதிய உலக ஒழுங்கு
வங்கித் தொழில்
சுற்றுலாத்துறை
வரவு-செலவுத் திட்டம் - 2011

ஆர்வமுள்ள வாசகர்கள், இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக் காரியாலயத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தகசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட விற்பனைக்குண்டு.

சந்தா விபரம்: உள்நாடு -12 இதழ்கள் ரூபா 540/-
வெளிநாடு -12 இதழ்கள் அமெரிக்க டொலர் 50

உங்கள் சந்தாவை காசோலையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ அனுப்ப முடியும். வேண்டுகோள் கடிதமொன்றையும் அதனுடன் இணைத்து அனுப்புங்கள். எமது தலைமை அலுவலகத்தில் உள்ள விற்பனை நிலையத்தில் பணமாகவும் செலுத்த முடியும்.

காசோலைகள்/காசுக் கட்டளைகளில் **மக்கள் வங்கி - பொருளியல் நோக்கு** எனக் குறிப்பிட்டு, கீழுள்ள முகவரிக்கு அவை அனுப்பிவைக்கப்பட வேண்டும்

ஆராய்ச்சிப் பணிப்பாளர்,
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி தலைமை அலுவலகம்,
சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.

*தொலை பேசி: 011-2481429, 011-2436940*
*தொலை நகல்: 011-2543864*
*மின்னஞ்சல்:* ersales@peoplesbank.lk

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித் திட்டமாகும்

இது மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடாகும். பொருளியல் நோக்கு எனக் குறிப்பட்டு, இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள்காட்டவோ அல்லது மீளப்பிரசுரிக்கவோ முடியும்.

இதழ் இல: 0259/9779

பிரதி ஒன்றின் விலை : ரூபா 45/-